இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 88 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 10, புதன்கிழமை 22.02.2017

## புலிகளால் கொல்லப்பட்டோர் விவரம் கேட்டது மகிந்த அணி

கால அவகாசம் கோரியது அரசு

கொழும்பு, பெப். 22
1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பால் நடத் >> 28

## மேலும் நான்கு பேருக்கு யாழில் பன்றிக் காய்ச்சல்

***வடக்கில் பாதிப்புற்றோர் எண்ணிக்கை 11 ஆக உயர்வு***

யாழ்ப்பாணம், பெப். 22
பன்றிக் காய்ச்சலான என்1எச்1 வைரஸ் தொற்றினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் 4 பேர் பீடிக்கப்பட்டனர். இந்தத் தொற்று எண்ணிக்கை வடக்கில் 11 ஆக அதிகரித்தது. >> 28

# வழிக்கு வந்தது சுதந்திரக் கட்சி

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான இடைக்கால வரைவை ஆராய இணக்கம்

கொழும்பு, பெப்ரவரி 22

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிகளுக்கு இடையில் குழப்பத்தை - முட்டுக்கட்டையை ஏற்படுத்திய, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, நேற்றைய தினம் வழிக்குத் திரும்பியது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட இடைக்கால வரைவை வழிகாட்டல் குழுவில் ஆராய்வதற்கு அந்தக் கட்சி இணக்கம் வெளியிட்டுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக வழிநடத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் 49ஆவது கூட்டம், தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. வழிநடத்தல் குழுவின் கடந்த கூட்டத்தில் பங்கெடுக்காமல் தவிர்த்த, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் நேற்றைய கூட்டத்தில் பங்கெடுத்தி >> 27



## காணாமற்போனோரின் உறவுகள் நேற்றுக் கூடி ஐ.நா. செயலருக்கு மனு

கிளிநொச்சி, பெப். 22
காணாமற்போனோரின் உண்மை நிலவரத்தை வெளிப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுத்து நேற்று இரண்டாவது நாளாகவும் >> 04

## மாகாணங்களுக்கு அதியுச்ச அதிகாரம்

வழிநடத்தல் குழுவில் பங்கேற்கும் கட்சிகள் அனைத்தும் இணக்கம்

கொழும்பு, பெப்ரவரி 22
திய அரசமைப்பில் மாகாண சபைகளுக்கு அதியுச்ச அதிகாரங்கள் வழங் கப்படுவதற்கு வழிநடத்தல் குழுவின் சகல கட்சிகளும் இணங்கியுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசமைப்பு வழிநடத்தல் குழு நேற்றுக் கூடியது. >> 28

## புதுக்குடியிருப்பில் மக்கள் தொடர்ந்து உணவு ஒறுப்பு

சிவமோகன் எம்.பியும் போராட்டத்தில் இணைவு



முல்லைத்தீவு, பெப். 22
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டு வரும் அறவழிப் போராட்டமும், சுழற்சி >> 28

## 22 ஆவது நாள்

பிலக்குடியிருப்பு மக்களுக்கு மருத்துவ மாணவர்கள் ஆதரவு



>> 27


## வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குகின்றது அரசு

குற்றச்சாட்டை முன்வைக்கிறது மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, பெப். 22
பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு உட்பட முக்கிய மனித உரிமை விவகாரங்களில் வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து இலங்கை அரசதலை >> 04

## தடுப்புக் காவல் கொலை

## பொலிஸாரின் சித்திரவதைகளை மன்றில் செய்து காட்டினார் சாட்சி



யாழ்ப்பாணம், பெப். 22
சுன்னாகம் பொலிஸில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது உயிரிழந்த சுமணனை இரு கைகளையும் கால்களுடன் இணைத்துக் கட்டி, இரண்டு மேசைகளுக்கு இடையே கட்டித் தூக்கி உயிரிழக்கும் வரையில் அடித்தார்கள். உயிரிழந்த பின்னரும் அவர்கள் அடிப்பதை நிறுத்தவில்லை. >> 04

## மனித சித்திரவதை போர்க்குற்றமாகும்

எதிரி தரப்பு ஆட்சேபனையை நிராகரித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கட்டளை

யாழ்ப்பாணம், பெப். 22
சித்திரவதை போர்க்குற்றமாகும். அது மனித குலத்துக்கு எதிரான குற்றமாகும். சித்திரவதைக்கு உள்ளான நபர் உயிருடன் இல்லாவிட்டால் வழக்கை நடத்த முடியாதென்றால், சித்திரவதைக்கு உள்ளான நபரை கொலை செய்துவிட்டு வழக்கில்லாது தப்பித்து விடுவர். இவ்வாறு மன்றில் எடுத்துரைத்த >> 04

## வவுனியா வளாகத்தைத் தரமுயர்த்தி வன்னிப் பல்கலைக்கழகம் ஆக்குக

வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், பெப். 22
வவுனியாவிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை வன்னி பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தக் கோரி வடக்கு மாகாண >> 28

## புளொட், ஈபிஆர்எல்எவ் இரண்டும் வெளியே வந்துதான் ஆகவேண்டும்

மீண்டும் வலியுறுத்துகிறார் க.குமார்

யாழ்ப்பாணம், பெப். 22
இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருக்காமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து, முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் வெளியே வரவேண்டும். இவ்வாறு ஏற்கனவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் >> 28

## கூட்டமைப்புடன் மக்கள் இல்லை எனக் காட்டவே நடத்தப்பட்டது எழுக தமிழ்

அம்பலத்துக்கு வந்தது உள்நோக்கம்

யாழ்ப்பாணம், பெப். 22
மக்கள் கூட்டமைப்புடன் இல்லை என்பதைக் காண்பிப்பதற்கு எழுக தமிழ் நிகழ்வு நடத்தினோம். >> 28

## ரவிராஜ் எம்.பி. படுகொலை

## சீராய்வு மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்தது மேன்முறையீட்டு நீதிமன்றம்

பிரதிவாதிகளுக்கும் அழைப்புக் கட்டளை

கொழும்பு, பெப். 22
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பாக, கொழும்பு மேல் நீதிமன்றம் வழங் கிய தீர்ப்புக்கு எதிராக, திருமதி சசிகலா ரவிராஜ் தாக்கல் செய்த சீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் >> 28



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மத்திய வங்கி மோசடி

# விசாரணையை ஆரம்பித்தது ஆணைக்குழு

மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடியை விசாரணை செய்யும் முகமாக நிய மிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக் குழு நேற்றுத் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித் த்து.

இந்தக் குழுவின் முதல் விசாரணை யாளராக மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி அழைக் கப்பட்டு அவரது வாக்கு மூலம் பதியப்பட்டது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் வழிகாட்டலில் ஆயிரத்து 200மில் லியன் ரூபா பெறுமதியான பிணை முறிகள் சட்ட விரோதமான முறை யில் பேர்ச்சுவல் நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட்டதாகக் குற்றச் சாட்டு முன்வைக்கப் பட்டது.

இந்த மோசடி தொடர்பில் விசா ரணை மேற்கொண்ட ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழு, மோசடி இடம்பெற்றுள்ளமை ஆதாரபூர்வமாக நிரூபிக் கப்பட் டுள்ளதாகக் கூறி அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன் றில் சமர்ப்பித்தது. முன்னாள் மத்திய வங்கி ஆளுநரே இந்த மோச டிக்கு முழுப் பொறுப்பு என்றும் அறிக்கை யில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை சட்டமா அதிபருக் கும் அனுப்பட்டிருந் தது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு கூறிவந்தபோதும் எவ்வித நடவடிக்கையும் இடம்பெற வில்லை. இந்த நிலையில் அரச தலைவர் மூவர் அடங்கிய ஆணைக்குழு வொன்றை நியமித்தார். அதில் நீதித் துறையில் பாண்டித்தியம் பெற்ற கே.டி. சில்வா, பிர சன்ன ஜயவர்த்தன ஆகியோருடன் முன்னாள் கணக் காளர் நாயகம் வேலாயுதம் தம்பிப்பிள்ளையும் நியமிக்கப்பட்டார். (த-4)

# தமிழர் பிரச்சினைகள் குறித்து வொஷிங்டனுக்கு சிறப்பு அறிக்கை

## அமெரிக்கக் காங்கிரஸ் குழு சம்பந்தனிடம் நேற்று உறுதி

கொழும்பு, பெப். 22



இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இங்கு நாம் அவதானித்த விடயங்களை சிறப்பு அறிக்கையாக வொஷிங்டனுக்கு முன்வைப்போம்.

இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்றுத் தெரிவித்தனர்.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு கொழும்புக்கு வருகை தந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் குழு உறுப்பினர்கள் நாடாளு மன்றில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத் தினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அமெரிக்க காங்கிரஸ் குழுவினருடனான சந்திப்பு மிகவும் சுமுகமா னதாக இருந்தது. பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்து ரையாடிருந்தோம். ஆட்சி மாற்றத்தின் பின்னர் நிரந்தரமானதொரு அரசியல் தீர்வை அடிப்படையாகக் கொண்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிரந்தர அரசியல் தீர்வுக்கான கட்டாயம், அவசியம் என்பன குறித்து குறிப்பிட்டேன். நிரந்தர அரசியல் தீர்வை அடைவதற்கான பயணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மந்த நிலைமை குறித்தும் அவர்களிடத்தில் குறிப்பிட்டேன். அந்த மந்த நிலைமை போக்கப்படவேண்டும். அதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் தனது கரிசனையை செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டும். காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டங்கள் இடம்பெறுகின்றன. மக்களுடைய காணிகள் அனைத்தும் விடுவிக் கப்பட வேண்டும். காணாமற்போனவர்கள், அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை. அவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். ஆகவே, அத்தரப்பினரின் விடயத்துக் குத் தீர்வு வழங்கப்படவேண்டும் என்பதை கொழும்பு அரசிடம் அமெரிக்காவை வலியுறுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

கடந்தகால, சமகால விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டதோடு எனது கருத்துக்கள் அனைத்தையும் அவர்கள் அவதானமாக செவிமடுத்திருந்தனர்.

சந்திப்பின் இறுதியில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நான் தெரிவித்த கருத்துக்கள் உட்பட இலங்கைப் பயணத்தில் தமது அவதானம் குறித்த விடயங்கள் அடங்கிய முழுமையான அறிக்கையை வொஷிங்டனில் முன்வைப்போம் என்று அவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்- என்றார். வ-4)



# சீன உதவி அமைச்சர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, பெப். 22

இலங்கைக்குத் திடீர்ப் பயணம் மேற்கொண்டுள்ள சீனாவின் உதவி அயலுற வுத்துறை அமைச்சர் லியூ ஜியான்சாவோ, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் முக்கியத் துவம் வாய்ந்த விவகாரங் கள் குறித்துப் பேசப்பட்ட தாக, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில், தலைமை அமைச்சருடன், அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் அதிகாரிகளும், சீன உதவி அமைச்சருடன், இலங் கைக்கான சீனத் தூதுவர் மற்றும் அதிகாரிகளும் பங்கேற்றனர். (த-5)

# ராணுவப் பிடிக்குள் உள்ளாரா மைத்திரி ?

## நாடாளுமன்றில் நேற்று கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, பெப். 22



பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன படையினருக்கு உத்தர விடுவதற்கு மறுப்பது ஏன்? அவர் இராணுவப் பிடிக் குள் இருக்கின்றாரா?' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப் பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஏற்றுமதி அபி விருத்தி சட்டத்தின்கீழான கட்டளைகளை அங்கீகரிப் பது தொடர்பான விவாதத் தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

போர் முடிவடைந்து 8 வரு டங்களாகியும் தமிழ் மக்க ளின் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வுகள் காணப் படவில்லை. தற்போதுகூடப் பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளைக் கோரி தொடர் போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர். மக்க ளின் கோரிக்கை நியாய மானதாகவே இருக்கின் றது. அமெரிக்கப் பிரதிநிதி களும் இந்தச் சபையில் இருக்கையில் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தமிழ் அரசியல் கைதிகளும் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உற வினர்களைப் படையினரி டம் ஒப்படைத்த காணாமற் போனவர்களின் உறவினர் களும் நீதி கோரி ஆர்ப் பாட்டத்தில் இறங்கியுள்ள னர். இவர்களுக்குப் பதிலை வழங்குவதற்குத் தொடர்ச் சியாக மறுக்கப்பட்டு வரு கின்றது. வடக்கு - கிழக்கில் பெரும்பாலான பகுதிகள் இராணுவப் பிடிக்குள் இருக் கின்றன. மக்களுக்குச் சம மாக இராணுவ முகாம்கள் இருக்கின்றன.

பிலக்குடியிருப்பு விடயத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் அரச தலைவர் படையினருக்கு உத்தர விடமுடியும். அவ்வாறு செய்வதற்கு அவர் பின் வாங்குகின்றார். இது ஏன் அரச தலைவர் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக் கின்றாரா? இல்லை இரா ணுவம் சொல்வதைக் கேட் கின்றாரா? எனவே, இந்த விடயத்தில் அரச தலைவர் மைத்திரி, தலைமை அமைச்சர் ஆகியோர் உடனடியாகத் தலையிட்டு பிரச்சினைக்குத் தீர்வை வழங்க வேண்டும் - என் றார். (த-5)

# வறட்சிக்கு உதவிப் பொருள்கள் அனுப்புகிறது புதுடில்லி அரசு

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இலங் கைக்கு 100 மெற் றிக் தொன் அரிசியையும், 8 நீர்த் தாங்கிகளையும் உடனடி உதவியாக வழங்குவதாக இந்தியா அறி வித்தது.

கொழும்புக்குப் பயணம் மேற்கொண் டிருந்த இந்திய அயலுறவுச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், நேற்று கொழும்பு அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு அயலுறவு அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. (வ-5)

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் வடக்கில் தற்காலிக நிறுத்தம்

## அவைத் தலைவர் நேற்று சபையில் அறிவிப்பு

யாழ்ப்பாணம் பெப் 22

வடக்கு மாகாணத்தில் வழங்கப்படவிருந்த பட்டதாரி ஆசிரி யர்கள் நியமனத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் எதிர்வரும் முதலாம் திகதி வழங்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக ஆராயப்பட்டது. அதில் வடக்கு மாகா ணத்தில் நிலவும் 849 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நடத் தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 779 பேர் சித்தியடைந் துள்ளனர் என்றும், பாட ரீதியிலான வகையில் 559 பேருக்கே நியமனம் வழங்கப்படவுள்ளது என்றும் அவைத் தலைவரும் சக உறுப்பினர்களும் சபையில் தெரிவித்த னர்.

இதன் மூலம் மூலம் பரீட்சையில் சித்தியடைந்த 220 பேருக்கு நியமனங்கள் கிடைக்காது. புவியியல் போன்ற சில பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு மேலதிகமானோர் சித்தியடைந்துள்ளனர். சில பாடங்களுக்கான வெற்றிடங் கள் நிரப்பப்படாது போகும் சூழ்நிலையும் காணப்படுகின்றது எனவே போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த சிலருக்கு நியம னம் வழங்கிச் சிலருக்கு வழங்காமலிருப்பது பாகுபாடாக அமையலாம். முழுமையான வெற்றிடங்களைக் கூடுத லான வரை நிரப்பிச் சித்தியடைந்த எல்லோருக்கும் நியம னம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவைத் தலை வரால் சபையில் வலியுறுத்தப்பட்டது. அதனை உறுப்பினர் களும் ஏற்றுக்கொண்டனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி இடம்பெறவுள்ள கல்வியமைச்சின் அமைச்சு மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கும் வரை இந்த நியமனத்தைத் தற்காலிக மாக இடைநிறுத்துவதாக அவைத் தலைவரால் சபையில் அறிவிக்கப்பட்டது. (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரநேசனை பதவி நீக்குங்கள்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் சபையில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம் பெப் 22
வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சர் பதவி யிலிருந்து ஐங்கர நேசனை விலக்குவது தொடர்பில் மாகாண சபை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் அவைத் தலைவர் பொதுமக்கள் முறைப்பாட்டுக்குழுவின்அறிக்கை விவரங்களை அறிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டக் கிராமிய வங்கிகளின் சமாசம் சிமெந்து விற்பனையில் 27 இலட்சம் ரூபா மோசடி செய்துள்ளது. எனினும் எந்த நடவடிக்கைகளும் இன்று வரை எடுக்கப்படவில்லை என்பதைச் சபையில் அவைத் தலைவர் கூறி னார்.

இதன்போது கருத்துக்களை முன்வைக்கும் போதே சுகிர்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவு அமைச்சர் பதவிக்கு ஐங்கரநேசன் பொருத்தமற்றவர் என்பதைப் பல தடவைகள் நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். கூட்டுறவில் தொடர்ச்சியாக ஊழல் நடந்து கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. தொடர்ந்து ஊழல் நடக்கிறது என்று இந்தச் சபையில் தெரிவித்துக் கொண்டிருப்பதைவிடுத்து அதற்குப் பொருத்தமான அமைச்சர் ஒருவரை நியமிப்பதே சிறந்தது. ஆகவே இது தொடர்பாகச் சபை உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்- என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம்,

கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வாறான மோசடிகள் நடக்கும்போது அவை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் சாதாரண குற்றப் பிரிவிடம் முறையிடாமல் சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறையிட்டால் அவர்கள் விரைந்து நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஆகவே ஏன் சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாறு முறையிட பின்னடிக்கின்றனர்- என்றார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம், கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற ஊழல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கச் சொல்லிக் கடந்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி கடிதம் ஒன்றை வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சருக்கு அனுப்பியிருந்தேன். எனினும் இன்றுவரை அது தொடர்பாக ஐங்கரநேசன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நிலமை தொடருமானால் மற்றைய மாகாணங்களுக்கு எடுத்துக்காட்டாக வடக்கு மாகாண சபைக்கு எனச் சில நடவடிக்கைகளை எடுப்பேன். தொடர்ச்சியாக ஊழல்கள் நடந்து கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது. எனவே இதனைஉணர்ந்துஅனைவரும் செயற்பட வேண்டும்-என்றார். (த-8)

# உயிராபத்தை எதிர்கொள்வோரை ஏற்க இலங்கையுடன் உடன்பாடு வேண்டும்

## உலக நாடுகளை வலியுறுத்துகிறது பன்னாட்டு மன்னிப்புச் சபை

கொழும்பு, பெப். 22
இலங்கையில் நிலைமாற்று நீதிப் பொறிமுறைகளில் பங்கு கொள்வதன் காரணமாகக் கடும் உயிராபத்தை எதிர்கொள்பவர்களை தத்தமது நாடுகளுக்கு அழைப்பது குறித்து உலக நாடுகள் இலங்கையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு பன்னாட்டு மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மன்னிப்புச் சபை இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

பன்னாட்டுத் தராதரத்திலான நீதி, உண்மை மற்றும் நட்டஈடு தொடர்பான பொறிமுறைகள் ஏற்படுத்தப்படுவதற்கும், சட்ட சீர்திருத்தங்களுக்கும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கைக்குத் தொழில் நுட்பமற்றும்நிதிஉதவிகளை ஐ.நா. வழங்க வேண்டும்.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமையுண்டு என்பதைப் பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். ஏற்படுத்தப்படும் சகல பொறிமுறைகளும் நீதி, உண்மை, நட்டஈடு மற்றும் மீள நிகழாமை குறித்த உத்தரவாதம் ஆகியவற்றைச் சிறப்பாக வழங்கும் விதத்திலான வகையில் தகவல்களை ஒருங்கிணைத்துப் பரிமாறவேண்டும்.

பன்னாட்டுச் சமூகம் சுயாதீன வலுவான, பன்னாட்டுத் தரத்திலான பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குவதற்கு இலங்கை அரசுக்கு உதவவேண்டும்.

பொலிஸ் மற்றும் இராணுவத்தில் உள்ளவர்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடாமலிருப்பதை உறுதி செய்வதற்கும், அவ்வாறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்குமான கடுமையான வழிமுறைகளை இலங்கை உருவாக்குவதற்கும் பன்னாட்டுச் சமூகம் உதவி புரிய வேண்டும்.

பன்னாட்டுச் சட்டங்களின் கீழ் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் அல்லது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை விசாரணைகளுக்கு உட்படுத்துவதற்கான முயற்சிகளுக்குப் பன்னாட்டுச் சமூகம் ஒத்துழைப்பையும் பரஸ்பர சட்ட உதவியையும் வழங்கவேண்டும் என்று மன்னிப்புச் சபை கேட்டுள்ளது. (த-5)

# இணைச் சுகாதார அலுவலர் இன்று பணிப் புறக்கணிப்பு

கொழும்பு, பெப் 22
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச இணைச் சுகாதார உத்தியோகத்தர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதுடன், பாதயாத்திரையொன்றையும் நடத்தவுள்ளனர்.

நீண்டகாலமாக நிலவி வரும்தமது பிரச்சினைகள் பற்றிச் சுகாதார அமைச்சருடன் பல தடவைகள் பேச்சுகளை நடத்தியபோதிலும் இதுவரை எந்தவித தீர்வும் கிடைக்காதமையால் இந்த முடிவுக்கு வந்ததாக இணைச் சுகாதார உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் அஜித் திலகரத்ன தெரி வித்தார்.

இன்று காலை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் முன்னால் ஆரம்பமாகவுள்ள பாதயாத்திரை டீன்ஸ் வீதியிலுள்ள சுகாதார அமைச்சு வரை தொடரவுள்ளது எனவும் அவர் கூறினார். (த)

# யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று ஆயிரத்தை தாண்டியது

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயாளர் எண்ணிக்கை சடுதியாகஅதிகரித்தவண்ணமுள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் ஆயிரத்து 56 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங் காணப்பட்டவர்களின் இரத்த மாதிரிகள் உறுதிப்படுத்தல்களுக்காகஅனுப்பிவைக்கப்பட்டன. அவ்வாறு அனுப்பிய நோயாளர்களில் இதுவரை அதிகமானவர்களின் பரிசோதனைச் சான்றுகள் கிடைத்துள்ளபோதிலும் சில இன்னும் கிடைக்கவில்லை. இவ்வாறு கிடைக்கப் பெற்றவற்றில் இருந்து 860 பேருக்கு டெங்கு நோய் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இனம் காணப்பட்டவர்களில் அதிகம் பேர் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிலும் இரண்டாம் நிலையாகச் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ளனர். மூன்றாம் நிலையில் உடுவில் பிரதேசம் உள்ளது. டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்-என்றார். (த-4-101)

# ரோஹண விஜேவீர வீடு அரசுடைமையானது எப்படி?

## சபையில் ஜே.வி.பி. கேள்வி

கொழும்பு, பெப். 22
உலப்பனையிலுள்ள ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் வீட்டை அரசு எந்த அடிப்படையில் அரசுடைமையாக்கித் தொழிற்பயிற்சி நிலையம் நடத்தி வருகின்றது? என்று ஜே.வி.பியின் தற்போதைய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளிப்பதிலிருந்து அரசு நழுவியது.

நாடாளுமன்றம் நேற்று பி.ப. ஒரு மணிக் குச் சபாயநாயகர் கரு ஜயசூரிய தலைமை யில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி - பதில் நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, உலப்பனையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் முன் னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் வீட்டில் இயங்கி வரும் தொழிற்பயிற்சிக் கல்லூரி வேறு இடத்துக்கு மாற்றும் யோசனை அரசுக்கு உள்ளதா? என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளா தார அலுவல்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

'ரோஹண விஜேவீரவின் இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள குறித்த தொழிற் பயிற்சிக் கல்லூரியில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயன்பெற்று வருவதால் அதனை மாற்றும் யோசனை அரசுக்கு இல்லை என்று தேசிய கொள் கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் நிரோன் பெரேரா தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் ரோஹண விஜேவீரவின் வீட்டில் தொழிற் பயிற்சி நிலையமொன்றை அமைத் துள்ளதாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வாறாயின் குறித்த வீட்டை எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அரசு அரசுடைமையாக்கியது? இதற்கான இழப்பீடு அவரது குடும்பத்துக்கு அல்லது வேறு தரப்புக்குக் கொடுக்கப்பட் டுள்ளதா? என்று வின வினார்.

அதற்கு, 'இந்த விடயம் குறித்து எனக்கு மேலதிக தகவல்கள் ஏதும் தெரியாது. மகிந்தானந்த அளுத்கமகேயின் கேள் விக்குப் பதில் அளிக்கவே நான் தயா ராகி வந்தேன். இவர் எழுப்பும் கேள் விக்கு என்னால் பதில் அளிக்க முடியாது. நான் தயார் இல்லை' என்றவாறு கேள்விக்குப் பதில் அளிக்காது நழுவி னார் இராஜாங்க அமைச்சர் நிரோன் பெரேரா. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு இடங்களில் சிக்கியது கஞ்சா

## மன்னாரில் கைதானார் ஒருவர்

தலைமன்னாரில் இருவேறு இடங்களிலிருந்து சுமார் 40 கிலோ கிராம் நிறையு டைய கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்த குற் றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

கொழும்புக்குத் தனியார் பேருந்தில் கடத்தப்பட்ட 2 கிலோ கிராம் கஞ்சா உள்ளிட்டவையேநேற்றுமுன்தினமிரவு கடத்தப்பட்டதாகப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. தலைமன்னாரில் இருந்து மன்னார் ஊடாகக் கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11 மணி யளவில்பயணிகளுடன்பயணித்த தனியார் பேருந்து மன்னார் தாராபுரம் வீதியில் பேசாலை பகுதியில் இடை மறித்துச் சோதனையிடப்பட்டது. அதன் போது கொழும்புக்குப் பயணித்த ஒருவரின் உடைமையிலிருந்து சுமார் 2 கிலோ கிராம் கேரள கஞ் சாப்பொதி மீட்கப்பட்டது. மன்னார் பேசாலை பகுதியைச்சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலிருந்து அவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்த 38 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அவர் தொடர் விசாரணையிலுள்ளார்.

அண்மையில் தலைமன்னார் மன்னார் முதன்மை வீதியில் 35 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. சில தினங்களின் பின்னர் மன்னார்- பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றும் தென் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி, தான் மீட்டிருந்த கஞ்சாப் போதைப் பொதியை விடுமுறையில் தன்னுடன் எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர் தலைமன்னார் பிரதான வீதியில் 110 கிலோ கிராம் எடை கொண்ட சுமார் ஒரு கோடி 10 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகள் அண்மையில் மீட்கப்பட்டன. நேற்று முன்தினம் பூநகரிப் பொலிஸ் தங்கும் விடுதியின் முன்பாகக் கஞ்சாப் பொதி மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4-56)



# தமிழீழத்தின் உருவில் மெய்வன்மை இல்லம்

கிளிநொச்சி பெப். 22

பளை மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியின் போது, தமிழீழ வரைபட அமைப்பில் இல்லம் ஒன்று அலங்கரிக் கப்பட்டமை தொடர்பாக, பாடசாலை நிர்வாகத்திடம் பொலிஸா ரும் புல னாய்வுப் பிரிவினரும் >> 28

# மக்கள் பிரதிநிதிகளின் அழுத்தங்கள் போதாது

*பரவிப்பாஞ்சானில் குற்றச்சாட்டு*

எங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் அழுத்தம் போதாது. இதனாலேயே எங்களின் நிலங்களை நாம் மீட்க முடியாமல் போராட்டங்களைத் தொடர வேண்டியிருக்கின்றது.

இவ்வாறு பரவிப்பாஞ்சானில் இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பரவி பாஞ்சானில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாது உள்ள 9.5 ஏக்கர் காணிக்குச் சொந்தமான 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சுழற்சி முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகின் றனர். இதற்கு முன்னரும் இரு தடவைகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது வழங்கப்பட்ட வாக்குறுதிகளைத் தொடர்ந்து போராட்டங்களைமக்கள்கைவிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பரவிப்பாஞ்சான் மக்களும் தங்களது நில விடுவிப்புக்கான தொடர் போராட்டத்தில் குதித்தனர்.

இந்தத் தடவை எந்தவொரு வாக்குறுதிகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்று தெரிவித்துள்ள மக்கள், உறுதியான முடிவாக தமது காணி விடுவிப்புத்தான் அமைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர். (து-5-6)

# வயோதிபரின் சடலம் வயல் வெளியில் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் தனங்களப்பு வயல் வெளிப்பகுதியில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மாலையில் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த கந்தையா திருநாவுக்கரசு (வயது - 83) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சாவகச்சேரியில் இருந்து தனங்களப்புப் பகுதியில் உள்ள தனது வயலைப் பார்வையிடுவதற்காக நேற்றுக் காலையில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றவர் மாலை வரையில் வீடு திரும்பவில்லை. இந்த நிலையில் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றுள்ளனர். இவ்வாறு தேடிச் சென்ற சமயமே அவர் வயல் வெளிப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் சடலத்தை மீட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-101-9)

## காணாமற் போனாரின்...

போராட்டத்தை முன்னெடுத்துள்ள மக்கள், ஐ.நா. பொதுச் செயலருக்கான மனுவையும் அனுப்பி வைத்துள்ளனர்.

காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை, கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக தமது கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்றைய தினம் இரண்டாவது நாளாகவும் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் விடயத்தில் பொறுப்புக் கூறுவதற்கு இனியும் காலதாமதம் வேண்டாம். பொறுப்புக் கூறுவதற்கு இலங்கை அரசு காலம் தாழ்த்தி வருகின்றது. இந்த இழுத்தடிப்புக்குக் கூட்டமைப்பு இணங்கியுள்ளதாகத் தகவல்கள் வருகின்றன. எங்களின் உணர்வுகளுக்குப் புறம்பாகக் கூட்டமைப்புச் செயற்படக் கூடாது. காணாமற்போனோரின் உண்மை நிலைமை வெளிப்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று அந்த மக்கள் தெரிவித்தனர்.

ஐ.நா. அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கோரும் மனு ஐ.நா. பொதுச் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த மனுவை, கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள ஐ.நா. உலக உணவுத் திட்ட அலுவலகத்தில் ஒப்படைத்தனர். (து-5-6-35)

## வாக்குறுதிகளில்...

வர்கள் பின்வாங்குகின்றனர் போல் தோன்றுகின்றது.

இவ்வாறு பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் சபையின் அமர் வுக்கு முன்னதாக விடுத் துள்ள அறிக்கையிலேயே பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளது.

மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாத அமர்வுக்கு முன்னதாக வாக்குறுதியளித்தபடி இலங்கை அரசு, பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு மற்றும் பொலிஸாரின் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்குத் தவறியுள்ளது. இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தவறியுள்ளதுடன் சிறைகளில் சித்திரவதைகளைக் கட்டுப்படுத்தவும் தவறியுள்ளது.

இலங்கை அரசானது பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தம் மற்றும் நிலைமாற்று நீதி தொடர்பான தனது வாக்குறுதிகளில் முன்னேற்றத்தைக் காண்பித்துள்ளதா என்பது குறித்து உன்னிப்பாக ஆராயவேண்டியது அவசியமாகும். முக்கியமான வாக்குறுதிகளை வழங்கி 18 மாதத்துக்குப் பின்னர் இலங்கையின் அரச தலைவர்கள் பொலிஸ் சீர்திருத்தம் உட்பட முக்கிய மனித உரிமைகள் விவகாரங்களில் பின்வாங்குகின்றனர் போல் தோன்றுகின்றது.

2016 இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பலர் மீது பயங்கரவாதச் சதி முயற்சிகளில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அவர்கள் மீது பல வருடங்களுக்கு முன்னர் நீக்கப்பட்டிருக்கவேண்டிய -துஷ்பிர யோகத்துக்கு வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டைச் சுமத்துவதை விடச் சாதாரண சட்டங்களின் கீழ் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கலாம்.

2016 இல் மே மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. சித்திரவதைகள் குறித்த சிறப்பு அறிக்கையாளர், இலங்கையில் சித்திரவதைகள் தொடர்வதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்திருந்தார். பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் விசாரணைகளின் போது சிறிய குற்றங்கள் குறித்த விசாரணைகளிலும் பொலிஸார் சித்திரவதைகளைப் பயன்படுத்துவது தெரியவந்தது என்றுள்ளது. (து-5)

## பொலிஸாரின்...

இவ்வாறு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் உடல்மொழியில் செய்து காண்பித்து சாட்சி சாட்சியமளித்தார்.

2011ஆம் ஆண்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை சித்திரவதைக்குட்படுத்திய குற்றச்சாட்டுவழக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் இடம்பெற்று வருகிறது. இந்த வழக்கின் சாட்சியப் பதிவுகள் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முக்கிய சாட்சியான இராசதுரை சுரேஸ் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

'மாவீரர் தினம் கொண்டாடியதாக எம்மீது குற்றஞ்சாட்டிச் சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். படுகொலை செய்யப் பட்ட சுமணனையும் மற்றும் என்னையும் பொலிஸார் ஒரே அறையில் அடைத்து வைத்தனர். சுமணனை முழங்காலில் இருத்தி கால்களுடன் கைகளைச் சேர்த்துவைத்து கட்டினர். பின்னர் இரண்டு மேசைகளுக்கு இடையில் சுமணனைக் கட்டித் தொங்கவிட்டு அடித்தார்கள்.

தான் மருந்து பாவிப்பதாகவும் அடிக்க வேண்டாம் என்றும் சுமணன் கேட்டபோதும் பொலிஸார் அதனைக் கருத்திலெடுக்காது அடித்துச் சித்திரவதை செய்தனர். சுமணன் கைகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் எப்படி இருந்தார் என்பதை சாட்சி நீதிபதிக்கு தனது உடல் மொழியில் செய்து காண்பித்திருந்தார். அவ்வாறு அடிக்கும்போது சுமணன் இறந்துவிட்டார். சுமணனின் மூக்கால் குருதி வந்து கொண்டிருந்தது. சுமணனின் உடலில் அசைவு மூச்சுப் பேச்சு எதுவும் இருக்கவில்லை. ஆனாலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்ந்து அடித்தார்கள்.

எனக்கு ஆணிகளைக் காலில் இறுக்கி மின்சார கம்பியால் சுட்டார்கள். எனது ஆணுறுப்பை குறட்டால் நசித்தார்கள். இவற்றைச் செய்த பின்னர் சுமணனது உடலை சுன்னாகம் பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் நின்ற புதிய ஜீப்பில் ஏற்றிக்கொண்டு போனார்கள் - என்றார்.

'உமக்கும் சுமணனுக்கும் அடித்துச் சித்திரவதை செய்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் யார் யார் என்பதை அடையாளம் காட்ட முடியுமா?' என்று பிரதி மன்றாடியார் குமார்ரட்ணம் கேட்டார். அதற்கு சாட்சி, எதிரிக் கூண்டில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை முறையே அவர்கள் என்ன என்ன செய்தார்கள் என்று கூறினார். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தற்போது நீதிமன்றில் இல்லை என்றார். அதனைத் தொடர்ந்து அவரது சாட்சியங்களும் எதிர் தரப்பு சட்டத்தரணிகளால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டன.

இந்த வழக்கில் இரண்டாவது சாட்சியாக துரைராசா லோகேஸ்வரன் சாட்சியமளித்தார். 'புன்னாலைகட்டுவன் சித்தி விநாயகர் பாடசாலையில் கற்கும் பெற்றோரையிழந்த, போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு 2011ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் திகதி புத்தகப்பைகளை வழங்கினோம். அங்கு வந்த ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த பிரசாத் என்பவர் நீங்கள் மாவீரர் நிகழ்வா கொண்டாடுகிறீர்கள் என்று கேட்டார். இல்லையென்றோம்.

அன்றிரவு எனது வீட்டுக்கு வந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சிந்திக்க பண்டார, மயூரன், பிரசாந் ஆகியோர் என்னைக் கைது செய்துகொண்டு சென்றனர். திருட்டு குற்றச்சாட்டுச் சுமத்தினர்.

2011ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி சுமணன் என்பவரை சிந்திக்க பண்டார, மயூரன் ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்து காலை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். சுமணனது நெற்றிப் பகுதியில் குருதி வடிந்து கொண்டிருந்தது. தனிநாடு வேண்டுமா? என்று கேட்டு கேட்டு எம்மை அடித்து எமக்கு மின்சார கம்பியினால் சூடுவைத்தனர்' என்று சாட்சியமளித்தார்.

'உங்களையும் சுமணனையும் கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தர்களை அடையாளம் காட்ட முடியுமா என்று அரச தரப்பு விசாரணையில் வினவியபோது, சாட்சிக் கூண்டில் நின்றவாறு அடையாளம் காட்டி எதிரிகளில் இருவரது பெயர்களைச் சரியாக குறிப்பிட்டிருந்தார்.

அதன்பின்னர் அவரது சாட்சியம் எதிரி தரப்பு சட்டத்தரணிகளால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது. அதன் பின்னர் 6ஆம் மற்றும் 8ஆம் சாட்சிகளின் சாட்சியங்கள் மன்றில் பதிவு செய்யப்பட்டன.

### புதிய சாட்சியம்

இந்த வழக்கை நெறிப்படுத்தும் பிரதி மன்றாடியார் குமார் ரட்ணம் இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையில் 30ஆம் 31ஆம் 32ஆம் சாட்சிகளாக மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு மன்றின் அனுமதியைக் கோரியதோடு, வழக்கின் சாட்சியில் இருந்து 2ஆம் 4ஆம் 5ஆம் சாட்சிகளை நீக்குவதற்கான அனுமதியையும் கோரியிருந்தார். அவற்றுக்கு நீதிமன்று அனுமதியளித்தது. இந்த வழக்கின் சாட்சியப் பதிவுகள் எதிர்வரும் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. சந்தேக நபர்களான பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டது.

### பின்னணி

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிஸ் கந்தராஜா சுமணன், சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பில் வைத்துக் கொடூரமாகச் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டார். எனினும் அவர் இரணைமடுக் குளத்தில் தற்கொலை செய்ததாகப் பொலிஸார் குற்றஞ்சாட்டி அவரது கொலையை மூடி மறைத்தனர் என்று அவருடன் கைது செய்யப்பட்டிருந்தவர்கள் மல்லாகம் நீதிமன்றில் கடந்த வருடம் தெரிவித்திருந்தனர்.

அதனை அடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 8 பொலிஸார் உத்தியோகத்தர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்களில் 5 பேர் மீது கொலைக் குற்றஞ்சாட்டும் 8 பேர் மீது சித்திரவதைக் குற்றச்சாட்டும் பதிவு செய்யப்பட்டது. 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் வெளிநாட்டில் வசிப்பதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. (வ-4,37,101)

## மனித...

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன், எதிரிகள் தரப்பு சட்டத்தரணியின் ஆட்சேபனையை நிராகரித்து பொலிஸாருக்கு எதிரான வழக்கு விசாரணையைத் தொடரக் கட்டளையிட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத் தடுப்பில் வைத்து சுமணன் என்ற இளைஞன் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். ஆனால் சுன்னாகம் பொலிஸாரிடமிருந்து தப்பிச் சென்று இரணைமடுக் குளத்தில் குதித்துத் அந்த இளைஞன் தற்கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும் சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் பொய் கூறி சித்திரவதைக் கொலை புரிந்ததாக அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அதன் பின்னரான விசாரணைகளின்போது இதுவரை 7 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் புரிந்ததான சித்திரவதை வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

'குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் நிலையத்தில் முறையிடவோ இல்லை அவரால் இந்த வழக்கைத் தொடுக்கவில்லை. அவர் தற்போது இல்லை. பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்ற சாட்சி இருந்தாலேயே அவரை எதிரி தரப்புச் சட்டத்தரணிகள் குறுக்கு விசாரணை செய்ய முடியும். அப்போதுதான் குற்றத்தின் உண்மைத் தன்மை மன்றுக்கு தெரியவரும். இந்த வழக்கில் அவ்வாறானதொரு சந்தர்ப்பம் இல்லை என்று எதிரி தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார்.

வழக்கினை நெறிப்படுத்தும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி மன்றாடியார் பி. குமாரட்ணம், 'சுமணனது உடலில் 20 இற்கும் மேற்பட்ட காயங்கள் உள்ளன. அவர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார் என்று சுமணனது இறப்பு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த வழக்கை நடத்தமுடியும் - என்றார்..

### போர்க்குற்றம்

சித்திரவதை என்பது போர்க்குற்றம். அது மனித குலத்துக்கு எதிரான குற்றம் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

'சித்திரவதை வழக்கைப், பாதிக்கப்பட்டவரது உறவினர், பாதுகாவலர் ஆகியோரது முறைப்பாடுகளின் அடிப்படையிலும் நடத்தமுடியும். சித்திரவதைக்கு உள்ளான நபர் உயிருடன் இல்லாவிட்டால் வழக்கை நடத்த முடியாதென்றால் சித்திரவதைக்கு உள்ளான நபரை கொலை செய்துவிட்டால் வழக்கே இல்லாமல் தப்பித்துவிடலாம் என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்று உயர் நீதிமன்ற நீதியரசரின் தீர்ப்பையும் மேல்கோள்காட்டி மேல் நீதிமன்ற நீதிபதி மன்றில் எடுத்துரைத்தார். இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு அனுமதியளிக்கும் வகையில் எதிரி தரப்புச் சட்டத்தரணியின் ஆட்சேபனை விண்ணப்பத்தையும் நீதிபதி நிராகரித்தார்.

இந்த வழக்கு அடுத்த விசாரணைக்காக எதிர்வரும் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.21
கோண்டாவில் கிழக்கு பொற்பதி ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. தேர்த்திருவிழா மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# அமெரிக்கப் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகை

அமெரிக்காவின் விசேட பிரதிநிதிகள் குழுவொன்று இருநாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்குவருகை தந்துள்ளது. அமெரிக்காவுக்குச் சொந்தமான விமானத்தின் மூலம், நேற்று முன்தினம் இரவு 16 பேர் கொண்ட குழுவினர் இலங்கைக்கு வந் துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14 ஆம் திகதி இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்துக்கு அமையவே, இவர்களின் வருகை அமைந்துள்ளது.
இதேவேளை, இவர்கள் அரச தலைவர், தலைமை அமைச்சர், அயலுறவுத் துறை அமைச்சர் மற்றும் சபாநாயகர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (ஐ)




சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக ஹற்றன் - டிக்கோயா மருத்துவமனைகளின் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் 12 மணியளவில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை முன்னெடுத்தனர். இலவச சுகாதார சேவை மற்றும் இலவசக் கல்வியைப் பாதுகாக்கக் கோரியும், சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை அரசுடமையாக்கக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-ய-43)

# சைட்டம் தொடர்பில் நல்லதொரு தீர்மானம் விரைவில் எடுக்கப்படும்

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.22
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு, அனைவருடனும் கலந்தாலோசித்து நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் தீர்மானம் விரைவில் எடுக்கப்படும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து, சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர் மற்றும் மருத்துவக் கலாநிதி நெவில் பெர்னாண்டோ உள்ளிட்டோருடன் நேற்று முன்தினம் இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், பல்வைத்திய அதிகாரிகள் சங்கம், மற்றும் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுடன் தற்போது இந்த விடயம் தொடர்பாகப் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மருத்துவ சபையுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவும் எண்ணியுள்ளேன் எனவும் அரச தலைவர் இதன் போது குறிப்பிட்டார்.
மருத்துவக் கலாநிதி நெவில் பெர்னாண்டோ மற்றும் சில பெற்றோர் தமது கருத்துக்களை இதன்போது தெரிவித்ததுடன், மாணவப் பிரதிநிதிகள் சிலரும் தமது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைத்தனர். (ஐ)

# அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.20
பொ.கந்தையாவின் அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இல. 774 ஆஸ்பத்திரி சாலை, யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது என்று அகில இலங்கை காந்திசேவா சங்க பொதுச்செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்தார்.
சங்கத்தின் தலைவர் ந.சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் நிகழ்வில் ஓய்வுநிலை கமத்தொழில் சேவை பெரும்பாக உத்தியோகத்தர் வை.பாலகிருஷ்ணன், காந்தி நிலைய துணைச் செயலாளர் செ.சுப்பிரமணியம், பண்டிதர் வீ.ஏ.தங்கமயில், அகில இலங்கை காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோர் அஞ்சலி உரைகளை ஆற்றவுள்ளனர்.
அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் காந்திவாத்தியார் நினைவாக காந்தீயம்" சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)


திருநெல்வேலி
பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலயம்
இன்று 22.02.2017
12 ஆம் திருவிழா
சங்கரன் புதல்வனாய் வந்துதித்தே
சங்கடந் தீர்க்கும் சதுர்த்தியனே
அங்கமும் வேதமும் அந்தணரும்
ஆர்வமொடு தொழுமைங்கரனே
தங்கமுத்தமிழுந் தரணியில்
தாபதர்க் குயிராந் தத்துவனே
பொங்கிடும் காவிரி போற்றியவா
போதார் திருவடி போற்றிடுவோம்.
நியூஹரன் ப(F)ன்சி
பலாலி வீதி, திருநெல்வேலி.

# 12 ஜோதி லிங்கங்களின் தரிசனம் வெள்ளியன்று கம்பளையில்

யாழ்ப்பாணம், பெப். 22
கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று 'பாரதத்தின் மகிமை வாய்ந்த 12 ஜோதி லிங்கங்களின் தரிசனம்' நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
மகாசிவராத்திரி தினமான நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மறுநாள் 9 மணி வரையும், தொடர்ந்து வரும் மூன்று நாள்களும் காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரையும் இந்தத் தரிசனத்தை அடியவர்கள் பெறமுடியும்.
குஜராத்திலுள்ள உள்ள சோமநாதர, ஆந்திரா மாநிலத்தில் உள்ள மல்லிகார்ஜுன், மத்தியப் பிரதேசத்தில் உஜ்ஜயினி நகரத்தில் வீற்றிருக்கும் மகாகாலேஸ்வரர், மத்திய பிரதேசத்தில் உள்ள ஓங்காரேஸ்வரர், இமயமலையிலே வீற்றிருக்கும் கேதாரநாதர், மகாராஷ்டிராவில் உள்ள பீமாசங்கர், மகாராஸ்டிராவில் உள்ள கிருஷ்ணேஸ்வரர், தமிழ் நாட்டிலுள்ள இராமேஸ்வரர், குஜராத்திலுள்ள நாகேஸ்வரர், ஜர்கண்ட் மாநிலத்திலுள்ள வைத்தியநாதர், மகாராஷ்டிராவில் உள்ள திரியம்பகேஸ்வரர், உத்தரப் பிரதேசம் காசியில் அமைந்துள்ள விஸ்வநாதர் ஆகிய பாரதத்தின் வெவ்வேறு மாநிலங்களிலுள்ள மிகவும் மகிமை வாய்ந்த பன்னிரு ஜோதி லிங்கங்களை ஒரேயிடத்தில் தரிசிக்கக்கூடியதாக அமையவுள்ளது.
மேலும் இந்த நிகழ்வில் ஆன்மிக படவிளக்கக் கண்காட்சி, மனச் சுமையை இறைவனிடம் கொடுப்பதற்கான ஆன்மிக யாக குண்டம், தியானம் போன்ற நிகழ்வுகளையும் இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற
'றோயல் குளுக்கோஸ்'
தற்போது புதிய வடிவில்!!
இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670


சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567
(அ/00348)(11.17)

வாழ்த்துகின்றோம்
22.02.2017 இன்று 2012 - 2015 வரையான காலப்பகுதிக்குரிய தேசிய சாரணர் விருது பெறும் வ/ ஓமந்தை மத்திய கல்லூரி ஆசிரியர்களான
திருமதி. இ. கலைமதி, திரு. இ.சந்திரமோகன், திரு. ந.தர்சன், திரு.கி.சிவானந்தம்
ஆகியோரை பாடசாலைச் சமூகம் மனதாரப் பாராட்டி வாழ்த்திநிற்கின்றோம்.
வாழ்த்துவோர் : பாடசாலைச் சமூகம்
வ / ஓமந்தை மத்திய கல்லூரி

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்


தோற்றம்: 19.02.1936
மறைவு: 19.02.2017

யாழ்.சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 426, 2ஆம் ஒழுங்கை ஆச்சிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் 2017.02.19 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சமழங்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
இல- 426,
2 ஆம் ஒழுங்கை, ஆச்சிபுரம்.
தகவல்: மகன்
கணேசலிங்கம் (கணேஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிற்கடவை சித்திவிநாயகர் வெள்ளியன்று வேட்டையாடுவார்

கோவிற்கடவை சித்திவிநாயகர் ஆலய மகோற்சவம் கடந்த 17ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மகா சிவராத்திரி தினத்தன்று வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் 25ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 26 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் மாலை 7 மணிக்குகொடிஇறக்கமும்இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-35)

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 20ஆவது ஆண்டின் 2 ஆவது இதழ் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆச்சிரமப் பொறுப்பாளர் அமுதகலா சுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியை திருமதி ச.புனிதவதி சண்முகலிங்கனும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி செ.நாச்சியாரும் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், பெப். 22

மகத்தான ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்ற கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது ஆய்வரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் 'மிகைல் சொலக்கோவ் இன் இலக்கியப் படைப்புகள்' என்ற தலைப்பில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில்முதன்மைஉரையை எழுத்தாளர் மு. இராசநாயகமும், ஆய்வுரையை எழுத்தாளர் ஐ. சாந்தனும் நிகழ்த்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

### ப.தெ.அ.கூட்டுறவுச் சங்கங்களின்

## கிளை விற்பனை நிலைய அனுமதிகள் வழங்கக் குழு

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை விற்பனை நிலையங்களுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குழு ஒன்று வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி பிரேரணை ஒன்றை வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் முன்மொழிந்தார்.

வடக்கு மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை விற்பனை நிலையங்களுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறுபட்ட நெருக்கடிகளை சந்திப்பதாக சங்கங்கள் முறைப்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பிரச்சினைகள் தோன்றும்போது அதை விசாரித்து பரிந்துரைகளை வழங்குவதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டும்.- என்று அவர் தனது பிரேரணையில் தெரிவித்தார்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பல பிரச்சினைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் முக்கிய பிரச்சினையாக கிளைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை புதிப்பிக்கும் போது பல பிரச்சனைகள் எழுகின்றன. சில கிளைகள் மூடப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இந்தச் சபையின் ஊடாக ஒரு குழு ஒன்றை அமைத்து அதற்குரிய தீர்வுகளை காண்பது அவசியம் - என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரட்ணம் தெரிவித்தார். (ற-8)

## நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கு நிதி அனுமதி கிடைத்துவிட்டது

*யாழ். செயலர் சொல்லுகிறார்*

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்துக்கான நிதி அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் 250 வீடுகள் அமைப்பதற்கான திட்டம் முன்னெடுக்கதயாரான நிலையில் தடைப்பட்டது. வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது. இருப்பினும் இத் திட்டத்துக்கான நிதி அனுமதி கொழும்பு அரசால் மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் அதிருப்தி அடைந்தனர்.

மக்களின் நியாயபூர்வமான கோரிக்கை தொடர்பில் உடனடியாகவே கவனம் செலுத்தினோம். அதன் பிரகாரம் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்டப் பிரதிநிதியூடாக குறித்த நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நாவற்குழியில் மேற்கொள்வதாக திட்டமிடப்பட்ட 250 வீடுகளுக்குமான நிதி அனுமதி தற்போது கிடைத்துள்ளது-என்றார். (வ-10)

## பரீட்சை பிற்போடப்பட்டது

மகா சிவராத்திரியை முன்னிட்டு மாகாணப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இரண்டாவது பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் 24ஆம் திகதி சிவராத்திரியை முன்னிட்டு மறுநாள் நடத்தவிருந்த பரீட்சை 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்போடப்பட்டுள்ளது. (வ- 9)

## வடமாகாண விவசாய அமைச்சர் வராமைக்கு காரணம் கடவுச்சீட்டு

*அவைத்தலைவர் விளக்கம்*

யாழ்ப்பாணம் பெப் 22

வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் விடுகைக் காலம் அதிகரித்தமைக்கு அவரின் கடவுச் சீட்டு காலாவதியானதே காரணம் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் வடக்கு மாகணத்தின் நீர் வளம் தொடர்பாக சிறப்பு அமர்வு ஒன்றை நாளை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண விவசாய அமைச்சரும்,வடக்கு மாகாண முதலமைச்சரும் தற்பொழுது இல்லாததால் அதைப் பிற்போடுவது தொடர்பாக சபையில் ஆராயப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்தியாவுக்குச் செல்வதற்காக சபையிடம் அனுமதி கோரி அங்கு செல்வதற்கு கொழும்புக்கு சென்றுள்ளார். அவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு சென்ற பின்னர் தான் அவருடைய கடவுச் சீட்டு காலாவதியாகி விட்டதை அறிந்துள்ளார். அவரின் பயணம் தாமதம் அடைந்தது. இது தொடர்பாக உடனடியாக எனக்குத் தெரியப்படுத்தினார் என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நோய் வாய்ப்பட்டுள்ளார். அவர் மருத்துவத்துக்காக கொழும்புக்கு சென்றிருக்கலாம். அந்த நிலைமையை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் வடக்கு மாகாண விவசாய அமைச்சரின் வரவின்மையை ஏற்றுக் கொள்ள முடியாது. வடக்கு மாகாண சபையில் நீர் வளம் தொடர்பாக சிறப்பு அமர்வு ஒன்று நாளை இடம் பெறவுள்ளது என அமைச்சர் உட்பட அனைவரும் அறிந்த விடயமாகும். இப்படி இருக்கையில் ஒரு பொறு ப்புள்ள அமைச்சராக இருந்திருந்தால் அவர் இங்கு பிரசன்னமாகியிருப்பார் என்று வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா தெரி வித்தார். (ற-8)

## குடாக்கடலை நன்னீரேரியாக மாற்றும் திட்டம் முன்னெடுப்பு

அச்சுவேலி,பெப்.22

யாழ். குடாக்கடல் நீரேரியை நன்னீரேரியாக மாற்றியமைக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உலக வங்கியின் 600 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் இடம்பெறுகின்றன.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு மேற்குப்புறமாக நீரேரிக்கு குறுக்காக அமைந்திருக்கும் தடுப்பு அணை மற்றும் தடுப்பு அணையின் கதவுகள் மறுசீரமைப்புச் செய்யப்படுகின்றன. தடுப்பு அணைக்கு கீழாக உப்புநீர் ஊடுவடிந்து குடாக்கடல் நீரேரியில் கலப்பதை தடுத்து நிறுத்துவதற்கு தடுப்பு அணைக்கு சமாந்திரமாக நீருக்கு கீழே சிமெந்தால் தடுப்புச் சுவரும் நிறுவப்படுகின்றது. வடமராட்சியில் இருந்து வடமராட்சி கிழக்கு வரை நீரேரிக்கு சமாந்திரமாக தடுப்பு மண் அணையும் நிறுவப்படவுள்ளது.

யாழ். குடாக்கடல் நீரேரியில் கடல் உப்பு நீரைக் கலக்க விடாமல் செய்வதற்கு தொண்டமானாறு அராலி, அரியாலை ஆகிய இடங்களில் தடுப்பு அணை நிறுவப்பட்டுகுடாநாட்டின்மழை வெள்ளத்தை கடலுக்கு செலுத்துவதற்கு வசதியாகக் தடுப்புகதவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாக்கடல் நீரேரியில் உப்பு நீர் கலக்க விடாமல் செய்தல், அதேநேரம் குடாநாட்டு மழை வெள்ளத்தை சமுத்திரத்தில் கலக்க விடாமல் குடாக்கடல் நீரேரியில் தேக்கிவைத்தல் ஆகியன சம காலத்தில்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

குடாநாட்டில் மாரிகாலத்தில் மழை வெள்ளம் ஏற்படும் வேளையில் தடுப்பு அணையின் கதவுகள் குறித்த அளவுக்கு திறக்கப்பட்டு மழைவெள்ளம் குறிப்பிட்ட அளவு கடலுக்கு செலுத்தப்படுகின்றது.

யாழ்.குடாக்கடல் நீரேரியை நன்னீர் ஏரியாக மாற்றி அமைப்பதன் மூலம் நீரேரிக்கு சமாந்திரமாக உள்ள தரவையை மேய்ச்சல் நிலமாகக் மாற்றி அமைத்தல், நிலத்தை பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தல், குறித்த பிரதேசத்தின் கிணறுகளின் நீரைக் குடிதண்ணீராகவும் பயிர்ச் செய்கைக்கு பபயன்படுவதற்கும் வசதி செய்தல், குடாக்கடல் நீரேரியில் நன்னீர் மீன் வளர்ப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுதல் போன்ற பல நோக்கு அபிவிருத்தி திட்டங்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்பொழுது யாழ். குடாக்கடல் நீரேரியில் கணிசமான அளவு மழைவெள்ளம் தேக்கிவைக்கப்பட்டிருப்பதால், நீரேரிக்கு சமாந்திரமாக கரையோரங்களில் அமைந்திருக்கும் கிணறுகள் மற்றும் நீர் நிலைகளில் உள்ள நீர் உவர்த்தன்மை குறைவடைந்திருப்பதோடு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. நீரேரியில் தேங்கிநிற்கும் நீரைக் கால்நடைகள் அருந்துவதையும் அவதானிக்க முடிகின்றது. (வ-11)

## சுகாதாரத் தொழிலாளர்களுக்கு சம்பள நிலுவையை வழங்குக

### வடக்கு மாகாண சபை யாழ்.மாநகர சபைக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ். மாநகர சபை பொதுச் சுகாதாரத் தொழிலாளர்களின் சம்பள நிலுவைகள் வழங்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபை வலியுறுத்தியது.

வடக்கு மாகாண சபையின் 85ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் அறிக்கையில் சுகாதாரத் தொழிலாளர்களின் சம்பள நிலுவை தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுகாதாரத் தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரிப் போராட்டம் நடத்தினர். அந்தக் காலப் பகுதிக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என்று எப்போதும் மக்கள் முறைப்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அவர் களுக்கான சம்பள நிலுவை உடன் வழங்கப்பட வேண்டும். என்று அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களில் நிரந்தர நியமனம் பெற்றவர்கள், தற்காலிக நியமனம் பெற்றவர்கள் என் இரு தரப்பினர் உள்ளனர். இந்த அறிவித்தல் ஊடாக நிரந்தர நியமனம் பெற்றவர்களுக்குக் கொடுப்பனவு கிடைக் கும். தற்காலிக நியமனம் பெற்றவர்களுக்கு நியமனம் கிடைக்காத நிலைமை உள்ளது.' என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார். இவ்வாறான பிரச்சினை ஏற்படும்போது தற்காலிக நியமனம் பெற்று கடமையில் உள்ளவர்களை அவர்களது கடமை நேரத்தை விட மேலதிகமாக பணியில் ஈடுபடுத்தி அவர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவை வழங்குவது வழக்கம். இவர்களுக்கும் அந்த முறையின் ஊடாக நிலுவைகளை வழங்க முடியும்.- என்றார். (ற-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரி வழிபாடுபாடுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் மகா சிவராத்திரி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை நான்கு சாம வழிபாடுகளுடன் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் மறைந்த ஆலய முன்னாள் தலைவர் சமய சமூகசேவையாளர் கலைக் விசுவநாதன் பற்றிய சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும்.

வழிபாடுகள் யாவும் நிறைவடைந்தவுடன் சுவாமி வெளி வீதிவலம் வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தமாடும் உற்சவம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

++++++++++++++++

யாழ்ப்பாணம்,பெப்.22

வண்ணை. கந்தமட கற்பக விநாயகர் ஆலய 62ஆவது ஆண்டு விழாவும் சிவராத்திரி வழிபாடும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.20

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் திருவிழா இடம்பெற்று மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 11ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

**வாடகைக்கு வீடு தேவை**

ஆனைப்பந்தி சந்திக்கும் கச்சேரி , நல்லூர் வீதிக்கும் இடைப்பட்ட நாவலர் வீதியை அண்மித்த பிரதேசத்தில் வீடு தேவை.

077 899 9917, 077 727 3879

**ஆங்கில வகுப்பு**

உடுக்கியவளை பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6,7,8,9 ஆம் வகுப்புக்களுக்குப் பெண் ஆசிரியரால் வகுப்புக்கள் நடத்தப்படும்.

077 819 1314

**தேவை**

கொழும்பில் அமைந்துள்ள வீட்டில் தங்கியிருந்து சேவை செய்வதற்கு பெண் தாதியர் தேவை. (உணவு தங்குமிட வசதியுடன் 25000/=)

077 678 6312




# பொதுக்கூட்டம்

வட்டு. மூளாய் சாலை ஐக்கிய நாணய சங்கத்தின் 84ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்குசங்கசாரியாலயமண்டபத்தில்நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டது. தலைவர் க.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் இறைவணக்கம், தலைமையுரை, சென்றவருட பொதுக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல், மூத்த உறுப்பினர்கள் கௌரவிப்பு, புதிய அங்கத்தவர் தெரிவு ஆகியன இடம்பெறும்.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் குறித்த நேரத்துக்கு கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு தலைவர் கேட்டுள்ளார். (வ)

**நாகபூஷணி திருமண சேவை**

(மணமகள்மாருக்குப் பதிவுக் கட்டணங்கள் இலவசம்)

(19.02.2017 தொடக்கம் 28.02.2017 வரை)

எம்மிடம் ஏராளமான மணமக்கள் ஜாதகங்கள் போட்டோக்களுடன் உண்டு. நீங்கள் விரும்பும் மணமகனையோ / மணமகளையோ மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும்.

383/14B, கோயில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(நல்லூர் கோயில் வடக்குப் பக்கமாக)

T.P: 021 222 9306, 077 138 7596

## அழியாத நினைவோடு அகவை 17 இன் முடிவில்

மண் மகிழ 19 . 12 . 1944



கண் நெகிழ 01 . 03 . 2000

**அமரர் முருகேசு நடராஜாலிங்கம்**

(ஓய்வு பெற்ற இ.மி.ச. உத்தியோகத்தரும் " இந்திர தீபம் " உரிமையாளரும்)

திதி: 22.02.2017

சுடர் விட்டுப் பிரகாசித்த விளக்கு அணைந்து
இன்று பதினேழு ஆண்டுகள் ஆனாலும்
சிறகொடிந்த பறவைகளாய் இடர் சுமந்து நிற்கின்றோம்
அழியாத நினைவுகளாய் எம் இதயத்தில் நிலைத்திடுவீர

என்நாளும் உங்கள் நினைவில்
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தி.பிருந்தயன் ,தி. கபிசாயினி, தி. தனோதயன்

நீலர் வளவு, தும்பளை,
பருத்தித்துறை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 04 . 1937



இறப்பு 04 . 03 . 2016

யாழ்.கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

**திருமதி அன்னம்மா செல்லத்துரை**

ஆண்டொன்று கடந்தாச்சு உன் நினைவுகள் அது நீங்கவில்லை
கனவிலும் மறவாத உன் முகம் தன்னைத் தேடுகின்றோம்......
சொந்தமென பலபேர் இருந்தாலும் சொல்லி ஆற ஒரு மடி அது தாய்மடியே !
எமைச்சுமக்கையிலே சுகமாகச் சுமந்துவிட்டு
இன்று உன்னை உணருகையிலே சுமையென விட்டுச் சென்றாயோ !

தன்னலமற்ற செயல்வடிவமாய் அன்பினால் செதுக்கிய சிலையென
என் தாயெனும் விலைமதிப்பற்ற சிலையை சிந்தையில் நினைக்கையில்....
வலிசுமந்து விழி நனைந்து - எம்
இதயம் தன்னில் துயரலைவடிய தவிக்கவிட்டுச் சென்றதும் ஏனம்மா !

ஊரோடு உறவாடி உற்றாரை மனமுவந்து வரவேற்று உவமை பல கூறி
அவர்தம் செவி இனிக்கத் தெவிட்டாத கதைகள் பல கூறி
விருந்தோம்பியனுப்பி வைத்த அன்னையே ! இன்று அவர்களும் சேர்ந்தல்லவா
நம்முடன் ஆறாத்துயரில் துடிக்கின்றனர் இனி எங்குபோய்த்தேடினாலும்
கிடைத்துவிடாத எம் இதயக்கோயிலில் வீற்றிருக்கும் அன்னையே !
எம்மையெல்லாம் விட்டுச்சென்று ஓராண்டு கடந்து சென்றாலும்

எம்மைக் கடந்து செல்லும் காலமெல்லாம்
உம் நினைவுகளுடன் வாழ்ந்திருப்போம்
உங்கள் ஆத்மா அமைதியாக உறங்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கந்தரோடை, மேற்கு,
சுன்னாகம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்

## ஈரவிழிகளுடன் 8ஆம் ஆண்டில்....



**இலட்சுமணபிள்ளை கிருபாகரன்**

(ஆசிரியர்–கிளி/வட்டக்கச்சி ம.வி)

தோற்றம் 17.09.1964

மறைவு 20.02.2009

தெருக்களை விரித்து
மாடிகளை எழுப்பி
போரின் வடுக்களைப்
புதைக்க முனைந்தாலும்

கூட்டைச் சிதைத்து ஏழைக் இவலயத்தில் தவிக்கவிட்ட
பாதகத்தை மறப்போமா?
ஆயுள் உள்ள வரை அப்பா!
என்றழைக்க முடியாமல் எந்நாளும் நாமிங்கு
ஈரவிழிகளுடன்.........

என்றும் உங்கள்
அன்பு மனைவி, பிள்ளைகள்.

தாவடி தெற்கு.

(அja cs 00808) (12.18.17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 05 . 1942



மறைவு 15 . 02 . 2015

அமரர்

**பொன்னையா லோகேஸ்வரன்**

அபரபக்க ஏகாதசி (22.02.2017)

" இன்றும் எங்கள் நெஞ்சில் வாழும் அன்புத் தெய்வம் "

சிவபதி இல்லம்
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 . 03 . 1958



இறப்பு 20 . 02 . 2009

**அமரர் அ. பரமநாதன்**

(பொறியியல் உதவியாளர் - நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்)

திதி : அபரக்க ஏகாதசி (22.02.2017)

அன்புள்ள அப்பா!

ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறாது எம் மனம்......
மாண்டு நீங்கள் போனாலும் மறக்காது உங்கள் நினைவு
மீண்டு வர முடியவில்லை என்றாலும்
என்றும் எங்களோடு இருங்கள்!

" திருவதிகை"
வேலணை, அளவெட்டி.

அன்புடன்
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் நெகிழ நான்காம் ஆண்டு
நினைவலைகள்

அமரர் இராஜகுமார்
ரவிராஜ்



தெய்வத்தேவனே தேயாத
- வானிலவே!
தேடிப்புலம்புகின்றோம்
- தேம்பி அழுகின்றோம்
செல்வமகராசாவே உன் மாளிகை
- வெறுமையாக
சோர்ந்துவிட்டோம் நாம் சொல்லிழ
- வார்த்தையின்றி!
உன் பிரிவால் வாடும்
பாசமுள்ள அம்மா,
அண்ணா, தம்பி.
சிறுவிளான், இளவாலை.

மலர்வு 12.05.1989
உதிர்வு 22.02.2013

நன்றி நவிலலும் அந்தியேட்டி
ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
கைலாசபிள்ளை
மகேந்திரலிங்கம்

தோற்றம்
25.12.1948

மறைவு
25.01.2017

25.01.2017 புதன்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குலதெய்வம் யாழ் மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கத்தின் அமரத்துவ செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும் வேலணைப் பிரதேச வைத்தியசாலை , யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் ,தாதிமார்கள், ஊழியர்களுக்கும் மற்றும் இறுதித் தருணத்தில் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்து உதவிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (22.02.2017) புதன்கிழமை காலை 5.30 மணியளவில் வேலணை சாட்டி அந்தியேட்டி மடத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 24.02.2017 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அந்நிகழ்வில் பங்கு பற்றுவதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்று அன்பு உள்ளங்கள் அனைவரை வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

5ஆம் வட்டாரம்,வேலணை வடக்கு,
வேலணை, 021 321 4840
குடும்பத்தினர்.

29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 10 . 1937

மறைவு
13 . 02 . 1988

அமரர் தி.சி.சண்முகலிங்கம்
(இணுவில் கிழக்கு)
*திதி: அபரபக்க ஏகாதசி 22.02.2017*

மேன்மைச்சைவம் மிளிரும் பதியை அணி செய்து !
தான் பிறந்த தேசத்திற்கு சேவை பல நன்றே செய்து !
வான் புகழாய் வையகம் போற்றி ஏற்றத் திகழ்ந்து
சான்றோராய் சகத்தில் மகிழ்ந்து வாழ்ந்தீர்.

செப்பரிய மகிழ்வில் எம் குடும்பம் குலாவியவேளை
ஒப்பிலாத் துன்பப்பிரிவு சுழித்தடித்து ஆர்த்ததுவோ.
இப்புவியில் ஏன் இவ்வாழ்வென மனம் ஏங்கித் தவித்ததுவே !
முப்பொழுதும் உம் நினைவால் வேதனையை சாதனை ஆக்கினோம்.

இறை அருளும் இன்னமுதான சிந்தனையும் - எங்கும்
முறையான சேவையும் தாங்கள் புரிந்தமையால் - அப்பயன்
துறைபோகக் கற்று திளைத்தோம் யாம் - ஆயினும்
குறையொன்று தாங்கள் இல்லையே ! - தவிக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.*

" சுகந்தம் "
இணுவில் கிழக்கு, இணுவில்.

அன்பான மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திகள்,
சுற்றத்தார்கள்.

# வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பில் போராட்டம்

## குழந்தைகளுடன் பங்கேற்பு

மட்டக்களப்பு,பெப்.22

கொழும்பு அரசும், மாகாண அரசும் இணைந்து வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் காந்தி பூங்காவுக்கு முன்பாக காலவரையற்ற போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டத்தில் கடும் வெயிலிலும் பச்சிளங் குழந்தைகளுடன் பட்டதாரித் தாய்மாரும் கலந்து கொண்டதுடன், விசேட தேவையுடையவர்களும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின் போது, ஐந்தம்சக் கோரிக்கைகளை வேலையற்ற பட்டதாரிகள் முன்வைத்தனர்.

'போட்டிப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலம் நியமனங்களை பட்டதாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், பட்டதாரிகளுக்கான நியமனங்கள், அவர்கள் பட்டம் பெற்ற ஆண்டின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், அதற்கான வயது எல்லையை 45 ஆக அதிகரிக்க வேண்டும், பட்டதாரி நியமனங்களுக்கு விண்ணப்பம் கோரப்படும் போது ஏற்கெனவே அரச சேவையில் இருப்பவர்கள் விண்ணப்பிக்காத வகையில் சுற்றறிக்கை அமைய வேண்டும், கோட்டா முறையில் நியமனங்களை வழங்கும் செயற்பாட்டைத் தடை செய்ய வேண்டும், விண்ணப்பம் கோரப்படும் போது மாற்றுத் திறனாளிகள் விசேட கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்' ஆகிய கோரிக்கைகளை அவர்கள் இதன் போது முன்வைத்தனர்.

2012.03.31 க்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்ற நிலையில் உள்ள போதிலும், எந்த ஒரு தீர்வையும் மத்திய, மாகாண அரசுகள் வழங்காத நிலையில் காலவரையறையற்ற போராட்டத்துக்குச் செல்ல வேண்டிய நிலைக் குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்ட தாரிகள் சங்கத்தின் தலைவர் ரி.கிசாந்த் தெரிவித்தார். (ஐ)

# மகா சிவாத்திரி விழா

தென்மராட்சி,பெப்.22

மந்துவில் புளியந்திடல் கந்தசுவாமி ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கையை ஊக்குவிப்பு செயற்பாடாக மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளை நடத்த ஆலய பரிபாலன சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக உடுபுடைவைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக பொருளியல் பாட மூத்த விரிவுரையாளர் எஸ். உதயகுமாரின் அனுசரணையுடன் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் நலிவடைந்த குடும்பங்களுக்கான உடுபுடைவைகளும் வழங்கப்படும் என்று ஆலய பரிபாலன சபைச் செயலாளர் சு.தர்மலிங்கம் தெரிவித்தார். (வ-9)

மரண அறிவித்தல்

செல்வி லலிதாம்பிகை வல்லிபுரம்



பிறப்பு 01.08.1947
இறப்பு 20.02.2017

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி லலிதாம்பிகை வல்லிபுரம் 20.02.2017 திங்கட்கிழமை France இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு வல்லிபுரம் (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ் பெக்டர்) - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் யோகா பாலச்சந்திரன் (கனடா), காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் ஜெகதாம்பிகை, ஆனந்தசிவம்(கனடா), காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, ஞானாம்பிகை மற்றும் கங்காதரன், ஸ்ரீதரன், ராதாமனோகரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லநாதன்(France), இந்திராதேவி (கொழும்பு), தவமணிதேவி, மாலதி(கனடா), அருளம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் France இல் நடைபெறும். விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெகதாம்பிகை வல்லிபுரம்
சகோதரி.
சேச் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.
021 205 4245

கட்டுப்பாட்டு விலைகளை மீறி வியாபாரம் செய்தால் சட்டம் பாயும்

# ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாவனையாளர் சபை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

'யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தொடக்கம் கட்டுப்பாட்டு விலைகளுக்கே பொருள்களை விற்பனை செய்ய வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கைக்கு உட்பட வேண்டி வரும்'

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் அறிவித்தனர்.

சீனி 93 ரூபாவாகவும் அரிசி 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும். இதனை மீறி விற்பனை செய்யும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

'தனியாரிடமிருந்தே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகிக்கின்றன. நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு பொருள்களை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் இன்னும் அதிக விலையிலேயே பொருள்களை விற்பனை செய்கின்றனர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்படவுள்ள நட்டத்தைச் சீர்ப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்தன. (வ-4,17)

# மெய்வன்மைப் போட்டி

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் என்று பாடசாலை அபிவிருத் திக்குழு அறிவித்தது.

பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக மருத்துவர் திருமதி ஸ்ரீதேவி அசோகனும், பன்னாட்டுப் பொறியியல் சேவை தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனப் பணிப்பாளர் மு.ந.அசோகனும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் எதிர்பார்ப்புக்கேற்ப புதிய அரசமைப்பு அமையவேண்டும்

## முன்னாள் அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.22
இந்த வருடத்துக்குள் அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரப்படவேண்டும். அது புதிய அரசமைப்பாக இருக்கலாம் அல்லது அரசமைப்புத் திருத்தமாக இருக்கலாம், எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் அது அமைய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். அவர்களின் எதிர்ப்பார்ப்புப் போல் புதிய அரசமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அரசதலைவரும் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் 'அனைத்து சமயத் தலைவர்களின் தேசிய மாநாடு' நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

'எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் 13 ஆவது திருத்தம் போதாதா எனக் கேட்கின்றனர். 13 ஆவது திருத்தச்சட்டம் போதுமானது இல்லை என்பதாலேயே கடந்த 30 வருடங்களாகப் போர் தொடர்ந்தது. இவ்வாறான நிலையில் தற்பொழுது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தினால் போதாதா எனக் கேட்கின்றமை வேடிக்கையாக உள்ளது.சிறந்ததொரு அரசியல் தீர்வை நான் முன்வைக்க நடவடிக்கையெடுத்தபோது பிரபாகரன் அ தனை விரும்பவில்லை. எனது யோசனைத் திட்டத்துக்கு 7 வாக்குகளே குறைவாகக்கிடைத்தன. இந்தத் தீர்வுத் திட்டம் தொடர்பில் ஏழு மாதங் களில் 33 பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தேன். அன்று அதனை எதிர்த்தவர்கள் இன்று அரசில் எம்முடன் இருக்கின்றனர்.



அதேநேரம், போரால் காணாமல் போன தமது உறவுகளுக்கு என்ன நடந்துள்ளது என்பதை தெளிவாகக் கூறாவிட்டால் அவர்களுடைய உறவினர்கள் தொடர்ந்தும் கண்ணீர் வடித்த வாறு தேடிக் கொண்டேயிருப்பர். எனவேதான் காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தை அமைத்து அதில் காணாமல் போனவர்கள் என்ன ஆனார்கள் என்பதை அறிக்கையாகத் தயாரித்து வெளியிடும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகமொன்றை அமைப்பதற்கு நாடளுமன்றத்தில் சட் டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை விரைவில் அமைத்து காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு தெளிவான நிலைப்பாடொன்றை அறிவிக்க வேண்டும்.

எனினும், இந்த அலுவலகம் தொடர்பில் சில இராணுவத்தினர் சந்தேகத்தை விதைத்துள்ளனர். இந்த அலுவலகத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தொடர்புபட்ட இராணுவத்தினரைப் போர்க் குற்ற நீதிமன்றத்துக்கு இழுக்கப் போவதாகக் கூறப்படுகிறது. அப்படியான எந்தவொரு தேவையும் எமக்கு இல்லை. இப்படிச் செய்யுமாறு எந்தவொரு நாடுகளும் எமக்குக் கூறவில்லை.

சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு சிறந்ததொரு பொற்காலம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.-என்றார். (ஐ)

## 25,000 புலம்பெயர் இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கத் திட்டம்

கொழும்பு,பெப்.22
புலம்பெயர் இலங்கையர்கள் 25 ஆயிரம் பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அயல்நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு, தாய் நாட்டுக்குச் சேவையாற்ற, இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று உள்துறை அமைச்சர் எஸ். பி. நாவீன்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அயல்நாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் இலங்கையர்கள் 500 பேருக்கு இரட்டைக்குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இன்னமும் 25 ஆயிரம் பேருக்கு அவ்வாறு இரட்டைக்குடியுரிமை வழங்கப்படும். சில தசாப்தங்களாக தங்களது தாய் நாட்டுக்குச் சேவையாற்ற புலம்பெயர் சமூகத்துக்கு உரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள், தங்களது அந்த நாடுகளின் நண்பர்களுக்கு இலங்கை பற்றி நல்லவிதமாக எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு பரப்புரை செய்வதன் மூலம், குறிப்பாக இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அடையும்.

போர் காரணமாக இலங்கையை விட்டுச் சிலர் புலம்பெயர்ந்திருக்கலாம். அவர்கள் அரச பயங்கரவாதம் இடம்பெற்ற காலங்களில் அதற்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆசியாவில் வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். -என்றார். (ஐ)

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களை வெளியிட நடவடிக்கை

கொழும்பு,பெப்.22
தகவலறியும் உரிமை தொடர் பான சட்டத்தின் கீழ், நாடாளு மன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்களின் சொத்து விவரங்களைப் பெற்று, அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று ட்ரான் பரன்சி இன்டர் நெஷனல் சிறிலங்கா நிறுவனத்தின் முகாமையாளர் சங்கீதா குணரத்ன தெரிவித்தார்.

அதன் முதற்கட்டமாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகி யோரின் சொத்து - வருமான விவரங்களைக் கோரியுள் ளோம். சொத்து, வருமானச் சட்டத்தின் கீழ், மக்கள் பிரதிநிதிகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்களின் சொத்து - வருமான விவரங்களைப் பெற்றுள்ளோம். எனினும் அந்தச் சட்டத்தின் உப பிரிவுகள் காரணமாக, அவற்றை வெளிப்படுத்து வதற்கு, சட்டத்தில் இடமில்லை.

எனினும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக, அவ் வாறான பிரச்சினை இல்லை. அதற்கமையவே, விவரங்களைப் பெற்று வெளிப்படுத்த முடிவு செய்துள்ளோம்.- என்றார். (ஐ)

## பழைய முறையிலேயே தேர்தல் வேண்டும்

### *மனோ கருத்து*

கொழும்பு,பெப்.22
புதிய தேர்தல் முறையின் கீழ் சிறுபான்மை மக்களின் அரசியல் பிரவேசம் பாதிக்கப்படுகின்றது. எனவே பழைய முறையிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். -இவ்வாறு தேசிய சகவாழ்வு மற்றும் தேசிய அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான அறிக்கை கடந்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருந்த நிலையில், சிறுபான்மைக் கட்சிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வுடன் இதுகுறித்து நேற்று முன்தினம் கலந்து ரையாடினர்.

நாடாளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு ஒரே தேர்தல் முறையின் கீழேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற யோசனையையும் சிறுபான்மைக் கட்சிகள் இதன் போது முன்வைத் தன எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# சிறைக்குள் விமலுக்கு உயிர் அச்சுறுத்தலாம்

## பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றில் கோரிக்கை

கொழும்பு,பெப்.22
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விமல் வீரவன்சவுக்கு சிறைக் குள் ளேயே உயிர் அச்சுறுத்தல் இருப்ப தால், அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அத்துடக் அவர் தனக்குத் தேவையான நேரத் தில் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார். எனவே அவரை சிறைக்குள் வைக்கும் நேரங்களிலும் மாற்றம் தேவை- இவ்வாறு விமல் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க நீதிமன்றில் தெரிவித்தார்.

அரச நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, விமல் வீர வன்சவுக்கு எதிரான வழக்கு கொழும்பு கோட்டை நீதி மன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட் டது.

இந்த வழக்கில் சந் தேக நபரான விமல் வீரவன்ச சார்பில் முன் னிலையான சட்டத் தரணி ஜயந்த வீரசிங்க, தேசிய சுதந்திர முன்னணியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கு (தமி ழீழ விடுதலைப் புலிகள்) எதிரான கருத்துகளைக் கூறியவர். அந்த அமைப்பின் முன்னாள் உறுப்பி னர்கள் பலர் சிறையில் உள்ளனர். அவருக்கு அங்கு உயிர் அச்சுறுத் தல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால், அவருக்கு உரிய பாது காப்பு வழங்கப்பட வேண்டும். விமல் அடைக்கப்பட்டிருக்கும் சிறைக் கூடுமாலை 5.30 மணிக்கு மூடப் பட்டு, காலை 6 மணிக்கே திறக்கப் படும். அத னால்



அவர் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்குச் சிர மங் களை எதிர் கொள்கிறார்.

அத்துடன், நீண்ட நாள்களாக விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளதால், அவருடையஅடிப்படை உரிமை மீறப்படுகிறது. எனது சேவை பெறுநர், நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால், அவருக்கு பத்தி ரிகைகளை விநியோகிக்க வேண் டும் எனவும் அவர் நீதிமன்றின் கவனத் துக்குக் கொண்டு வந்தார்.

அதனைக் கவனத்தில் எடுத்த கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன, எல்.ரீ.ரீ.ஈ (தமிழ்ழ விடு தலைப் புலிகள்) அமைப்பின் முன் னாள் உறுப்பினர்களால், சந்தேக நபருக்கு அச்சுறுத்தல் காணப்படுவது மற்றும் அவரை, சிறைக் கூண்டுக் குள் அடைக் கும் நேரம் தொடர்பில் கவனத்தில் எடுக்குமாறு சிறைச் சாலை அதிகாரிகளுக்கு பணித்தார்.

நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் சிறைச்சாலைகள் திணைக்களத் துக்கு, அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரமே, பத்திரிகைகள் வழங்கப்படுகின்றன, தேவையெனில் சிறைச்சாலை அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரிவித்து விமல் பத்திரிகை யைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நீதிவான் அறிவித்தார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளி முதல் வவுனியாவில் தொடர் போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அறிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.22
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் நடத்தவுள்ளனர்.
இவ்வாறு கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவி திருமதி காசிப்பிள்ளை ஜெயவதனா தெரிவித்தார்.
நேற்று வவுனியாவில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
எமது சங்கத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். எமது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கிய கால அவகாசத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளது. வவுனியாவில் நடத்தப்பட்ட தொடர் உணவு ஒறுப்புப் போராட்டம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வழங்கிய வாக்குறுதியை அடுத்துக் கைவிடப்பட்டது. ஆயினும் கொழும்பில் அரச தரப்புடன் நடைபெற்ற கலந்துரையாடலில் எந்த முடிவுகளும் எடுக்கப்படவில்லை.
வவுனியாவில் தொடர் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முடிவெடுத்துள்ளோம். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் சுழற்சி முறையிலான போராட்டம் ஆரம்பிக்கப்படும். பொது அமைப்புகள், இளைஞர்கள், அரசியல் கட்சிகள் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். - என்றார். கலந்துரையாடலில் சங்கத்தின் அங் கத்தவர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

# வட மாகாண நீர் வளத்தை உறிஞ்சுகின்றது இராணுவம்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.22
வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். வடக்கின் நீர் வளம் அதிகளவில் அவர்களால் உறிஞ்சப்படுகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் சுட்டிக் காட்டினார்.
வடக்கு மாகாண சபையின் 85ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண நீர் வளங்கள் தொடர்பான சிறப்பு சபை அமர்வை நடத்துவது தொடர்பாக அதில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதன் போதே அனந்தி சசிதரன் இவ்வாறு தெரிவித் தார்.
அவர் தெரிவித்ததாவது-
வடக்கு மாகாண மக்கள் பயன்படுத்தும் நீருக்கு நிகரான நீரை இங்கு நிலை கொண்டுள்ள இராணுவத்தினரும் பயன்படுத்துகின்றனர். அதன் மூலமும் எமது நீர் வளம் சுரண்டப்படுகின்றது.
வடக்கு மாகாண அமைச்சர் வாரியத்தில் எடுக்கப்படும் முடிவுகள் அறிக்கைகளாகக் கிடைத்த பின்னரே என்ன விட யங்கள் நடைபெறுகின்றன என்று எம்மால் அறிய முடிகின்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கடந்த 10 நாள்களாக இங்கு இல்லை என்று அறிகின்றேன். அப்படியானால் அவர் ஏன் பதில் அமைச்சர் ஒருவரை நியமிக்கவில்லை.?- என்று அவர் கேள்வியெழுப்பினார்.
வடக்கு மாகாணத்தின் பதில் விவசாய அமைச்சராக கல்வியமைச்சர் குருகுலராஜா கடமையாற்றுகின்றார். - என்று வடக்கு அவைத் தலைவர் சி.வி. கே.சிவஞானம் தெரிவித்தார். (ற-8)

# உ.கிழங்கு அறுவடை ஆரம்பம்

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு செய்கையின் அறுவடை தற்போது ஆரம் பித்துள் ளது.
கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, ஊரெழு, உரும்பிராய், நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் உருளைக்கிழங்கை அறுவடை செய்கின்றனர். இதுவரைக்கும் முப்பது வீதமான அறுவடைப் பணிகள் இடம்பெற்றுள்ளன என்று மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
இன்னும் ஒரு சில நாள்களில் அறுவடை அதிகரிக்கும். தற்போது அறுவடை செய்யப்படும் கிழங்குகள் தெற்கே எடுத்துச் சென்று சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. சந்தை வாய்ப்புக் குறை வாகக் காணப்படுவதால் செய்கையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர்.
உருளைக் கிழங்குக் கான இறக்குமதி வரிகளை அரசு அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும், இதுவரைக்கும் சாதகமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.
இந்த இறக்குமதி வரியை அதிகரிக்காவிட்டால் குடாநாட்டு உருளைக் கிழங்குச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.- என்றார்.(ற-17)

# வீதி விளக்குகள் பொருத்தல் மின் சிக்கனத்தால் தாமதம்

பளை, பெப்.22
வீதிகளில் பொருத்துவதற்கு மின் விளக்குகளைக் கொள்வனவு செய்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் அவற்றைப் பொருத்த முடியாத நிலமையில் உள்ளனர். மின்சாரப் பாவனையைக் குறைக்க வேண்டும் என்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுக் கப்பட்டதை அடுத்தே அவர்கள் அவற்றைப் பொருத் தாதுள்ளனர்.
கடந்த ஆண்டு மழைவீழ்ச்சி குறைந்ததால் நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளது. அதனால் மின் சாரப்பாவனையைக்குறைக்க வேண்டும் என்று அரசு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ற-9)

# ஆனையிறவுக் கிராமத்துக்கு விரைவில் வீதி விளக்குகள்

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் உறுதி



யாழ்ப்பாணம், பெப்.22
கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆனையிறவுக் கிராமத்துக்கு இலங்கை மின்சார சபையின் உதவியுடன் விரைவில் வீதி விளக்குகள் பொருத்தப்படும்.
இவ்வாறு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.
ஆனையிறவுக் கிராம மக்களின் தேவைகள், அங்குள்ள குறைப்பாடுகள் என்பவை தொடர்பாக விசேட கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் இவ்வாறு உறுதியளித்தார் என்று அவரால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது-
கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர் பான பல விடயங்கள் உரையாடப்பட்டன. கிராம வீதிகளில் இரவுவேளைகளில் பயணிக்கும் போது பயத்தோடு பயணிக்க வேண்டியுள்ளது. வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தித் தர வேண்டும் என்று கோரப்பட்டது.
பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதற்கோ அல்லது அங்கு உள்ள பொதுமக்கள் வேறு விடயமாக வெளியிடங்களுக்குச் செல்வதற்கோ வீதியில் [illegible] வேண்டியுள்ளது. அந்த வழி [illegible] எந்த பேருந்துகளும் மறித் தாலும் ஏற்றிச் செல்வதில்லை. போக்குவரத்துப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தத் தீர்வு வழங்க வேண்டும். பேருந்து நிழல்குடை ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டது.
தெருவிளக்குகள் விரைவில் பொருத் தப்படும். இந்த ஆண்டுக்கான பேருந்து நிழல்குடைகள் அமைப்பதற்கான ஒதுக்கீடுகள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளதால் அடுத்த ஆண்டு இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும். பேருந்துகள் நிறுத்தாமல் செல்வது தொடர்பாக பேருந்து சேவைவழங்குநர்களுக்கு அறிவுறுத்தப்படும். பேருந்துகள் தொடர்ந்து கண்மூடித்தனமாக செயற்பட்டுவரின் உள்ளூர் சேவை களை வழங்கும் பேருந்து நடத்துநர் மற்றும் சேவை வழங்குநர்கள் மீது எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.- என்றுள்ளது.
(ற-10)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
22.10.1938
கண் நெகிழ
28.02.2011
திதி:- 22.02.2017

திருமதி மனோன்மணி அம்பலவாணர்

ஆண்டுகள் ஆறு சென்றாலும் ஆறாது எங்கள் மனங்கள்
நீங்கள் ஏற்றி வைத்த தீபம் இங்கே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது
அந்தச் சுடரினிலே உங்கள் முகம் எங்கள் கண்களில் தெரிகின்றது
காலங்கள் மாறலாம் கனவுகள் சிதையலாம் - ஆனால்,
உங்கள் நினைவும் செயலும் எங்கள் இதயத்தில்
ஊற்றெடுத்துக் கொண்டு இருக்கும் வரை மறையாதம்மா....

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

651/ 13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி சுகுமாரன்
நிதர்சினி குடும்பத்தினர்.
077 773 0597

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்த ஆண்டு மன்னாரில் 197 பேருக்கு டெங்குத் தொற்று

மன்னார், பெப்.22

மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டின் முதல் 50 நாள்களில் 192 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

மன்னாரில் தற்போது டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 145 பேரும், இந்த மாதம் 47 பேரும் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை மிக அதிகம் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஆண்டு மன்னார் மாவட்டத்தில் 237 பேரே டெங்குத் தொற்றுக்குள்ளானார்கள்.

டெங்குத் தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்படும் பிரதேசங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-101)

## தேங்காய் விலையில் சடுதியான அதிகரிப்பு

அச்சுவேலி, பெப்.22

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன் தேங்காய் கொள்வனவு, விற்பனை அளவை நடைமுறைக்கு மாற்றமடைந்துள்ளது. ஒரு கிலோ தேங்காய் 60 ரூபாவுக்கு அதிக விலையில் விற்கப்படுகின்றது.

கடந்த மாதம் வரை தேங்காயின் விலை மிகவும் தாழ்நிலையில் இருந்தது. இந்த மாதம் வெளிமாவட்ட வியாபாரிகள் நிறுத்தல் அளவைமுறையில் கொள்வனவு செய்யத் தொடங்கியதும் குடாநாட்டில் தேங்காயின் விலை திடீரென அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. (ந-11)

# பின்தள்ளப்பட்டது நீர்வளம் தொடர்பான சிறப்பு அமர்வு

யாழ்ப்பாணம், பெப்.22

வடக்கு மாகாணத்தின் நீர்வளம் தொடர்பாக நடைபெறவிருந்த வடக்கு மாகாண சபையின் சிறப்பு அமர்வு எதிர்வரும் 7ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 85ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் அதில் இவ்வாறு அறிவித்தார்.

"வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 16ஆம் திகதியிட்ட கடிதம் ஒன்றை எனக்கு அனுப்பினார். அண்மையில் நடைபெற்ற நீர் ஆய்வு மாநாட்டின் அறிக்கை கிடைக்கக் காலதாமதமாகும். சிறப்பு அமர்வைப் பிற்போடக்கோருகின்றேன்" என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார்" என்று வடக்கு அவைத்தலைவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

அந்த மாநாட்டின் அறிக்கைக்கும் நாம் கோரிய சிறப்பு அமர்வுக்கும் தொடர்பு இல்லை. சிறப்பு அமர்வில் வடக்கு மாகாணத்தின் நீர் வளப் பிரச்சினை தொடர்பாகவே அதில் விவாதிக்கவுள்ளோம் - என்று அவர் கூறினார்.

"ஆய்வறிக்கைக்கும் வடக்கு மாகாண சபைக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். அந்த மாநாடு நடத்தப்படுவது தொடர்பாக மாகாண சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டதா? அந்த அறிக்கைக்கு அமைச்சரவையால் நிதி செலவு செய்யப்பட்டதா? செலவு செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டது என்பதைச் சபைக்குத் தெரியப்படுத்த வேண்டும்" - என்று சபை உறுப்பினர் சுகிர்தன் கோரினார்.

"வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எமது பதவி எவ்வளவு காலம் இருக்கும் என்பதே தெரியவில்லை. இது வடக்கு மாகாணத்தில் வசிக்கும் 12 லட்சம் மக்களின் வாழ்வைப் பணயம் வைக்கும் செயற்பாடு. காலம் தாழ்த்தாது சிறப்பு அமர்வை நடத்த வேண்டும். நிலத்தடி நீர் ஆய்வு தொடர்பான நிதி மோசடி குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று மல்லாகம் நீதிமன்று கட்டளையிட்டுள்ளது. அந்த விசாரணை நடத்தப்பட்டு அது தொடர்பாகவும் நாம் அவையில் விவாதிக்க வேண்டியுள்ளது. அதற்கும் ஒரு நாள் ஒதுக்க வேண்டும்" என்று தெரிவித்தார் சபை உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம்.

அனைவரின் கருத்துக்களையும் அவைத் தலைவர் செவிமடுத்தார்.

"முதலமைச்சரும், மாகாண விவசாய அமைச்சரும் அவைக்கு வரவில்லை. அவர்கள் இருக்கும்போதே சிறப்பு அமர்வை நடத்துவது சிறந்தது. அதனால் நாளை இடம்பெறவிருந்த சிறப்பு அமர்வு பிற்போடப்படுகின்றது" என்று அவர் தெரிவித்தார். (ந-8)

# விவசாயிகளை ஏமாற்றுகின்றது கூட்டு அரசு

### இரணைமடு விவசாயிகள் சம்மேளனம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.22

அரிசிக்கு விலையை அதிகரித்த அரசு நெல் கொள்வனவு விலையை அதிகரிக்காது விவசாயிகளை ஏமாற்றுகின்றது.

இவ்வாறு கிளிநொச்சி, இரணைமடு விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளர் இ.சிவமோகன் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவிய வறட்சியான கால நிலையால் பெரும்பாலான நெற்செய்கைகள் அழிந்தன. எஞ்சியவற்றிலும் போதிய விளைச்சல் இல்லை. அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட சமயம் 70 ரூபா விற்ற சிவப்பு அரிசியின் விலை 80 ரூபாவாகவும், 80 ரூபா விற்ற சம்பா அரிசியின் விலை 90 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

அரிசியின் விலை அதிகரிக்க முன்னர் சிவப்பு நெல்லின் கொள்வனவு விலை 38 ரூபாவாகவும், சம்பா நெல்லின் கொள்வனவு விலை 42 ரூபாவாகவும் இருந்தது. அரிசிக்குப் 10 ரூபா அதிகரித்த அரசு. நெல்லின் விலை அதிகரிப்புத் தொடர்பாக எந்த அக்கறையும் கொள்ளவில்லை.

வறட்சியால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் இதனால் மேலும் பாதிப்படைந்துள்ளனர். உற்பத்தியாளர்கள் தொடர்ந்து பாதிப்படைய ஆலை உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் இலாபமீட்டும் நிலையே காணப்படுகின்றது. அரசு விவசாயிகள் விடயத்திலும் கரிசனை காட்டி நெல்லின் கொள்வனவு விலையில் மாற்றம் கொண்டுவர வேண்டும் - என்றார். (ந-101)

# கச்சதீவு திருத்தல திருவிழா மார்ச் 11ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.22

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா எதிர்வரும் மார்ச் 11ஆம் திகதி சனிக்கிழமையும், 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதுஎன்றுநெடுந்தீவுப் பங்குத் தந்தை வண.பிதா அ.ஜெ.அ. ஜெயரஞ்சன் அடிகள் தெரிவித்தார்.

மார்ச் 11 ஆம் திகதி சனிக் கிழமை மாலை 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, திருச்செபமாலை ஆராதனை திருப்பலியைத் தொடர்ந்து நற்கருணை நாதர் வழிபாடு மற்றும் திருச்சொரூபப் பவனி ஆகியவை அன்றைய தினம் நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து புனிதரின் திருச் சொரூப ஆசிர் இடம்பெறும்.

இந்தத் திருவிழாவுக்குச் செல்ல உள்ள யாத்திரிகர்களுக்கான தரை மற்றும் கடற்போக்குவரத்து வசதிகள் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் மற்றும் நெடுந்தீவு ஆகிய இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மார்ச் 11ஆம் திகதி சனிக் கிழமை காலை 4 மணி தொடக்கம் பி.ப. 1மணி வரை யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவான் இறங்குதுறைவரை இ.போ.ச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் நடைபெறும். குறிகாட்டு வான் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு காலை 5 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை படகுச் சேவை நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகாட்டுவானுக்கு செல்வதற்கு ஒரு வழிப் பயணத்துக்கு ஒருவருக்கு ரூபா 72 ரூபாவும், படகுக் கட்டணமாக குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவு செல்ல ஒரு வழிப் பயணத்துக்கு ஒருவருக்கு 225 ரூபாவும் அற விடப்படும். நெடுந்தீவு இறங்குதுறையில் இருந்து கச்சதீவுக்குப் படகில் செல்லும் பயணிக்கு ஒரு வழிக் கட்டணமாக நூற்று 50 ரூபா அறவிடப்படும்

இந்தப் பயண தரை மற்றும் கடற்சேவைகள் இந்த இரு தினங்களிலும் குறிப்பிடப்பட்ட நேர ஒழுங்குகளில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டது.

வருடா வருடம் நடைபெற்று வரும் கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழாவில் இலங்கை - இந்திய யாத்திரிகர்களும் கத்தோலிக்க மதகுருமார்களும் கலந்துகொள்வர். கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திருவிழாவில் இரு நாட்டு மக்களும் பெருமளவில் ஒன்று திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-ஐ)




சிவமயம்

## சிவாச்சார்ய அபிஷேக விஞ்ஞாபனம்



அன்புடையீர்!

பார்வதி பரமேஸ்வரன் திருவருள் முன்னிட்டு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் சுபமங்கல மிகு துர்முகி வருஷம் மாசித்திங்கள் 11 ஆம் நாள் (23.02.2017) வியாழக்கிழமை உத்தராட நட்சத்திரமும் துவாதசித் திதியும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 11.10 மணி முதல் 12.00 மணிவரையுள்ள இடப இலக்கின சுபமுகூர்த்தத்தில்.

**நல்லூர் சிவாகம பூஷணம் சிவஸ்ரீ கந்ததாசக் குருக்கள்**
**வேலம்பிராய் கலாநிதி சிவஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள்**
**பொன்னாலை சுழிபுரம்**
**சமஸ்கிருத பண்டிதர் சிவஸ்ரீ சி.வரதராஜக்குருக்கள்**
**ஆகியோரின் பேரன்களும், எமது புத்திரர்களுமாகிய**




## பிரம்மஸ்ரீ சோ.சக்திதரசர்மா
## பிரம்மஸ்ரீ சோ.சக்திதாசசர்மா

ஆகிய இருவருக்கும் விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, சிவாச்சார்ய அபிஷேகம் (குருப்பட்டம் வழங்கல்) ஸ்ரீகமலாம்பிகை சமேத கைலாசநாதசுவாமி, வேலம்பிராய் அம்பாள், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் அனுக்கிரகத்துடன் திருவருள் கூடியிருப்பதால்

மேற்படி முகூர்த்தத்துக்கு குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**முகூர்த்தம் :-**

**நல்லூர் சிவன்கோயில், திருசந்நிதியில் நிகழும்**

**சர்வபோதகம் :-** 'சிவாகம ஞானபாஸ்கரன்'
**சிவஸ்ரீ தானு. மகாதேவக்குருக்கள்**
(தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்)

**அருளுரை :- பிரம்மஸ்ரீ ச.பத்மநாபசர்மா** M.Phil
(முனீஸ்வரம் தேவஸ்தானம்,தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்**

**சிவஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக்குருக்கள்,**
**பிரதமகுரு,**
**ஸ்ரீவரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்,**
**பொன்னாலை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் பகிரங்க மன்னிப்பு கோரினார் உபாலி கொடிகார

கொழும்பு,பெப்.22

பொலிஸ் அதிகாரியை அச்சுறுத்திய முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான, உபாலி கொடிகார நீதிமன்றில்கைகூப்பிவணங்கிபகிரங்கமன்னிப்புகோரினார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோதபாய ராஜபக்சவுக்கு எதிராக நடைபெற்ற விசாரணை ஒன்றின்போது, பொலிஸ் அதிகாரியை அச்சுறுத்தினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு உபாலி கொடிகாரவுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது உபாலி கொடிகார, தான் அச்சுறுத்திய பொலிஸ் அதிகாரியைக் கைகூப்பி வணங்கி மன்னிப்புக் கோரினார்.

முறைப்பாட்டாளரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து வழக்கு விசாரணை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைகளை இணைக்கப்பாட்டின் அடிப்படையில் முடிவுறுத்திக் கொள்ள, கொழும்பு பிரதான நீதிவான் லால் பண்டார அனுமதியளித்தார். உபாலி கொடிகார குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்பு கோருவதற்கு இணங்கியிருந்தார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு அண்மையில் அமைந்துள்ள நிதி மோசடி விசாரணைப்பிரிவு அலுவலகத்தின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த கிருலப்பனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபாலி சமரசிங்கவை, மேல் மாகாணசபையின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர் உபாலி கொடிகார அச்சுறுத்தினார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

உபாலி கொடிகார விசாரணைப் பிரிவுக்குள் பலவந்தமாக உட்பிரவேசிக்க முயற்சித்த போது, குறித்த பொலிஸ் அதிகாரி அவரைத் தடுத்து நிறுத்தினார். அதன் போது 'நாம் மக்கள் பிரதிநிதிகள், எங்களுக்கு உள்ளே செல்ல அனுமதியுண்டு,அதனைத் தடுக்க எவராலும் முடியாது' எனக்கூறி உபாலி கொடிகார குறித்தபொலிஸ் அதிகாரியைத் தள்ளிவிட்டு விசாரணைப் பிரிவுக்குள் அத்துமீறி பிரவேசிக்க முயற்சித்தார் என்று உபாலி கொடிகார மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

குறித்தவழக்கு விசாரணைகளின்போது, கைகூப்பி வணங்கிமன்னிப்புக் கோரிய உபாலி கொடிகாரவை, இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)




திருகோணமலை-மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளரை இடமாற்றுமாறு கோரி நேற்று ஆசிரியர்கள் கிழக்கு மாகாணசபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுக்காலை இரண்டு பேருந்துகளில் வந்திறங்கிய ஆசிரியர்கள், மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாகத் திரண்டு வலயக்கல்வி பணிப்பாளருக்கெதிரான கோசங்களையும் எழுப்பினர். (ஐ-ய-40)

## மாகாணசபையின் அதிகாரம் பறிப்பு; கிழக்கு மாகாண சபையில் பிரேரணை

அம்பாறை, பெப்.22

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைப் பறித்து, நகர அபிவிருத்தி அதிகார சபைகளுக்கு வழங்கிய சட்டத்துக்கு எதிராக கிழக்கு மாகாண சபையில் பிரேரணையொன்று முன்வைக்கப் பட்டது.

மாகாணசபை அமர்வு, சபைத் தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் நேற்றுக்கூடியது. அதன்போது, மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் மற்றும் மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெப்பை ஆகியோர் இதுதொடர்பான அவசரப் பிரேரணையை முன்வைத்தனர்.

மாகாண சபைகளிடமும், உள்ளூராட்சி சபைகளிடமிருந்தும் மத்திய அரசல் பறித்தெடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மாகாணசபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் வழங்க வேண்டும் என்று கோரியே கடந்த 30 வருடகாலமாக மாகாணசபைகளிடமும், உள்ளூராட்சி சபைகளிடமும் இருந்த இந்த அதிகாரங்களை இல்லாமல் செய்து, சுற்றறிக்கையின் மூலம் கடந்த முதலாம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ய-49)

### சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு காண

## சுகாதாரம், உயர்கல்வி அமைச்சுக்களை அரச தலைவர் பொறுப்பேற்கவேண்டும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,பெப்.22

சைட்டம் பிரச்சினைக்குத் தீர்வு காண, சுகாதார மற்றும் உயர் கல்வி அமைச்சுக்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் மருத்துவர் நலின் டி சில்வா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சைட்டம் என்ற மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண அரச தலைவர் இரண்டு அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

உயர்கல்வி அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கா விட்டால், அரச தலைவர் தலையீடு செய்து தீர்வு வழங்க வேண்டும். குறைந்தபட்ச தகுதியையும் நிர்ணயம் செய்து வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும்.

தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக குரல் கொடுத்து வந்த சுகாதார அமைச்சர், தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்.

மருத்துவப் பேரவையால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. குறைந்தபட்சம் மருத்துவப் பேரவையின் இணையத் தளத்தில் காணப்படும் தர நிர்ணயங்கள் குறித்த கையேட்டு விவரங்களையேனும், வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும்.-என்றார்.(ஐ)

**சிங்கள வகுப்புகள் ஆரம்பம் சாவகச்சேரி**

அரச அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் மட்டும் பதிவு செய்யவும்.

இடம் :மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பின் ஒழுங்கை

காலம் : 26.02.2017 பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பம்

ஆசிரியர் : N. திருக்குமாரன்

சிங்கள மொழி வளவாளர் - நீதிமன்றப் பேச்சு

மொழி பெயர்ப்பாளர் - சத்தியப்பிரமாணம் செய்த சிங்கள மொழி பெயர்ப்பாளர்

தொடர்பு : 077 417 1382

**அற்றோனித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

யாழ்ப்பாணம், பிறவுண்வீதி, 2ஆம் ஒழுங்கை, இல. 30 என்னுமிடத்தைச் சேர்ந்த **ஞானப்பிரகாசம் தேவதாசனும் பெண் கிருஷாந்தி அற்புத மலரும்** 2003.05.03 ஆம் திகதி நொத்தாரிஸ் S.துரைராஜா முன்பாக 182ஆம் இலக்கத்தில் தெஹிவளை, மல்வத்தை றோட்டு, இலக்கம் 66/3 என்னுமிடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு நாகராஜா (அ.அ.இல - 451771884) என்பவருக்கு உறுதி இலக்கம் 1625, 2581, 2582 இல் சம்பந்தப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் வழங்கிய அற்றோனித் தத்துவத்தினை இன்றிலிருந்து இரத்துச் செய்வதாக தெரிவிக்கின்றோம். இனிவரும் காலங்களில் உறுதி இலக்கங்கள் 1625, 2581, 2582 இல் குறிப்பிடப்பட்ட வண்ணார்பண்ணை தென்கிழக்கிறையில் அமைந்துள்ள "பனன்காடும் சிராம்பிகுளமும்" என்ற ஆதனம் தொடர்பில் **வேலுப்பிள்ளை முருகேசு நாகராஜா** என்பவர் எம்மால் வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவப்பத்திரத்தினை உபயோகிக்கும் பட்சத்தில் அதனை கருத்தில் கொள்ள வேண்டாம் எனவும் தெரிவிக்கின்றோம்.

(AJA CS 841 ) (14,17,18)

**வீடு வளவு விற்பனைக்குண்டு**

டிஸ்பென்சரி லேன், உரும்பிராயில் 6 பரப்பில் அமைந்துள்ள மேல்மாடி வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

021 221 9526, 077 628 5831, 077 610 1872

**பூக்கன்றுகள் விற்பனை**

நல்லின குரோட்டன்கள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். பூச்சாடிகள். மீன் தொட்டிகள். பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=
யாழ். அக்கூரியம்
917.K.K.S.றோட், யாழ்ப்பாணம்.

075 991 0060, 077 707 0711

**விசா Ticket குறைந்த விலையில்**

SB

சகல நாடுகளுக்குமான பயணச் சீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவுக்கான Ticket களை 29,500/= க்கும் வீசா விண்ணப்பப்படிவம் 100/= பூர்த்தி செய்து தரப்படும். அத்துடன் பிரயாண காப்புறுதி, திகதி மாற்றமும் செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

SB Travels and Tours Pvt Ltd.
021 222 9555, 021 222 8555,
076 691 1080, 076 691 1083

**அறிவித்தல்**

பொது நீதி மற்றும் அபிவிருத்திக்கான தலைமைத்துவ நிறுவனத்தினால் இன்று நடத்த தீர்மானித்திருந்த அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 2017.03.22 ஆம் திகதி அதே இடத்தில் சீட்டிழுப்பு நடத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தலைவர்: IPFDL

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான ஹொட்டல் ஒன்றிற்கு

1. அலுவலக கணக்குப் பதிவாளர்(Clerk) (தகைமை A/L கணக்கியல் படித்தவர் விரும்பத்தக்கது) ஆண்,பெண்
2. சிற்றுண்டி தயாரிப்பாளர்-(ஆண்) உணவு, தங்குமிடம் உண்டு சம்பளம் 40000/= இற்கு மேல்

011 2722840 (காலை 8மணி-11மணி வரை)

**அறிவித்தல்**

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**

**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பு செய்தல் – 2017**

ஆங்கிலமொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் (Curriculum Vitae) வடக்கு மாகாணபொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.03.22 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk→ Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டுத் தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ரு.வரதலிங்கம்.
செயலாளர்,
மாகாணபொதுச்சேவைஆணைக்குழு, வடக்குமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரு மொழித் தேர்ச்சி அவசியம்

கொழும்பு,பெப்.22

நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களும் இரு மொழிகளையும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இது தொடர்பான சட்டம் விரைவில் கொண்டு வரப்பட வேண்டும் என்று தேசிய சகவாழ்வு மற்றும் தேசிய அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற, தேசிய சமய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேர்ச்சியற்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால், வடக்கு மற்றும் தெற்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவோ அல்லது அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவோ முடியாது. அதனால், அவர்களுக்கு இரு மொழிகளும் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். அதனைக் கட்டாயப்படுத்தும் சட்டம் நடை முறைப்படுத்த வேண்டும்- என்றார். (ஐ)

# மு.காவிலிருந்து பிரிந்தவர்கள் தனிக்கட்சி அமைக்கத் திட்டம்

கொழும்பு,பெப்.22

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒன்றிணைத்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்சியின் பெயர் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டு, பின்னர் அறிவிக்கப்படும் என்று மு.காவின் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.



பஷீர் சேகுதாவூத் , மு.காவின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்ட நட வடிக்கை தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

'மு.காவிலிருந்து விலிகிய சகலரும் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு' என்ற பெயரில் கூட்டமைப்பை உருவாக்கி, அதனூடாக அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளோம்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆரம்பத்தில் கொள்கை, கோட்பாடு, இலட்சியம் மற்றும் இலக்கு இருந்தது. அவற்றில் பிரதானமானது, முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கான கருவியாகச் செயற்படுவதாகும்.

மு.காவின் 2015 ஆம் ஆண்டு யாப்புத் திருத்தத்துடன், கிழக்கு மாகாணத்துக்கென்று இருந்த உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. இது வெறுமனே வெற்று அரசியல் நடத்தும் ஒரு அமைப்பாக மாறியிருக்கின்றது.

ரவூப் ஹக்கீம் என்ற இன்றைய தலைமையில் இருக்கின்ற இந்தக் கட்சியென்பது, 'முஸ்லிம் காங்கிரஸ்' என்றதொரு பெயர் பலகையை மாத்திரம் சுமந்ததொரு கட்சியாகும். அதன் கொள்கைகள்-இலட்சியங்கள் இல்லாதொழிக்கப்பட்டு விட்டன.

ரவூப் ஹக்கீமினுடைய அரசியல் நிலைப்பாடு, 'கிழக்குக்கு உதவாது' என்ற நிலைப் பாட்டில்தான் முஸ்லிம்கள் இருக்கின்றனர் என்பது அண்மைக் காலத்தில் புரியத் தொடங்கி விட்டது. ஆகவே, எல்லோரையும் இணைத் துப் பொதுவான தொரு அணிக்குக் கொண்டு வருவதாற் கான முயற்சியில் இருக்கின்றேன். அந்த முயற்சி, கோட்பாட்டு ரீதியாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் உள்ளிட்ட இரு பிரதான கட்சிகளும், சில தேசியக் கட்சிகளும் கோட்பாட்டளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது தொடர்பான விரி வானபேச்சுக்கள் தொடர்ந்து வரும் காலப் பகுதியில் இடம்பெறும்.

அனைவரும் மு.காவில் இருந்தவர்கள் என்பதால் 'முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு' என்ற பெயரில் தான் அதை ஆரம்பிக்க வேண்டுமென்பது எனது கருத்து.

எனினும், எல்லாக் கட்சிகளுடனும் உடன்பாட்டுக்கு வந்த பின்னர் பெயர் சம்பந்தமாகக் கலந்துரையாடி பின்னர் முடிவெடுக்கப்படும்' -என்றார். (ஐ)

## தமிழர்களுக்கு நம்பிக்கை தரும் கருத்துக்களை ஜெனிவா பேரவையில் கூட்டு அரசு முன்வைக்கவேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் கோரிக்கை

மட்டக்களப்பு,பெப்.22



தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய கருத்துகளை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசு முன்வைக்க வேண்டும். அரசு கால அவகாசத்தை மட்டும் கேட்டுக்கொண்டு, பல பிரச்சினைகளைத் தீர்க்காது வைத்திருக்கின்றன. இவ்வாறான செயற்பாடுகள் மக்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாகும். எனவே பன்னாட்டு விசாரணையே தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும். -இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தாண்டவன் வெளி ஜோசப் வாஸ் வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் திங்கட் கிழமை நடைபெற்றது. அதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை மீட்டுத் தருமாறு கோரி போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் போராட்டம் நியாயமானது. நல்லாட்சி என்கின்ற கூட்டு அரசு அதனைப் புரிந்து கொண்டு, அவர்களின் காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்காலிகமாகப் பெற்றுக் கொள்ளும் சலுகைகளானது எமது உரிமைகளுக்காக இருக்க முடியாது என்பதை தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லாட்சி என்கின்ற கூட்டு அரசின் ஆட்சிக்காலத்தில் அரசியல் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் சில விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனாலும், எந்தச் செயற்பாடுகளும் முழுமையாக இடம்பெறவில்லை. எனவே, கால இழுத்தடிப்புச் செய்யாமல் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். பாதுகாப்புத் தரப்பினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கொழும்பு அரசால் குவிக்கப்பட்ட அதிகாரங்கள், மாகாண மட்டங்களுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். வடக்கு-கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து வாழக்கூடிய ஆட்சி முறை இருக்கும் போதே, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நிலைப்பாடு உள்ளது.

நாங்கள் ஒன்றுபட்டு செயற்படும்போது, எமது மக்களுடைய உரிமைகளை வென்றெடுக்க முடியும். எனவே, தமிழ் பேசும் சமூகம், மத, கலாசார ரீதிகளாக வேறுபட்டு நிற்காமல் இணைந்து செயற்படும் நிலைமைக்கு வர வேண்டும். தமிழ் பேசும் சமூகங்கள் இணைந்து செயற்படுவதால் எந்தவித தீமையும் ஏற்படப்போவதில்லை மாறாக நாம் பயன்பெற முடியும்.-என்றார். (ஐ)

## மட்டக்களப்பிலும் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படும்

### கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்குட்பட்ட களுதாவளை பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

அதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி தெரி வித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் களுதாவளைப்பிரதேசம் அதிகளவான விவசாய உற்பத்தியாளர்களைக் கொண்ட பிரதேசமாக உள்ளது. இந்தப் பொருளாதார மத்திய நிலையம், அந்தப் பிரதேச விவசாய உற்பத்தியாளர் களுக்கு பெரும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்களுக்கான ஆலோசனைகளையும் வழங்கும்.

வடக்கு மாகாணத்திலும் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், அது இழுபறியில் உள்ளது.-என்றார். (ஐ)

# மலையகத்தின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு,பெப்.22

மலையகத்தின் கல்வி, சுகாதார அபிவிருத்திகளுக்கு இந்திய அரசு உதவ வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் சு.ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்குக் கூட்டணியினர், கொழும்பிலுள்ள இந்திய உயர் தூதரகத்தில் நேற்று முன்தினம் சந்தித்தனர். இந்தச் சந்திப்பின்போதே, கூட்டணியினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன், பிரதித் தலைவர்களான அமைச்சர் பா.திகாம்பரம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்ததாவது:

இந்தியவம்சாவளி மக்களின் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டும் என்று- ஜெய்சங்கர் கோரியதற்கு அமைவாக, இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மலையக மக்களுக்கு நன்மை தரக்கூடிய பல விடயங்களை நாம் இந்தச் சந்திப்பின் போது கோரியிருந்தோம். குறிப்பாக, இந்திய வீடமைப்புத்திட்டத்தைக் கோரினோம்.

இந்திய அரசு 4 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தை, இந்திய வம்சாவளி மக்களுக்கு ஏற்கெனவே வழங்கிய போதிலும், அது போதவில்லை என்றும் நாம் எடுத்துரைத்தோம். அத்துடன், மலையகக் கல்வி அபிவிருத்தியிலும், மலையக மக்களின் சுகாதார விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று- நாம் கோரியிருந்தோம். இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்றன. அதன்போது; புதிய அரசமைப்புத் தொடர்பிலும் அவர் எம்மிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, இலங்கை அரசின் கல்வித்திட்டத்துக்கு அமைவாக, உதவிகளை வழங்குவதற்கு, இந்திய அரசு தயாராகவுள்ளது என்றும், ஏனைய விடயங்களில் முன்னரைப் போலவே உதவி ஒத்தாசைகளை நல்குவதற்கு இந்திய அரசு தயாராக இருப்பதாகவும் ஜெய்சங்கர் எம்மிடம் தெரிவித்தார்- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று போராட்டம்

சென்னை, பெப். 22
தமிழக சட்சபையில் எதிர்கட்சிகள் இல்லாமல் நடந்த வாக்கெடுப்பையும் தி.மு. கழகம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டமையையும் கண்டித்து தமிழ் நாடெங்கும் பரவலாக இன்று உணவு ஒறுப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. (ம)



## எரிபொருளுக்காக ஈராக்கில் முகாமிடவில்லை அமெரிக்கா

### மேட்டிஸ் தெரிவிப்பு

வொஷிங்டன், பெப். 22
ஈராக்கின் பெற்றோலியத்தை எடுத்துக் கொள்வதற்காக அமெரிக்கா இங்கு முகாமிடவில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை இல்லாமல் செய்வதே எமது முக்கிய இலக்கு என்று அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் மேட்டிஸ் தெரிவித்தார்.

ஈராக், சிரியா நாடுகளின் சிலபகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக அறிவித்துள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் இருந்தது. கிழக்கு மோசூல் மீட்கப்பட்ட நிலையில் தற்போது மேற்கு மோசூலைக் கைப்பற்ற போர் நடைபெறுகிறது. ஆனால், அமெரிக்கா ஈராக்கின் எரிபொருள் வழங்களைச் சுரண்டவே அங்கு முகாமிட்டுள்ளது என்று ஒரு குற்றச்சாட்டு உள்ளது. இந்த நிலையிலேயே மேட்டிஸ் இவ்வாறு தெரிவித்தார். பக்தாத் நகருக்கு சுற்றுப்பயணம் செய்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஈராக்கில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளும் எரிபொருள்களுக்கான உரிய தொகையை முறைப்படி செலுத்தி வந்துள்ளோம். இனிவரும் காலங்களிலும் அவ்வாறே செய்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## தெற்கு சூடானில் கடும் வறட்சி பஞ்சம் என்று ஐ.நா. பிரகடனம்

தெற்கு சூடானில் நீண்டகாலமாக கடும் வறட்சி இருந்து வருகிறது. இந்த நிலையை பஞ்சம் என்று கோடிட்டுக் காட்டிப் பிரகடனப்படுத்தியது ஐக்கிய நாடுகள் சபை.

பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பஞ்சத்தின் பிடியில் மிகையாக இறுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லட்சம் பேர்வரை பட்டினிச் சாவின் விளிம்பில் உள்ளனர். உள்நாட்டுப் போரும் பொருளாதார வீழ்ச்சியும் நீண்டகால வறட்சியும் இந்தப் பஞ்சத்துக்கு காரணமாக கூறப்படுகின்றது.

ஏமன், சோமாலியா மற்றும் வடகிழக்கு நைஜீரியாவில் நிலவரம் பஞ்ச நிலையை எட்டியுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளபோதிலும், தெற்கு சூடானில் தான் பஞ்சம் முதல் தடவையாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. மனித நேய உதவிகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால், நிலமை மேலும் மோசமாகலாம் என்றும் எச்சரிக்கப்படுகிறது.

இதன்படி, தெற்கு சூடானின் மக்கள் தொகையின் 40 வீதத்துக்கும் அதிகமான மக்கள் அதாவது 49 லட்சம் பேருக்கு அவசர உணவு உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் அமைப்புக் கள் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டன.

**பஞ்சம் எப்போது பிரகடனப்படுத்தப்படும்?**

உணவுத்தட்டுப்பாடு பெருமளவிலான மக்களை ஊட்டச்சத்தின்மை நிலைக்கு தள்ளினாலும், ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளின்படி பஞ்சம் பிரகடனப்படுத்தப்படுவது மிகவும் அபூர்வமாகும்.

நீண்டகால வறட்சியும், ஏனைய பிரச்சினை களும் உணவு விநியோகத்தை குறைத்தாலும் அவை பஞ்சநிலைக்கு போகும் என்ற அவசியமில்லை.

> “ உணவுத்தட்டுப்பாடு பெருமளவிலான மக்களை ஊட்டச்சத்தின்மை நிலைக்கு தள்ளினாலும், ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளின்படி பஞ்சம் பிரகடனப்படுத்தப்படுவது மிகவும் அபூர்வமாகும்.

ஆள்கள் இறத்தல், ஊட்டச்சத்தின்மை மற்றும் பசி ஆகியன ஓர் எல்லையை எட்டும் போது தான் பஞ் சம் அறிவிக்கப் படும். அத்தகைய ஓர் அவல நிலையையே தெற்கு சூடான் இன்று எதிர்கொள்கிறது. (ம)



## போர் ஒத்திகையை நடத்துகிறது ஈரான்

டெஹ்ரான், பெப். 22
கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைப் பரிசோதனையைத் தொடர்ந்து தற்போது, மிகப்பெரும் இராணுவப் போர் ஒத்திகையை நடத்தி வருகிறது ஈரான்.

சில தினங்களுக்கு முன்னர் ஈரான் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதித்து வெற்றிகண்டது. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. கண்காணிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஈரானைச் சேர்த்தது. எனினும், ஈரான் அச்சப்படவில்லை. தனது சுயபாதுகாப்புக்குத் தேவையான இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று அறிவித்தது. இந்த நிலையில் மத்திய பாலைவனத்தில் மிகப்பெரும் போர் ஒத்திகையை ஈரான் நடத்தி வருகிறது. நேற்றுமுன்தினமும், நேற்றும் ஒத்திகைகள் இடம்பெற்றன. மூன்றாம் நாளான இன்றும் போர்ப் பயிற்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. சக்தி வாய்ந்த ஏவுகணைகள் இன்று பரிசோதிக்கப்படலாம் என்று எதிர்வுகூறப்படுகிறது. (ம)

## வழிபாட்டுத்தலத் தாக்குதல்; பதிலடி கொடுக்கிறது பாக்.

இஸ்லாமபாத், பெப். 22
பாகிஸ்தான் செவான் நகரில் உள்ள இஸ்லாமிய வழிபாட்டுத் தலத்தின் மீது கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ். அமைப்பு தாக்குதலுக்கு பொறுப்பேற்றதை அடுத்து பாகிஸ்தான் எங்கும் தேடுதல் வேட்டைகள் நடத்தப் பட்டு ஆயுததாரிகள் கொன்று குவிக்கப்படுகின்றனர்.

தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தனது கண்டனத்தை உடனடியாகவே தெரிவித்தார்.

ஆயுததாரிகளுக்கு எதிரான கடும் தேடுதல் நடவடிக்கைக்கும் தாக்குதலுக் கும் அவர் உத்தரவிட்டார்.


இதனையடுத்து அடுத்த 24 மணிநேரத்தில் கிட்டத்தட்ட 70 ஆயுததாரிகள் பாகிஸ்தானின் பலமாகாணங்களிலும் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. நேற்றுக்காலைவரை 138 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. அயல்நாடான ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் ஊடுருவியும் ஆயுததாரிகளின் நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் கடும் தாக்குதலை நடத்தியது.


அவ்வா றான தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் தெரிவித் தது. இதன்படி ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லையில் தனது படைகளை மேலும் அதிகரித்துள் ளது பாகிஸ்தான். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணொலி ஆதாரம் சிக்கியது கிம் ஜோங் நாம் கொலையில்





கோலாலம்பூர், பெப். 22
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரர் கிம் ஜோங் நாம், மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் கொலை செய்யப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பான காணொலி ஆதாரங்கள் தற்போது கிடைக்கப்பெற்றன.
கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹவாங் மூவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர்.
வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் என்பவரும் கைது செய்யப்பட்டார். அவரிடமும் தொடர்ந்து விசாரணைகள் நடை பெற்று வருகின்றன.
இந்த நிலையில் காணொலி ஆதாரத்தின் மூலம் கொலையில் சூத்திரதாரி விரைவில் அடையாளம் காணப்படுவார் என்று மலேசிய பொலிஸார் தெரிவித்தனர்.
முன்னதாக, கிம் ஜாங் நம் படுகொலை செய்யப்பட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் வடகொரிய அதிபரின் காட்டுமிராண்டித்தனமும், பதவி வெறியும் நிச்சயம் வெளிப்படும் என்று தென்கொரிய அதிபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



பல்கேரியாவின் பேர்ணிக் நகரில் நடைபெறும் வருடாந்த நடனவிழா அண்மையில் நடைபெற்றது. கலை, கலாசாரங்களை பிரதிபலிக்கும் நடனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் அரங்கேறின. நூற்றுக்கணக்கான கலைஞர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் நிகழ்வை நேரில்பார்த்து மகிழ்ந்தனர். (ம)

## ஆஸியில் விமான விபத்து ஐவர் பரிதாப உயிரிழப்பு



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விமான விபத்தில், அதில் பயணித்த ஐவரும் உயிரிழந்தனர். மெல்பேர்ணின் எசன்டன் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிய ரக விமானமே அவ்வாறு விபத்துக்குள்ளானது.
குடியிருப்புத் தொகுதியில் விமானம் வீழ்ந்து நொறுங்கியது. இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே விபத்துக்குக் காரணம் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டது. (ம)

## சபாநாயகர் தனபால் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

### கொண்டுவருகிறது தி.மு.க.



சென்னை, பெப். 22
தமிழக சட்சபையின் சபாநாயகர் தனபால் மீது, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தி.மு.கழகத்தின் செயல் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலின் நேற்றுக் காலை தெரிவித்தார்.
நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றபோது சபாநாயகர் நடந்துகொண்ட முறை ஜனநாய கத்திற்கு விரோதமானது என்பதால், அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான கடிதத்தை பேரவையின் செயலர் ஜமாலுதீனிடம் வழங்கியுள்ளோம். அதன் பிரதியை சபாநாயகரிடமும் வழங்கியுள்ளோம் என்று ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம)






பிரான்ஸ் அதிபர் தேர்தல்

## வேட்பாளர்களுக்கு எதிராக மக்கள் பெரும் போராட்டம்

பரிஸ், பெப். 22
பிரான்ஸ் அதிபர் தேர்தலில் கொன்சர் வேடிவ் கட்சியின் வேட்பாளர் சியஸ்பிலன், வலதுசாரி வேட்பாளர் மெரைன் இருவருக்கும் எதிராக பொதுமக்கள் மிகப்பெரும் போராட்டத்தை நடத்தினர்.
ஏப்ரல் மாதம் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. குறித்த வேட்பாளர்கள் இருவருக்கும் எதிராக தலைநகர் பரிஸில் நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நாட்டின் பிற பகுதிகளிலும் போராட்டம் நடைபெற்றது. இவர்கள் இருவரும் ஊழல் வாதிகள். எனவே தேர்தலில் போட்டியிடக் கூடாது.
சிறைக்குச் செல்ல வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ம)

## பிரணாப்பை சந்திக்கிறார் ஸ்டாலின்

சென்னை, பெப். 22
தமிழக சட்டசபையில், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் நடந்த மோதல்கள் தொடர்பாக இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை நாளை சந்திக்கிறார் ஸ்டாலின்.
வாக்கெடுப்பின்போது சபையில் பெரும் அமளி நடைபெற்றது. இருமுறை அவை ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் இயல்புநிலை திரும்பாததால் தி.மு.கழகத்தினர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். காங்கிரஸ் தானாக வெளிநடப்புச் செய்தது. எதிர்கட்சிகள் இல்லாமல் வாக்கெடுப்பு நடந்தது. எடப்பாடி வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. இது ஜனநாயகக் கொலை என்று ஸ்டாலின் குறிப்பிட்டார். குடியரசுத் தலைவரை சந்திக்கும் விருப்பத்தையும் வெளிப்படுத்தினார். இந்த நிலையில் நாளை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இந்தியக் கொள்கை மாற்றமடைந்து விட்டதா?

இலங்கையின் இனப்பிரச்சினை குறித்த இந்தியாவின் நிலைப்பாடு, மாற்றமடை ந்துவிட்டதா என்கிற அச்சத்தை எழுப்பியுள்ளது அந்த நாட்டின் அயலுறவுத்துறைச் செயலர் கொழும்பில் தெரிவித்திருக்கும் கருத்து. அது மிகச்சரியாக இருந்தால் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா, தான் ஆரம்பித்த ஆட்டத்தை, ஓர் இனத்தைப் பறிகொடுத்த பின்னர் தனது பொறுப்பைத் தட்டிக்கழித்து மிகக் கேவலமான முறையில் முடித்துக்கொள்ள விரும்புகின்றது என்பது அதன் பொருள்.

கொழும்பு வந்த இந்திய அயலுறவுத்துறை செயலர் சுப்ரமணியம் ஜெயசங்கர் மேனன், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பில் யதார்த்தத்துக்கு ஏற்ப நடந்து கொள்ளுங்கள் என்று கூட்டமைப்புக்கு அறிவுரை சொல்லியுள்ளார். இந்திய மற்றும் இலங்கை இடையே அரசியல் ஒப்பந்தம் செய்யப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடையும் தருணத்தில், இந்திய நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

கூட்டமைப்புடனான கலந்துரையாடலில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்புக் குறித்துப் பேசப்பட்ட போது, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கிறதா என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வினா எழுப்பினார். அதற்குப் பதிலளித்த மேனன், அதன் பின்னர் பல விடயங்கள் நடந்துவிட்டன, ராஜீவ் காந்தியே கொல்லப்பட்டார் என்று பதிலளித்ததுடன், முஸ்லிம்களும் இணைப்புக்கு எதிராக இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். அதனடிப்படையிலேயே யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுமாறும் அவர் கூட்டமைப்புக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆனால், இன்றைய யதார்த்தத்துக்கான அடித்தளத்தையும் போதை மருந்தையும் தனது நாடுதான் வழங்கியது என்கிற உண்மையை மேனன் இலகுவாக மறந்துவிட்டார். 30 ஆண்டுகளின் முன்னர் சிறு பொறியாகப் பற்றிய ஈழ விடுதலைப் போராட்டத்தை பெருந் தீயாக மூட்டிவிட்டதே இந்தியாதான். சிறு சிறு குழுக்களாக வன்முறையில் இறங்கிய இளைஞர்களைத் திரட்டி நவீன ஆயுதங்களையும், பயிற்சிகளையும் அவர்களுக்குக் கொடுத்துப் பிரச்சினையில் குளிர்காய முயன்றதும் இந்தியாதான். அதனால் கைகளைச் சுட்டுக் கொண்டதும் இந்தியாதான்.

அதனைச் சாக்காக வைத்துக்கொண்டு, இலங்கையுடனான ஒப்பந்தத்தில் ஈழத் தமிழர்களின் சார்பாகத் தன்னிச்சையாக கையெழுத்திட்டதும் இந்தியாதான். அந்த ஒப்பந்தத்திலே வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்தியதும், அதனை நிறைவேற்றும் பொறுப்பைத் தானே கொண்டிருக்கிறேன் என்று கையெழுத்திட்டதும் இந்தியாதான்.

அதன் பின்னரும் நேற்றுவரைக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தி வந்ததும் இந்தியாதான். அந்தத் திருத்தமும் வடக்கு கிழக்கு இணைப்பையே கோருகின்றது. இந்த நிலையில், 30 வருடங்களின் பின்னர் வெறும் யதார்த்தம் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் வரலாறுகளை மறைத்து எல்லாவற்றையும் மறந்துவிடச் சொல்வது நியாயமல்ல.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான ஒப்பந்தத்தின் பின்னரான பேரழிவுகளுக்கும், இறுதிப் போர் பேரழிவுகளுக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடும் இந்தியாவுக்கு உள்ளது. அவற்றையெல்லாம் யதார்த்தத்தின் பெயரால் இந்தியா உதறிவிட முடியாது; உதறிவிடவும் கூடாது. தனது பொறுப்பை, ஈழத் தமிழர்களின் சம்மதமே இன்றி இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம், தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றும் கடமை அதற்கு இருக்கிறது. புதுடில்லியும், அதை வழிநடத்தும் மேனன்களும் இந்த விடயத்தைப் புரிந்துகொள்ளவேண்டும்.



# பிறப்பு மொழியின் சிறப்பால் அது தாய் மொழி என்ற பெருமை பெற்றது

பெப்ரவரி 21ஆம் திகதி உலக தாய்மொழித் தினமாக ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றது. அதனை ஒட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.

மு.ஈழத்தமிழ்மணி

பரந்துபட்ட உலகத்தில் மனித குலங்கள், தாம் பேசுகின்ற மொழியைதாய்மொழியாகக் கருதினாலும், அந்த மொழிக்குரிய சிறப்பைப் புரிந்து கொள்வதில் பின்நிற்கின்ற மனப்பாங்கு காணப்படுகின்றது. இன்று உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் வழக்கில் இருப்பினும், முன்னர் புழக்கத்தில் இருந்த பல மொழிகள் ஏற்கனவே அடியோடு அழிந்த வரலாறும் உண்டு. இன்றும் உலகில் மக்கள் தொகை தினம் தினம் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், வழக்கிலுள்ள மொழிகளில் பல மறைந்து வருகின்றன. அல்லது அவற்றைக் கைவிட வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகின்றது.

உலக அளவில் பார்க்கின்றபோது முழு உலகிலும் ஏறக்குறைய 725 கோடி மக்கள் வாழ்கின்றனர் என்று கணக்கிடப்பட்டிருந்தாலும், தற்போது அவர்களால் 7,105 மொழிகள் பேசப்படுபவையாக உள்ளன. இன்றுவரையில் உலகம் முழுவதிலும் பயன்பாட்டில் இருக்கின்ற 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளில், எங்கள் தாய் மொழியானதமிழ்மொழியைத் தவிர்த்து ரஷ்யன், ஸ்பெயின், சீனம், ஆங்கிலம், ஹிந்தி உட்பட்ட மொழிகளே முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இந்தியாவில் நாடு தழுவிய ரீதியில் 880 மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. இந்திய அளவில் கடந்த காலத்தில் வழக்கில் இருந்த மொழிகளில், இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், 220மொழிகள்மறைந்து விட்டன என ஆய்வுகளில் இருந்தும் அறியக்கூடியதாக உள்ளது.

இன்றைய உலகில் வழக்கில் இருக்கக் கூடிய சகலமொழிகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை அழியவிட்டு விடலாகாது. மொழிகளின் சிறப்புக்களை அவற்றைப் பேசுகின்ற மக்கள் மத்தியில் உணரச் செய்தல் வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலகளாவிய ரீதியில் செயற்படுகின்ற மொழி நிறுவனங்கள் காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றன. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி, உலகத்தாய்மொழித் தினமாக ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

> இந்தியாவில் நாடு தழுவிய ரீதியில் 880 மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. இந்திய அளவில் கடந்த காலத்தில் வழக்கில் இருந்த மொழிகளில், இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர், 220 மொழிகள் மறைந்து விட்டன என ஆய்வுகளில் இருந்தும் அறியக்கூடியதாக உள்ளது. இன்றைய உலகில் வழக்கில் இருக்கக் கூடிய சகல மொழிகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை அழியவிட்டுவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் தற்போது பயன்பாட்டில் உள்ள மொழிகளில், ஒவ்வொரு வருடமும் 10 மொழிகள் அழிந்து வருவதாக ஆய்வுகள் தெரிவித்து வருகின்றன. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் இருக்கின்ற மொழிகளில் பல மறைந்து போய் விடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதற்கான அபாய அறிவிப்பை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கல்விக்கான அமைப்பு எச்சரிக்கையாக விடுத்திருக்கின்றது.

இன்று உலகில் வழக்கில் உள்ள ஏறக்குறைய ஆறாயிரம் மொழிகள் தமது இருப்பைத் தக்கவைக்கும் முயற்சியின் கடைசிக் கட்டத்தில் நிற்கின்றன. இவற்றுள் அரைவாசிக்கும் அதிகமானவை ஒவ்வொன்றும் 10 ஆயிரத்துக்குக் குறைவான மக்களால் மட்டுமே பேசப்படுகின்ற மொழிகளாக இருப்பதாகவும், ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கல்விக்கான அமைப்பு விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உலகில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமைவாய்ந்த மொழிகளில் தமிழும் ஒன்றாக உள்ளது. இலத்தீன், பாரசீகம், கிப்ரு, கிரேக்கம், சீனம் போன்ற மொழிகளும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன. பல மொழிகள், உலகத்தில் எந்தச் சூழ்நிலையில் அழிந்து போயின என்பதற்கான காரணிகள் பல உள்ளன.

ஐரோப்பிய காலனித்துவ வருகை, பல நிலப்பரப்புக்களின் பாரம்பரிய மொழிகளில் பலவற்றை இல்லாமற் செய்த காரணிகளில் முக்கியமான தொன்றாகும். சொந்த மக்களால் அவர்களது மொழி கைவிடப்பட்டு பிற மொழிக்குள் சங்கமித்தல், ஆதிக்க மொழியின் ஊடுருவலுக்குள் மூழ்கித் தாய் மொழியை இரண்டாம், மூன்றாம் தரத்துக்குள் வைத்திருத்தல், தாய் மொழியின் சிறப்பை அறிந்து கொள்ளாமல் அதனை ஒதுக்கி வைத்திருத்தல் என்பவையும் இதற்கான காரணிகளாக அமைகின்றன.

உலகிலே 10 கோடி மக்கள் வரை தமிழ் மொழியை பேசுகின்றனர், தமிழராக இருக்கின்றனர். அழிந்துவரும் மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றெனவும் தெரிவிக்கப்பட்டிருப்பதை உலக தாய் மொழித் தினத்தில் ஒவ்வொரு தமிழ் மகனும் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்தில் ஏற்பட்டு வருகின்ற கால மாற்றங்களில் நூறு ஆண்டுகளில் அழிந்து விடுகின்ற 25 மொழிகளில் தமிழ்மொழி 8 ஆம் இடத்தில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ, 12 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரிக்கை செய்திருந்தது.

தேசம்,நாடு என்ற கோட்பாடும், அதன் எல்லைகளும் அவற்றுக்கென அரச மொழிகளும் உருவாக்கப்பட்ட பின்னர், அதற்கு அடுத்ததாக இருக்கின்ற மொழிகள் பலம் இழந்த நிலையை அடைந்தன. இன்று அழிந்து வருகின்ற மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுவது கவலைக்குரியதொன்றாகும்.

உலகில் உள்ள ஐந்து கண்டங்களிலும் வாழும் தமிழ் மக்கள், மொழி ரீதியாகத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்ற பட்டியலில், 17ஆவது இடத்தில் இருக்கின்றனர். செம்மொழிகள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆறு உலக மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். அது உலகப் பொதுமொழி, பக்தி மொழி என்பதையும் இன்றும் தமிழ் மக்கள் உணர்வதாக இல்லை. செம்மொழித் தகைமை பெற்ற பிற மொழிகளுக்கு இல்லாத மேன்மையும் உயர்வும் தமிழ் மொழிக்கு உண்டு.

இன்று வாழ்ந்து வருகின்ற தமிழர்களிடையே தமிழ் மொழி எந்த அளவுக்கு மொழியின் சிறப்பு உணர்ந்து பேசப்படுகின்றது என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

எழுத்துமொழி, பேச்சுமொழி, பயன்பாட்டு மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழ் மொழி, தமிழ் மக்களாலேயே தேவையற்ற ஒன்றாகவும், இன்றைய தமிழர்களின் நாகரிக வாழ்க்கைக்குப் பயன்படுத்த முடியாத ஒன்றாகவும் கருதப்படுகின்றமை, கவலை தருமொன்றே.

இலங்கை மற்றும் தென்னிந்தியத் தமிழர்களின் மனங்களின் இத்தகைய மனப்பாங்கு குடிகொண்டுள்ளது. தமிழர்களில் ஆயிரத்தில் ஒருவருக்காவது தமிழ்ப் பெயர் இருப்பது அரிதாகும். தமிழர்களுடைய வாழ்வியலில், தமிழ் மொழியின் பேச்சு வழக்கு நடைமுறைகளில் பிறமொழிகளின் கலப்புகள் ஊடுருவி நிலைபெற்றுள்ளன.

தமிழ் மொழி அறவழிகளையும் சமயக் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு, அறிவியல் மொழியாக, அன்புமொழியாக, பண்புமொழியாக, அமைதி மொழியாக, தொன்மை வாய்ந்த மொழியாக உலகத்தில் சிறப்புக்களோடு வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய ஒரே மொழி என்பதில் இரண்டுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.


மொழியானது, சமயங்களோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டதாகும். சமயங்கள் மக்களினது வாழ்க்கையை நெறிப்படுத்துவன. சீரான நேர்வழியில் வாழ்வைக் கொண்டு செலுத்துவதில் சமயங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ் மொழியானது சகல சமயங்களில் இருக்கக்கூடிய பல கருத்துக்களையும் உள்வாங்கி ஏற்றுக் கொண்டு வளர்ந்ததொரு மொழியாகும்.

தமிழின் தோற்றத்தையும், அதன் கட்டுக் குலையாத சீரிளமையையும் பலரும் போற்றிப் புகழ்வதைக் கேட்கவும், வாசிக்கவும் இனிமைதான். ஆனால், இத்தகைய செயற்பாடுகள் மட்டுமே எமது [illegible] நடை பெற்றுக் கொண்டு இருக்கின்ற சர்வதேச மயப்படுத்தலில் இருந்து தப்பிப் பிழைத்து உயிர் வாழ வைக்கப் போதுமானவையா...?


உலகில் வாழுகின்ற மக்களில் பத்துக் கோடி தமிழ் மக்கள் இன்று தமிழ் மொழியைப் பேசுகின்றனர். இருந்தபோதிலும், அது அழிந்து வருகின்ற மொழிகளுள் ஒன்று என்பது கவலைதரும் ஒரு செய்தியே.

தமிழர்களுக்குரிய நாடு என்று ஒன்று இல்லை, அரசு இல்லை, இதனால் தமிழ் மொழியைப் பாதுகாக்க முடிய வில்லை என்ற வாதமும் முன்வைக்கப்படலாம், அது பொருத்தமாகாது. தமிழை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள், வழி முறைகளை நாம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்பதே உண்மை.

உலகிலேயே முதன் மொழியான தமிழ் மொழி, வாழும் மொழியாகும். சங்க காலத்தில் தோன்றிய அகநானூறு, புறநானூறு, நற்றிணைனூறு, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுனூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் ஆகிய எட்டுத் தொகை நூல்களும், ஆற்றுப் படை நூல்களும் அறக்கருத்துக்களை தமிழர் வாழ்வுக்கும், தமிழ்மொழிக்கும் அணி சேர்க்கின்றன. தமிழ் மொழியின் இருப்பை நாமே பாதுகாக்க வேண்டும். மொழி என்பது வெறும் தொடர்புக்கான சாதனம் மட்டுமல்ல. அது தேசியத்தின் உயிர் மையம். தேசியத்தின் அடையாள தொன்மையானது. அதனைச் சிதைவடையாமல் காப்பதும், மேலும் மேலும் வளர்ப்பதும் இன்றைய காலகட்டத்தின் உடனடித் தேவையாகும்.



> "
> உலகில் உள்ள ஐந்து கண்டங்களிலும் வாழும் தமிழ் மக்கள், மொழி ரீதியாகத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் என்ற பட்டியலில், 17ஆவது இடத்தில் இருக்கின்றனர். செம்மொழிகள் என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆறு உலக மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். அது உலகப் பொது மொழி, பக்தி மொழி என்பதையும் இன்றும் தமிழ் மக்கள் உணர்வதாக இல்லை. செம்மொழித் தகைமை பெற்ற பிறமொழிகளுக்கு இல்லாத மேன்மையும் உயர்வும் தமிழ் மொழிக்கு உண்டு.



# வாசகர் திருமுகம்

## பாதிப்புற்றோர் சரியாக இனங்காணப்பட்டு உதவி வழங்கப்பட வேண்டும்

பருவமழை பொய்க்குமானால் காலபோக நெற்செய்கை மட்டுமென்றல்லாது, சிறுதானியப் பயிர் செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கை என்பவற்றுக்கும் தாக்கம் ஏற்படும் என்பது தெரிந்த விடயமே. தமிழர் பகுதியின் நிலங்கள் வானம் பார்த்த பூமி எனச் சுட்டப்பட்டு வருகின்றன. உலக சூழலியல் மாற்றம், பூமி படிப்படியாக வெப்பமடையும் தன்மை என்பவற்றால் உலகின் பருவநிலைகளில் எதிர்பாராத மாற்றம் ஏற்பட்டு வருகின்றது.

கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக நிலவி வரும் கால நிலை மாற்றம், இந்த முறையும் வழக்கம்போல் மாரிமழை காலத்தில் கடும் வெப்பம் காரணமான வறட்சிக்கு வழி வகுத்தமை கவலை தருமொன்றே. தமது நெற்செய்கை உட்பட விவசாய முயற்சிகள் பொய்த்துப் போனதால், எம்மவர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்தையும், அதே சமயம் பெரு நட்டத்தையும் எதிர் நோக்க நேர்ந்துள்ளது.

நாடு தழுவிய ரீதியிலான கடும் வறட்சி காரணமாக, விவசாய முயற்சிகள் பாதிப்புற்றதன் காரணமாக, அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அடுத்த மாதத்திலிருந்து சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கும்வரை மாதாந்தம் பத்தாயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்க உத்தரவிட்டுள்ளது.

நல்ல விடயம்தான். ஆனாலும் இதனைச் செயற்படுத்தும்போது எந்த அளவுக்கு உண்மையில் பாதிக்கப்பட்ட சகல விவசாயிகளும் உரிய வகையில் இனங்காணப்பட்டு, நியாயமான விதத்தில் அரசின் உதவித் தொகையைப் பெற வாய்ப்புக்கிட்டும் என்பது சந்தேகமே. எனவே அரசு இது விடயத்தில் சம்பந்தப்பட் அதிகாரிகள் ஊடாக உண்மையான பாதிப்புக்கு உள்ளான விவசாயிகளை இனம் கண்டு, அவர்களுக்கு உதவவேண்டிய தனது கடப்பாட்டை உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். அரசு இது விடயத்தில் மனம் கொண்டு செயற்படுமா?

*பாதிக்கப்பட்ட விவசாயி*
*இ.அரு[illegible]ாசலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதா மேத்தா தலைமையில் வகவத்தின் 34ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 34வது பௌர்ணமிக் கவியரங்கு கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை கொழும்பு அல்ஹிக்மா கல்லூரியில் நடைபெற்றது. வகவத்தின் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வை நெறிப்படுத்தினார்.

கவியரங்கு, சுடர் ஒளி ஞாயிறு வெளியீட்டின் பிரதம ஆசிரியர் ராதா மேத்தா தலைமையில் நடைபெற்றது. கவிஞர்கள் எம். பிரேம்ராஜ், தாஜ்மஹான், கவிக்கமல் ரஸீம், சுபாஷினி பிரணவன், வெளிமடை ஜஹாங்கீர், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், தேஜாஸ்ரீ பிரணவன், ஆஷிகா ராஹிலா ஆலம், அப்துல் அஸீஸ், ஜோயெல் ஜோன்சன், மட்டக்களப்பு க. லோகநாதன், மலாய்கவி டிவங்கோ, வாழைத்தோட்டம் எம். வஸீர், ஜைலா பார்த்திபன் (ஒளி அரசி), எஸ். தனபாலன், கம்மல்துறை இக்பால் ஆகியோர் தங்கள் உணர்ச்சி பொங்கும் கவிதைகளால் அரங்கைக் கலகலப்பாக்கினர்.

மறைந்த ஸ்தாபகச் செயலாளர் கவின் கமல் இர்ஷாத் கமால்தீன் நினைவாக வெளியிடப்பட்ட 'படிகள்' சஞ்சிகை, அதன் ஆசிரியர் வசீம் அக்ரம் மற்றும் கட்டுரை ஆசிரியர் டாக்டர் தாசிம் அகமது ஆகியோரால் வகவத்திற்குக் கையளிக்கப்பட்டது. அதனை, செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி, மேமன்கவி, ஈழகணேஷ் ஆகியோர் வகவத்தின் சார்பாகப் பெற்றுக் கொண்டனர்.

கலைவாரிதி கலீல், ஒளி அரசி சஞ்சிகை ஆசிரியர் ஆர். ஜனாதன், நாச்சியாதீவு பர்வீன், யாழ் அஸீம், ஏ.எம்.எஸ்.உதுமான், அ.ரெளிபேட், இப்னு அஸுமத், நஹீதா சப்னம், கவிநேசன் நவாஸ், 'நிஜம்' நிஜாம் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

வலம்புரி கவிதா வட்டம்

34வது பௌர்ணமி கவியரங்கு



# நன்றி செலுத்தும் வழிபாடும் நூல் வெளியீடும்












சுன்னாகம் இறையியற் கல்லூரியின் விரிவுரையாளர் வண. ஜெயராசா தேவ அருட் செல்வ குருத்துவப் பணியில் 25 ஆண்டுகள் நிறைவு செய்ததையொட்டி கடந்த 18 ஆம் திகதி இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடும் நூல் வெளியீடும் இடம்பெற்றுள்ளன. மருதனார்மடம் இறையியற் கல்லூரியில் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. நன்றி செலுத்தும் வழிபாட்டு நிகழ்வுக்கு வண.ஜெய.ஞானப்பிரகாசம் தலைமையேற்று நடத்தினர். வண. ஐ.இராஜ்குமார் நூல் வெளியீட்டு ஒழுங்கமைப்புக்குப் பொறுப்பாகச் செயலாற்றினார். தலைமையுரையை முன்னாள் பேராயர் அதி வண கலாநிதி. எஸ்.ஜெபநேசன் நிகழ்த்தினார். தணியாத தமிழ்த் தாகம் – தனிநாயகம் அடிகளார் என்ற தலைப்பிலான நூல் இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்தான் எந்தன் வாழ்க்கை

## ராஜகவி ராகில் கூறுகிறார்

■ எஸ்.மல்லிகா

ஒரு மொழி நாகரிகம் அடைந்த மொழியா அல்லது நாகரிகம் அடையாத மொழியா என்பதைத் தீர்மானிப்பதே கவிதை மொழிதான் என்று கூறுகிறார் பேராசிரியரும் கவிஞரும் எழுத்தாளருமான ராஜகவி ராகில். உதயன் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென் கிழக்கிலங்கையிலுள்ள நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ராஜகவி ராகில், பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பாடசாலைக் காலத்தில் இருந்தே எழுதி வருபவர். இவரது மனைவியும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகக் கல்வி கற்றவர். தற்பொழுது தென்னாபிரிக்காவில் அமைந்துள்ள சீசெல்சு நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தில் இருவரும் பேராசிரியர்களாகக் கடமை புரிந்து வருகின்றனர். இவர்களது மகளான ஹனீக்கா ராகில், சட்டத்துறை மாணவி. ஆங்கில மொழியில் சிறுகதைகள் எழுதி வருகிறார். அத்துடன், தமிழ்த் திரைப்படப் பின்னணிப் பாடகியாகவும் இருக்கிறார். கவிதை, சிறுகதை, நாவல், பயணக் கட்டுரைகள் என எழுதி வரும் ராஜகவி ராகில், தமிழ்தான் தனது வாழ்க்கையாக இருக்கிறது என்று கூறுகிறார். இனி அவரது நேர்காணலிலிருந்து.

**கேள்வி**- எழுத்துலகில் தாங்கள் சாதித்ததாக எதனைக் கருதுகிறீர்கள்?

**பதில்**- எழுத்து என்பதும் மொழி என்பதும் மகா கடல். அதில் ஒரு சிறுதுளி நான் என்பதிலும் எனக்குச் சந்தேகம். இதற்குள் சாதனை எல்லாம் கிடையாது. ஆரம்பத்தில் எனது பெயர் வர வேண்டும் என்பதற்காக எழுதினேன். பின்னர் எல்லோருக்கும் தெரிந்தவனாக இருக்க வேண்டும் என்பதற்காக எழுதினேன்.

இவ்வாறு எழுத்துலகில் 35 வருடங்களாக எழுதி வருகிறேன். இதில் இரண்டு தசாப்தங்களாக தமிழுக்காக எழுதி வருகிறேன். உண்மையான இதய சுத்தியுடன்– தமிழ் பக்தியுடன் எழுதும் போது, புகழும் வந்து சேர்ந்துகொள்கிறது. தமிழே சாதனை மொழி தான். என்னைப் பொறுத்தவரையில், நான் இது வரை சாதித்ததாக நினைக்கவில்லை. அதனைக் காலந்தான் சொல்ல வேண்டும்.

**கேள்வி**- உங்களுக்கு ஆத்ம திருப்தியைத் தந்த படைப்பு எது?

**பதில்**- இன்னுமொரு சுவாசம் என்ற எனது சிறு கதை நூலைக் குறிப்பிடலாம். போர்க்காலச் சூழல் பற்றிய தமிழ் மக்களின் கண்ணீர்ப் பதிவான சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத்தொகுப்பு நூல் இது. இதில் இடம்பெற்ற கதைகள் அனைத்தும் யாழ். மண்ணின் வலியும் வடிந்த குருதியும் பற்றியவை. கதைகளில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் யாழ். மண்ணின் மக்கள். பேச்சு மொழியும் யாழ். மண்ணின் மொழி. போர்க் காலத்தில் யாழ். மண் பட்ட சுவடுகளைக் கதைகளில் நான் கொண்டு வந்தது எனக்கு ஓரளவு திருப்தி தந்த விடயம்.

அடுத்து, மொழி ஒளி என்ற எனது கவிதை நூல். தமிழ் மொழியின் சிறப்பையும் அதன் அழகையும் அதன் ஆளுமையினையும் பற்றி பல படைப்பாளிகள் ஒரு சில கவிதைகள் எழுதிய போதும், நான் தமிழின் அனைத்துச் சிறப்புக்கள் பற்றியும் ஒரு நூலே எழுதி வெளியிட்டேன். இதில் 28 நீண்ட கவிதைகள் உள்ளன. இது பாகம் ஒன்று தான். பத்துப் பாகங்கள் வரக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றி எழுதியிருக்கிறேன். இதுவும் எனது இலக்கிய வாழ்வில் ஓரளவு திருப்தி தந்த விடயம்.

**கேள்வி**- கவிதை மொழியின் தனித்துவம் பற்றிக் கூறுங்கள்?

**பதில்**- ஒரு மொழி நாகரிகம் அடைந்த மொழியா அல்லது நாகரிகம் அடையாத மொழியா என்பதைத் தீர்மானிப்பதே கவிதை மொழிதான். சங்ககாலப் புலவர்கள் கையாண்ட மொழிக்கும் சங்கமருவிய காலம் தொட்டு பல்லவர், சோழர், நாயக்கர், ஐரோப்பியர், இருபதாம் நூற்றாண்டு காலம் என்று நாம் கவிதை மொழியின் போக்குப் பற்றி அவதானித்தால்– அப்படியே மாறிக் கொண்டு தான் வந்துள்ளது கவிதை மொழி.

வஞ்சிப் பா, விருத்தம், வெண்பா, கலிப்பா என ஆரம்பம் முதற்கொண்டு பாரதியின் கவிதைப் பிரவேசம் ஊடாக அது மக்கள் இலக்கியமாக மாறியது. இலகு நடை, புரியும் மொழி, புதிய கரு, புதிய கவிதை யுக்தி என மாற்றம் கொண்டது. இன்று வசன கவிதை, புதுக்கவிதை, நவீன கவிதை, பின் நவீனம், ஹைக்கூ என கவிதை தன் சிறகினை அகல விரித்துள்ளது. இதில் வானம் பாடிக் கவிகளின் வரவு– கவிதைப் போக்கின் நடை, யுக்தி போன்றனவற்றில் பெரிய அளவில் மாற்றம் உண்டாக்கின. கவிதை ஜன ரஞ்சகம் ஆனது. இதற்கு மு.மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் நல்ல எடுத்துக்காட்டு. கவிஞர் மீராவின் கனவுகள் கற்பனைகள் காகிதங்கள் நல்ல உதாரணம். கவிதையின் தனித்துவத்தை– நடை, மொழி, பொருள், யுக்தி, காலம் போன்றன தீர்மானிக்கின்றன. இது பற்றி விரிவாகப் பேச வேண்டும்.

நவீனம் என்ற பார்வையில் புரிந்துகொள்ள முடியாத, சிக்கலான நடை கொண்டு எழுதினாலும், கவிதை அதற்குள் இருக்க வேண்டும். கவிதை, வாசகன் மீது ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். தனித்துவம் என்ற வகையில், ஒன்றுமே அற்ற ஒன்றைக் கவிதை மொழி என்று குறிப்பிட முடியாது. ஒருவர் போல இன்னொருவர் எழுத வேண்டிய அவசியம் இல்லை. அப்படி எழுதினால், தனித்துவம் அற்ற இலக்கியமாக அது மாறிவிடுகின்றது. இலக்கிய விபத்து உண்டாக்கி விடும். கூவக் குயில் போதும். இன்னொரு காக்கை தேவையில்லை.


**கேள்வி**- தங்களை ஈர்த்த உலகக் கவிஞர் பற்றிக் கூறுங்கள்?

**பதில்**- மகாகவி சுப்பிரமணிய பாரதியார், கலீல் ஜிப்ரான் இருவருமே கவிதையில் அனைத்து அம்சங்களிலும் புதுமை உண்டாக்கியவர்கள். கவிதைப் புரட்சி செய்தவர்கள். இவர்கள் இருவரும் தான் என்னை அதிகம் ஈர்த்தவர்கள்.

**கேள்வி**- ஏனைய இலக்கிய ஆக்கங்களில் இருந்து கவிதை எந்த இடத்தில் வேறுபடுகிறது?

**பதில்**- அது கவிதையாக இருக்கும் பட்சத்தில்– மொழியைப் பூவாக்கும், மொழியைத் தீயாக்கும், மொழியைத் தேனாக்கும், மொழியைத் துப்பாக்கியாக்கும் சந்தர்ப்பத்தில் கவிதை ஏனைய இலக்கிய ஆக்கங்களில் இருந்து வேறுபடுகின்றது.

**கேள்வி**- விநோதங்களின் விளைநிலம் சினிமா. அதிலே எப்படித் தங்களால் சாதிக்க முடிகிறது?



**பதில்**-திரைப்படத் துறையில் இருப்பதே ஒரு சாதனைதான் அது ஒரு பிரமாண்ட அதி சக்தி வாய்ந்த ஊடகம். இப்படிப்பட்ட சினிமாத் துறையில் நுழைவதற்கும் அதில் நின்று நிலைப் பதற்கும் அதி திறமை வேண்டும். அத்தோடு, நல்ல சந்தர்ப்பங்களும் அமைய வேண்டும். நான் அதிகமான திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதி வருகிறேன்.

எனது கவிதைகளின் நடை, நான் கையாள்கின்ற தமிழ், எனது படிமங்கள், குறியீடுகள், கருப் பொருள் என அனைத்துவிதமான கவிதைக்கு உரிய ஒரு புது மொழியைப் படித்து அதில் கவரப்பட்ட சினிமாப் படத்

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## சிறுகதை நூல் வெளியீடு

கண. மகேஸ்வரன் எழுதிய தீர்வைத் தேடும் நியாயங்கள் எனும் சிறுகதை நூலின் வெளியீடு கரவெட்டி பிரதேச செயலகத்தில் பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் எழுத்தாளர் மற்றும் கவிஞர் அ.அஜந்தகுமார், எழுத்தாளர் கலாநிதி சு. குணேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (108)





























## நான்கு நூல்கள் வெளியீடு

நான்காவது பரிமாணம் பதிப்புகளாக கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை, கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் எழுத்தாளர்கள், க.நவம் மற்றும் ஷியாமளா நவம் ஆகியோர் எழுதிய நான்கு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் மண்டபம் நிறைந்த சபையோர் முன்னிலையில் வெகு சிறப்பாக நடந்தேறியது.

# தமிழ்தான் எந்தன் வாழ்க்கை...

*(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பாடல்கள் எழுதும் சந்தர்ப்பத்தைத் தருகிறார்கள்.

நடிகை, இயக்குநர் ராதிகா– இயக்குநர், தயாரிப் பாளர் ராஜராஜா– இயக்குநர் ஆனைவாரி சிறீதர்– இயக்குநர் சுப தமிழ்வாணன்– இயக்குநர் ஆனந்த்– இயக்குநர் பொள்ளாச்சி சசிதரன் என அதிகமான திரைப்பட இயக்குநர்கள் எனது கவிதைகளின் தீவிர இரசிகர்கள். மீண்டும் அம்மன் திரைப் படம் எனது சினிமா வாசலைத் திறந்துவிட்டது.

கூட்ஸ் வண்டியிலே, யாவும் காதலே, சந்திரிகா, நீங்க அடிவாங்காத ஏரியாவே கிடையாது, அழிச்சாட்டியம், கவலைப்படாத காதலர் சங்கம் என என் திரைப்படத்துறைப் பயணம் சென்று கொண்டிருக்கிறது. இவற்றைவிட, அதிகமான ஆல்பங்களுக்கும் பாடல்கள் எழுதி வருகிறேன்.

**கேள்வி**- தமிழ்நாட்டில் தங்கள் படைப்புக்களுக்கு எத்தகைய வரவேற்புக் கிடைக்கிறது?

**பதில்**- தமிழின் தாயகம் தமிழ்நாடுதான். ஒரு இலக்கியப் படைப்பாளன் தமிழ் நாட்டு ஆய்வாளர்களால்– விமர்சகர்களால் அங்கீகரிக்கப்படுகின்ற போது, உலகம் அவனைக் கூர்ந்து பார்க்கவும் அவனுடைய இலக்கியப் படைப்புக்களைத் தேடிப் படிக்கவும் ஆரம்பிக்கிறது. இதற்கு முக்கிய காரணம், அங்குள்ள தமிழ் மொழி– தமிழ் இலக்கியம் சார்ந்தவர்களின் பரந்த– விரிவுபட்ட தொகை, வாசகர்களின் விரிவு, ஈழத்து ஆளுமை கொண்ட தமிழ் அறிஞர்களின் இடப்பெயர்வு, அவர்களின் இடப்பெயர்வுக்கான யுத்த சூழல் என்பன தமிழ்நாட்டில் தமிழ் நாட்டின் இலக்கிய இருத்தலுக்குக் காரணங்களாகிவிட்டன.

அண்மைக்காலமாக ஈழத்து இலக்கியப் படைப்பாளர்களைத் தமிழ்நாடு உயர்ந்தும் வியந்தும் பார்க்கத் தொடங்கி இருக்கிறது. ஈழத்து இலக்கியக்காரர்களும் தங்களுக்குரிய தனித்துவம் பேணி வந்தாலும், தமிழ்நாட்டு ஆய்வாளர்கள் மற்றும் விமர்சகர்கள், வாசகர்கள், பல்கலைக்கழகங்கள் ஈழத்து இலக்கியப் படைப்புக்களையும் படைப்பாளிகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். நூல்களின் விற்பனையும் பரந்த வாசகர்களைக் கொண்ட தன்மையுந்தான் இதற்குக் காரணம்.

**கேள்வி**- தமிழ்நாட்டில் அந்நாட்டுப் படைப்பாளிகளுடன் ஒப்பிடுகையில், ஈழத்துப் படைப்பாளிகளின் நிலை எவ்வாறுள்ளது?

**பதில்**- ஜெயகாந்தன், அசோகமித்திரன், சுஜாதா, கோணங்கி, தோப்பில் மீரான், கவிக்கோ அப்துல் ரஹ்மான், [illegible] வைரமுத்து, மு.மேத்தா என தமிழ்நாட்டுப் படைப்பாளிகளை நாம் அறிந்த அளவுக்கு, எமது ஈழத்துப் படைப்பாளிகளைத் தமிழ்நாடு அதிகம் அறிந்துகொள்ளவில்லை. ஆனால், இந்தச் சூழல் இப்போது மாறி வந்துகொண்டிருப்பது மிக ஆரோக்கியமான விடயம்.

**கேள்வி**- இதுவரை தாங்கள் எழுதியுள்ள நூல்கள் குறித்துக் கூறுங்கள்?

**பதில்**- இதுவரை 16 நூல்கள் எழுதியிருக்கிறேன். உன்னிடம் விரல்கள் கேட்கிறேன், கண்ணால் உன்னைத் தொடுகிறேன், என் உயிரும் உன் முகவரியும், இன்னுமொரு சுவாசம் (சிறுகதைத் தொகுப்பு), மிட்டாய் மலை இழுத்துச் செல்லும் எறும்பு (நாவல்), தேவதையின் அந்தப்புரத்தில் பட்டாம் பூச்சிக் குடியிருப்பு, யாழ் மீட்டிய கண்கள் (யாழ்ப் பாணப் பயண அனுபவத் தொகுப்பு), சிலந்தி பின்னிய பட்டு வலையில் சிக்கிய விண்மீன்கள், நீ கேட்ட கவிதை, சின்னச் சித்திரங்களில் சூரியன், மன வனத்தில் நந்தவனம், இப்படிக்குப் பூங்காற்று, பள்ளத்தாக்கில் சிகரம், மொழி ஒளி (இது தமிழ் மொழியின் சிறப்புக்கள் பற்றிய ஒரு தனி நூல்), சட்டைப் பைக்குள் சிறகு, உடைந்த மழையில் நனைந்த பட்டாம் பூச்சி. அத்துடன், அன்புடன் பூங்காற்றுக்கு (இது ஒரு தொகுப்பு நூல். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் [illegible] எப்.எம். வானொலியில் நான் தொகுத்து அளித்த ஒலி மஞ்சரி நிகழ்ச்சியில் நேயர்கள் எழுதி நான் வாசித்து ஒலிபரப்பிய கவிதை நூல்.

**கேள்வி**- இணையத்தளங்களில் வெளியாகும் படைப்புக்கள் குறித்த தங்கள் பார்வை எவ்வாறுள்ளது?

**பதில்**- இணையத்தளங்கள் தமிழ் இலக்கியத்துக்கும் படைப்பாளிகளுக்கும் கிடைத்த நவீனம் வழங்கிய வரம். சிறந்த இலக்கிய ஆளுமை உள்ளவர்கள் நல்ல படைப்புக்களை முன்வைத்தும் பதிவு செய்தும் வருகின்றனர். இது தமிழ் இலக்கியத்தின் ஆரோக்கியமான நவீன சூழல். அதேநேரம், புதிதாக எழுத வருபவர்களுக்கும் நல்ல களம். அவர்கள் தங்களை வெளிப்படுத்தச் சிறந்த தளம்.

இருப்பினும், எழுத்துப் பிழைகளோடும் இலக்கணப் பிழைகளோடும் எழுதுபவர்களும் இணையத்தில் எழுதுகிறார்கள். அவர்கள் தங்கள் இலக்கியப் படைப்புக்களைச் சரி பார்த்த பின் பதிவிடுவது அவர்களுடைய வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அதேநேரம், தரமற்ற இலக்கியப் படைப்புக்களும் வருகின்றன. இவர்கள் தேடலும் அதிக வாசிப்பும் வேண்டி நிற்பவர்கள்.

**கேள்வி**- வளரும் படைப்பாளர்களுக்குத் தாங்கள் கூற நினைப்பது என்ன?


**பதில்**- நிறைய வாசியுங்கள், நிறையத் தேடுங்கள், பழைய இலக்கியங்களைப் புரட்டுங்கள், அவசரப்படாதீர்கள்– நிதானம் பேணுங்கள். உங்கள் வாசலையும் நாடி வரும் வெற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மோடி எங்கட கலை;

## அதை சரியா வளப்படுத்தி காப்பாத்தவேணும்

### –சொல்கிறார் அண்ணாவியார் கி. கிறிஸ்தோப்பர்



சி.ப.வேந்தன்

"கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம், போக்கு அது விளிந்தற்று" என்று வள்ளுவனால் உவமை காட்டிக் கூறப்பட்ட கூத்துக்கலை இந்தக் குறளில் சொல்லப் படும் பார்வையாளர்கள் கலைந்து செல்வது போல், இன்று எம்மிலிருந்தே கலைந்து சென்றுகொண்டிருக்கிறது. ஆனாலும் ஆங்காங்கே கூத்துக்கலையை உயிராய் மதிக்கும் கலைஞர்கள், அமைப்புக்களால் அவை இன்னமும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பது நம்பிக்கையளிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கடலை அண்டிய பிரதேசங்களில், கூத்துக்கலையும் கூத்துக்கலைஞர்களும் நிறைந்து இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் குருநகர் பிரதேசத்தின் கலை அடையாளங்களில் ஒருவரான அண்ணாவியார் கி.கிறிஸ்தோப்பர். கலாபூசணம், யாழ்ரத்னா, மரபுக்கலைச்சுடர், கலைத்திலகம், கலைமாமணி என்ற விருதுகளால் கௌரவிக்கப் பட்ட மூத்த கலை ஆளுமை. 35க்கும் மேற்பட்ட நாட கங்களில் நடித்துள்ள இவர், ஈழத்துத் திரைப்படமான பொன்மணியிலும் படகோட்டியாக நடித்திருக்கிறார். பண்டார வன்னியன் கூத்து நாடகத்தை வீடியோதிரைவடிவில் கொண்டுவந்து, பலரிடம் அது போய்ச்சேர முன்னின்று உழைத்து, கூத்தைப் பரவலாக்க ஒரு புதிய அணுகு முறையை உண்டாக்கியிருக்கிறார். நடிகர் என்பதற்கப்பால் தான்சார்ந்த ஊரில் பலராலும் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் அணுகும் ஒரு சமூக சேவகனாக இருக்கும் இவரை புதன்பொய்கை இதழுக்காக சந்தித்தேன்.

"எனக்குச் சின்ன வயசா இருக்கும்போது, அப்பா சாப்பிட்டுவிட்டு மத்தியானத்தில படுத்தவாறு கூத்துப்பாட்டுக்களைப் பாடுவார். அவர் மேடையில் நடிக்கவும் இல்லை; நாடகத்துக்குப் பின்னணி பாடவும் இல்லை. ஆனா, வீட்டில இருந்து நல்லாப் பாடுவார். அதைக் கேட்டுக்கேட்டு நானும் பாடி, எனக்கும் அது பரிச்சயமாயிட்டுது. அவர் சின்ன வயசிலயே இறந்திட்டார். அவர் இருந்திருந்தா இன்னும் உச்சத்தில நான் இந்தத்துறையில வளர்ந்திருப்பன். அதுக்குப் பிறகு அண்ணாவியார் சாமிநாதர், அண்ணாவியார் கிறிஸ்தோத்திரம் ஆகிய ரெண்டுபேரிட்டையும் கூத்துநாடகங்கள் பழகினனான். 66ஆம் ஆண்டு குருநகர் 'நெய்தல் வளர்பிறை மன்றம்' தயாரிச்ச 'இதயக்குமுறல்' என்ற சமூக நாடகத்திலதான் நான் முதன்முதலா நடிச்சனான். அதே ஆண்டில மேடையேறின 'கொலை மேடையில் மணமேடை' என்ற தென்மோடிக்கூத்தில இளவரசனாய் நடிச்சனான். அதில இருந்துதான் என்ர கலை வாழ்க்கை தொடங்கிச்சுது. இண்டைக்குவரைக்கும் தொடருது (சிரிக்கிறார்) இதுவரைக்கும் 35க்கும் மேற்பட்ட கூத்து நாடகங்களில நடிச்சாச்சு. இலங்கையில தயாரிச்ச 'பொன்மணி' திரைப்படத்தில படகோட்டியா நடிச்சிருக்கிறன். இலங்கை வானொலியில வானொலி நாடகம் செய்தனான். இதையெல்லாம் விட பண்டாரவன்னியன் கூத்துநாடகத்தை வீடியோ திரைப்பட வடிவத்தில கொண்டுவரவேணுமென்று விரும்பி 2010ஆம் ஆண்டு அதையும் வெற்றிகரமாய்ச் செய்து முடிச்சிட்டன். எல்லாம் திருப்திகரமா தெரிஞ்சாலும், இன்னும் இன்னும் இந்தக்கலைக்குள்ளால எதையாவது செய்ய வேணுமென்றுதான் தேடலோட இருக்கிறன்".

"முந்தி நாடகமெண்டால் எல்லாருக்கும் ஒரு வெறி மாதிரி, நானும் நானும் என்று அடிபட்டுக்கொண்டு முன்னுக்குவருவினம். புலவர் மிக்கேல்பிள்ளை, அண்ணாவியார் சாமிநாதர், அண்ணாவியார் கிறிஸ்தோத்திரம் இப்பிடி நிறைய ஆளுமைகள் எங்கள வளர்த்து விட்டவை. நாங்களும் ஆர்வத்தோட போய்ச் செய்த னாங்கள். இப்ப மேடைநாடகங்களுக்கு மதிப்பில்லை. ஆரும் வரவேற்கினமில்லை.

இப்ப இளையவர்கலெல்லாம் குறைஞ்சுகொண்டு வாறது கவலைதான். ஆனாலும் இன்றைய தலைமுறைக்கு ஏற்றதுபோல கொடுத்தால் அவர்கள் இதில ஈடுபாடு காட்டுவினம். உதாரணமா, நான் பண்டார வன்னியன் கூத்தை வீடியோத் திரைப்படமாக செய்யப் போறனெண்டு சொல்லி இளைஞர்களைச் சேர்க்கேக்க, முதலில அவைகள் பெரிசா ஆர்வம் காட்டவில்லை. பிறகு அவர்கள் நடித்த காட்சிகளை அவர்களுக்குப் போட்டுக்காட்டினபோது அவர்களுக்கு அதில ஆர்வம் கூடிட்டிது. பிறகு என்னைவிட அவர்கள் இதைச் செய்துமுடிக்கிறதில ஆர்வமா இருந்தார்கள். ஒருமுறை படப்பிடிப்பு நடக்கேக்க, ஒரு இளைஞனுடைய உடைக்குள் மயிர்க்கொட்டி கூட்டோடு விழுந்துவிட்டது. உடம்பெல்லாம் தடிச்சு பெரிய ஆபத்தான கட்டத்திலயும் இல்லை, எல்லாக்காட்சியையும் முடுடித்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று சொல்லி அத்தனையும் முடித்துவிட்டுத்தான் திரும்பினோம். அதில, அவருடைய அர்ப்பணிப்பைக் கண்டனான். இப்படி இன்றைய இளைஞர்களுக்கு விருப்பமில்லை; அவர்கள் செய்யமாட்டார்கள் என்று நாங்களாகவே முடிவெடுக்கக்கூடாது. அவர்களுக்கு ஏற்ற முறையில நாங்கள் கொண்டுபோனா, எங்கட கலைகளை இன்னும் பல காலத்துக்கு உயிர்ப்போட வைச்சிருக்கலாம்.

முந்தி நாடகமெண்டால் எல்லாருக்கும் ஒரு வெறி மாதிரி, நானும் நானும் என்று அடிபட்டுக்கொண்டு முன்னுக்கு வருவினம். புலவர் மிக்கேல்பிள்ளை, அண்ணாவியார் சாமிநாதர், அண்ணாவியார் கிறிஸ் தோத்திரம் இப்பிடி நிறைய ஆளுமைகள் எங்கள வளர்த்து விட்டவை. நாங்களும் ஆர்வத்தோட போய்ச் செய்த னாங்கள். இப்ப மேடை நாடகங்களுக்கு மதிப்பில்லை. ஆரும் வரவற்கினமில்லை.
இப்ப இளையவர்கலெல்லாம் குறைஞ்சுகொண்டு வாறது கவலைதான். ஆனாலும் இன்றைய தலைமுறைக்கு ஏற்றதுபோல கொடுத்தால் அவர்கள் இதில ஈடுபாடு காட்டுவினம்.



"எனக்குப் பாடல்கள்தான் தனித்தன்மையைத் தந்ததுகள். அதுவும் சோகப்பாடல்கள்தான் கூடுதலாகப்பாடுவேன். மேடையில் நாடகம் நடந்துகொண்டிருக்கும்போது பலதடவைகளில் என்னையறியாமலே உணர்ச்சிவசப்பட்டு அழுது பாடுவது என்ர வழக்கம். அதுதான் பலரையும் என்னை ரசிக்கவைச்சிருக்கு".

"எந்தவொரு நாடகத்திற்குமே அதுவும், கூத்து இசை நாடகங்களுக்கு உயிரே பாடல்கள்தான். ஆனா யாரும் அதைப் பெரிதாக கவனத்தில் எடுப்பதில்லை. பாடலுக்குத்தான் ஆட வேண்டும். எந்த ஆட்ட அசைவாக இருந்தாலும், அது பாட்டை அடியொற்றியே இருக்கவேண்டும். ஆனால், இப்ப எல்லாரும் ஆட்டத்திற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கினம். பாடலை யாரும் கவனிப்பதில்லை. பாடசாலைகளிலகூட அதைச் செய்யினம். அதால அதுபற்றித் தெரியாத சின்னப்பிள்ளைகள் அதையே பின்பற்றி வருகிறார்கள். இது ஒரு மோசமான நிலையைத்தான் கொண்டுவரும்.

தென்மோடி நாட்டுக்கூத்துக்கு ஒரு சிறப்பிருக்கு. இது இந்தியாவில இருந்து வந்த கலை இல்லை. இது ஈழத் தமிழர்களுக்குச் சொந்தமான ஒரு கலை. எங்களுக்கெண்டொரு கலை இல்லை. நாங்கள் இதைச் சரியா வளப்படுத்தி, நெறிப்படுத்தி, பாதுகாப்பா இயங்க வைக்க வேணும். நான் இதை நிறையப்பேரிட்ட சொல்லி இருக்கிறன் கதைச்சிருக்கிறன் இதை எல்லாரும் சேர்ந்தாத்தான் செய்யமுடியும். என்னால என்ன செய்ய முடியுமோ, அதை நான் இந்தக் கலைக்குச் செய்து கொண்டிருக்கிறன். இந்தக் கலையைக் கட்டிக்காக்க வேணும்; அதுதான் என்ர விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT









## ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் பொங்கல் விழா

கடந்த 14 ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் கன்பெரா நாடாளுமன்ற வளாகத்தில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழர் நடத்திய பொங்கல் விழாவும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புமே அந்த இரண்டு நிகழ்வுகளாகும்.

பொங்கல் விழாவில் சிட்னி, கன்பெரா, மெல்பேர்ண், பேர்த், அடலாயிட், மக்கே ஆகிய பிரதேசங்களிலிருந்து தமிழர்கள் பெருமளவில் வந்து கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் கவிதை, உரைவீச்சு, ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. நினைவு அஞ்சல் தலையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மறவன்புலவு க.சச்சிதானந்தன்

# மரண அறிவித்தல்



பிறப்பு
12.11.1923

இறப்பு
20.02.2017

## கந்தையா துரைராஜா

(Retired chief cashier - A Baurs & Co Ltd)

யாழ். அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ். நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராஜா 20.02.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தம்பிஐயா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணி அவர்களின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் (கொழும்பு), புவிச்சந்திரன் (லண்டன்), ரூபிச்சந்திரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கனகமாணிக்கம், முத்துமாரி ஆகியோரின் அன்புச் சகோதர னும், நளாயினி (கொழும்பு), சிவாஜினி (லண்டன்), நிருபா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், துவாரகன் (கொழும்பு), சிவேன், சியாம் (லண்டன்), தனுஸ், சுவாதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2017) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி:**
**நாச்சிமார் கோயில் வீதி,**
**நவாலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.**

**தொடர்புகளுக்கு:**

**தவமணி (மனைவி - இலங்கை)**
**0094 7736 19824**


**ரவி (மகன் - இலங்கை)**
**0094 7778 88325**

**புவி (மகன் - லண்டன்)**
**0044 2084 419834**

**ரூபி (மகன் - ஆஸ்திரேலியா)**
**0061 4029 43208**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் தாய்மை



எஸ்.மல்லிகா

மனிதர்கள் எப்படி வாழவேண்டும் என்ற வழிமுறைகளை வகுத்து இயம்புவன இலக்கியங்கள். இல்லறம் முதல் துறவறம் வரை அவை மனிதர்களுக்கு வாழும் பாங்கை அழகாய் எடுத்துரைக்கின்றன. இந்த இல்லறத்தின் தெய்வமாகப் போற்றப்படும் தாயைப் பற்றி இலக்கியங்கள் நவின்றிருப்பதை இங்கு நோக்குவோம்.

**குற்றங்களை மன்னிக்கும் நீதிமன்றம் அன்னை**

மனித வாழ்வு உறவுகளால் சூழப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. இவற்றில் எல்லா உறவுகளும் சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்பட்டாலும், தாயின் உறவு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதனால் தான், தாயிற் சிறந்த கோவிலுமில்லை என்றார் ஔவையார். அப்படிப்பட்ட உறவை,

.....என் செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை (நான். 35: 1-2) என்கிறது நான்மணிக்கடிகை. தவறு செய்தாலும், அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய தாயை விடச் சிறந்த உறவு வேறில்லை என அந்த இலக்கியம் குறிப்பிடுகிறது. இதனால்தான், தன் பிள்ளைகளின் தவறுகளை மன்னிக்கும் ஒரே நீதிமன்றம்-தாய் என்று போற்றப்படுகிறாள்.

**அடிக்கினும் தாயை வெறுக்காது பிள்ளை**

ஒரு தாய் தன் குழந்தையை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்பதற்காகக் குழந்தை தவறு செய்யும்போது அடிக்கின்றாள்.
இருப்பினும் குழந்தை தாயை நோக்கியே செல்லும். இதுவும் தாய்மைக்கு இருக்கும் தனிச்சிறப்பாகும். இதனை,

"………குழவி அலைப்பினும்
அன்னே என்றோடும் சிலைப்பினும்" (நான். 25.1-2) என்ற வரிகள் சிறப்புற உணர்த்துகின்றன. இக்கருத்தைக் குறுந்தொகையும்,

"நனைமுதிர்……..
தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு அன்னாய்" என்னும் குழவி5 (குறுந்.397) என்று குறிப்பிடுகிறது.

**தாய்ப்பாலில் வீரம் உண்டு**

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்குத் தாய்ப்பால் இன்றியமையாதது. குழந்தை உடல் அளவிலும், மன அளவி லும் சிறப்பானதொரு வளர்ச்சியை அடைவது தாய்ப்பாலின் மூலமே. தாய்ப்பாலில் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகம். ஆனால், தாய்ப்பால் அருந்தாத பிள்ளைகள் அடையும் பாதிப்பை,

"……………வயிறாத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்
நல்குரவு சேரபட்டார் (திரி. 84:1-2)" என்ற வரிகள் நன்கு உணர்த்துகின்றன, அதாவது, வயிறு நிரம்பப் பால் அருந்தாத குழந்தைகள் வறுமையில் வாடுவதாக இவ்வரிகள் சுட்டுகின்றன. அதேபோன்று, தாய் குழந்தையை அழைத்துப் பாலூட்டுவது தாயின் கடமையாகக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பழமொழி நானூறு,



"மலைத்தழு துண்ணாக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல் (பழ.363)" என்று கூறுகின்றது. இந்தக் கருத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக,

"உண்ண உண்ண தெவிட்டாதே அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்"
என்ற பாரதியாரின் பாடல் அமைகிறது.

மனித உறவுகளில் தலை சிறந்த உறவாகப் போற் றப்படுவது தாய்மை. ஒரு குழந்தையை இந்தச் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டுவது தாய். அவளின் வளர்ப்பு மூலம் அக்குழந்தை நற்பண்புகளைப் பெற்றுத் திகழ முடியும்.

**பிள்ளையின் பசியை அறியும் தாய்மை**

ஒரு குழந்தைக்கு உணவு ஊட்டுவதில் தாய்க்கு நிகரானவர் எவரும் இல்லை. இதனைப் பழமொழி நானூறு, குழந்தை உணவு உண்ண மறுக்கும் போது, சந்திரனைக் காட்டியும் விளையாட்டுக் காட்டியும் தாய் உணவு ஊட்டுவாள் என்பதை,

"……..வறிதுரைத்து
ஒள்ளியகாட் டாளர்க் கரிது (பழ.264:2-4)" என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. அதுமட்டுமல்ல, ஒரு பிள்ளையின் அழுகை மொழியை நன்கு உணர்ந்தவள் தாய். நோயால் அழும் அழுகை, பசியால் அழும் அழுகை என்பனவற்றின் வேறுபாடு அவளுக்குத் தான் தெரியும். அதனை உணர்ந்து, பிள்ளைக்கான கடமையை செய்வதில் தாயை விஞ்ச ஒருவர் இல்லை.

**தாயிற் சிறந்த கோயிலுமில்லை**

மனித உறவுகளில் தலை சிறந்த உறவாகப் போற்றப்படுவது தாய்மை. ஒரு குழந்தையை இந்தச் சமுதாயத்துக்கு அடையாளம் காட்டுவது தாய். அவளின் வளர்ப்பு மூலம் அக்குழந்தை நற்பண்புகளைப் பெற்றுத் திகழ முடியும். அதன் காரணமாகத் தான் அவள் தெய்வத்துக்கு நிகராகக் கருதப்படுகிறாள். இதனை நான்மணிக்கடிகை,

"…..ஈன்றாளோடு
எண்ணக் கடவுளும் இல்" (நான்.57:3-4) என்று கூறுகின்றது. அதாவது, ஒருவருக்குத் தாயை விட சிறந்த தெய்வம் இல்லை என்று கூறுகின்றது. இதன் மூலம் தாய்மைக்கு அந்தக் காலத்தில் இருந்த சிறப்பை அறியமுடிகிறது.



திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சாகித்திய விழாவும், வெருகல் பிரதேசத்தின் சிறப்புகளைப் பறைசாற்றி நிற்கும் 'வெருகலசம்' என்ற நூல் வெளியீட்டு விழாவும் கடந்த புதன் கிழமை பிரதேச செயலாளர் மா.தயாபரன் தலைமையில் ஈச்சிலம்பற்று ஸ்ரீ சண்பக மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் அதிதியாகக் கலந்துகொண்டார். நிகழ்வில் வெருகல் பிரதேசத்தில் நூறாவது அகவையைக் கடந்து வாழும் மருந்துவிச்சி க.செல்லம்மா உட்பட கலைஞரகள் கௌரவிக் கப்பட்டனர். (ய-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வியலில் பிரிக்கப்பட முடியாத அரங்கச் செயற்பாடுகள்

விவேகன்

அரங்கு என்பது மக்களது வாழ்வியலில் பிரிக்கமுடியாத ஓர் அம்சமாக விளங்குகின்றது. இது மக்களது வாழ் வியலில் மாறுபாடுகளை ஏற்படுத்திக் கொள்வதில் தனக்கான செயல் தளத்தினை வெளிப்படுத்திக் கொள்கின்றது.

அரங்கசெயற்பாடெனும்போது வெறுமனே மேடையில் நடிக்கின்ற செயற்பாடுகளை மட்டும் குறிப்பிடுவதல்ல, மாறாக அரங்கு சார்ந்த பல்வேறு செயற்பாடுகள் உள்ளடக்கப்படுகின்றன.

இவற்றில் களப்பயிற்சிப் பட்டறையானது குறிப்பிடத்தக்க செயற்பாட்டுத் தளமாக விளங்குகின்றது.

களப்பயிற்சிப் பட்டறையானது பங்கு பற்றுபவர்களிடையே உள மாறுதலை ஏற்படுத்துகின்றது. இதன் காரனமாக அரங்க களப்பயிற்சிப் பட்டறைகள் மேற் கொள்ளப்படுவது அவசியமான ஒரு செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது.

அரங்கச் செயற்பாடுகளில் பல்துறைச் செயற்பாடுகள் காணப்படுகின்றன.

அரங்க செயற்பாடுகள் மூலம் மாணவர்களிடையே ஆளுமைசார் வெளிப்பாடுகளை ஏற்படுத்துவதுடன் அவர்களது செயற்பாட்டுக்கானபின்வெளிகள் தகவமைக்கப்படுகின்றன.

பங்கு பற்றுபவர்களிடையே வித்தியாசமான மன உணர்வுகளினையும் ஏற்படுத்துகின்றது.

அரங்கக் களப்பயிற்சிப் பட்டறை எனும் போது அச்சொற்களின் பொதிந்துள்ள பொருள்களை நோக்கும்போது அதன் முதன்மையினை அறியலாம். அரங்கு எனும் சொல்லானது குறித்த இடத்தை குறித்து நிற்கின்றது அதாவது செயல் இயங்கியலுடன்கூடிய இடத்தினைக் குறிக்கின்றது.

களம் என்பது இடத்தைக் குறித்தாலும் அதன் பொருள் கொள்ளல் வேறாகின்றது. குறிப்பாக அரங்கு எனும் சொல் குறிக்கின்ற இடம் என்பது வெளியினைக் குறித்து நிற்க 'களம்' எனும் சொல்லானது பங்கு பற்றுபவர்கள் தமது ஆளுமையினை வெளிப்படுத்துவதற்கும் தம்மை இனங் கண்டு கொள்வதற்கும் தமது இயலுமையினை அறிந்து கொள்வதற்கும் இயலாமையைக் கண்டுணர்ந்து தம்மை பலம் நோக்கிய பயணத்துக்குத் தகவமைத்துக் கொள்வதற்குமான செயற்பாட்டினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. பயிற்சிப் பட்டறை எனும்போது, செயற்பாடு மேற்கொள்ளப்படுவதையும் செயற்பாட்டின் மூலம் கற்றுக் கொள்கின்ற விடயத்தைக் குறிப்பதாகவும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இத்தகைய நிகழ்வு பங்கு பற்றுபவர்களுக்கு மன மகிழ்வினையும் புதிய சிந்தனை சார் கிளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்குமான வாய்ப்பாகவும் அமைகின்றது.

களப்பயிற்சிப் பட்டறையில் பல தரப்பினரும் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலரும் பங்கு பற்றக்கூடியதாகக் காணப்படுகின்றது.

பங்கு பற்றுபவர்களது தள நிலையைப் பொறுத்து அவர்களுக்கான செயற்பாட்டு வடிவங்கள் மாற்றமுறுவதினையும் அவதானிக்கலாம்.

சிறுவர்களுக்கு மேற்கொள்ளும்போது அவர்களது வயது, அவர்களது இயங்கியல் பெறுமானம், அவர்களது உடல், உள செயற்பாட்டுக்கான தளம் என்பன கருத் தில் கொண்டே வடிவமைக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் எனும்போது அவர்களது உள நிலை செயற்பாட்டு உந்துதல் என்பவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்

இவ்வாறு எத்தளத்தினருக்கு மேற்கொள்கின்றோமோ அவர்களது ஆளுமை வெளிப்பாட்டுக்கும் அவர்களைச் செயல்முனைப்புள்ளவர்களாக்குவதற்கும் அவர்களது சிந்தனைத் தளத்தை விசாலப்படுத்துவதை நோக்காகக் கொண்டமைந்த வகையிலும் களப் பயிற்சிப் பட்டறைகள் நிகழ்த்தப்படுகின்றன.

களப் பயிற்சிப் பட்டறைகளின் உள்ளடங்கல் வெளிகளாக மகிழ்விப்பு, எண்ணக் கரு, விருத்தியாக்கம், கற்பனா சக்தியினை வளர்த்துக்கொள்ளல், தலைமைத்துவப் பண்பினை வளர்த்துக் கொள்ளல், குழுச்செயற்பாடு, புதியன படைப்பதற்கான ஆற்றலை விருத்தி செய்தல், விட்டுக் கொடுப்புப் போன்ற பல விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு களப்பயிற்சிகள் வடிவமைக்கப்படுகின்றன.

பங்குபற்றுநர்கள் தம்மை முழுமையாக வெளிப்படுத்திக் கொள்வதற்கும் தமக்கான சுதந்திர வெளியினை உருவாக்கிக் கொள்வதற்கும் களங்கள் திறந்து விடப்படுகின்றன.

பயம், வெட்கம் ஆகியன மனிதனுக்கான மிகப்பெரிய எதிரியாகக் கொள்ளப்படுகின்றன. நீக்கப்படுகின்ற போது புதிய சிந்தனைகள் மனங்களில் மேற் கிளம்புவதுடன் கற்பனா சக்தி உருவாவதினை அவதானிக்கலாம்.

களப்பயிற்சிப் பட்டறைகளின் ஆரம்பத்தில் ஒதுங்கியும் வெட்கத்துடனும் செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு தயக்கத்துடனும் பலர் காணப்படுவார்கள். அவர்களில் களப்பயிற்சிப் பட்டறையின் நிறைவின் போது செயல் முனைப்புள்ளவர்களாகவும் தலைமைத்துவப் பண்புள்ளவர்களாகவும் பலருடனும் இணைந்து இயங்கக் கூடியவர்களாகவும் மாற்றமுறுவதைக் காணலாம்.

இதற்கான பின் தளச் செயற்பாடுகளாக நோக்கும்போது ஆடல் பாடல் செயற்பாட்டிற்கு முழுமையாக அவர்களை ஊக்குவித்தல், தன்னம்பிக்கையினை ஊட்டுதல் போன்ற செயல்தளங்களின் மூலம் அவர்கள் இயங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

அனைவரும் திறமையுள்ளவர்கள் என்பதும் அவர்கள் உருவாகுவதற்கு சூழ்நிலை இன்றியமையாதது என்பதும் பயிற்சிகளின்போது வெளிப்படுகிறது. இதனையே இடம் கொடுத்தல் எனக்குறிப்பிடுகின்றனர்.

இடம் கொடுக்கும்போது அவர்கள் செயற்படுவதற்கான வாய்ப்பு உருவாகும் போது தம்மைத் தாமே வெளிப்படுத்திக்கொள்கின்றனர். உளவியல் ரீதியான அணுகுமுறையுடன் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களது வாழ்வில் ஏற்படுகின்றன துன்பங்களுக்கு முகம் கொடுப்பதற்கான வழிவகையை உணர்ந்து கொள்வதற்கும் தமது இலட்சியம் நோக்கிய பயணத்தினைத் தகவமைத்துக் கொள்வதற்கும் இப்பயிற்சிப் பட்டறைகள் களமாகக் காணப்படுகின்றன.

களப்பயிற்ச்சிப் பட்டறையில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தமது அனுபவத்தினை வெளிப்படுத்தும்போது தம்மால் இவ்வளவு தூரம் யெற்பட முடியுமோ என நினைக்கவில்லை எனவும் எமக்குள் இவ்வளவு ஆற்றல் உண்டு என்பதனை அறிந்து கொண்டதாகவும் மகிழ்வாக இருப்பதாகவும் பலரும் கருத்துப் பகிர்கின்றனர்.

இத்தகைய செயற்பாடுகள் தொடர் இயங்கியலுடன் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அவ்வாறு மேற்கொள்ளும் போது புதிய ஆரோக்கியமான செயல் முனைப்புள்ள சமூகம் உருவாகும்.

Cosmo HERBS

உங்களுடைய அழகினை பாதுகாத்துக்கொள்வதற்கு தற்போது கொஸ்மோ உற்பத்திகள் ஏராளம்....

வெண்மையான தோலினையும் அதேபோன்று ஆரோக்கியமான கவர்ச்சிகரமான முடியினையும் உருவாக்கிக்கொள்ள முடியுமாயின் அவளால் உண்மையில் ஓர் அழகியாக இருக்கமுடியும். உங்களது தோலினை வெண்மையானதாக மாற்றி முடியினை ஆரோக்கியமானதாக பேணிக்கொள்வதற்கு தற்போது உங்களுக்காக கொஸ்மோ உற்பத்திகள் பல எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எந்நாளும் கொஸ்மோ உங்களது நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குகின்றமையினால் உங்களிற்கு மிகச்சிறந்த உற்பத்திகளை வழங்குவதற்கு நாம் எப்போதுமே தயாராக உள்ளோம்.

கொஸ்மோ பெயர்னஸ் கிரீமானது தோலினை வெண்மையானதாக்குகின்றது.



புராதன காலத்திலிருந்து தோலினை வெண்மையானதாக்குவதற்கு அழகிகள் பயன்படுத்திய முறுகல் தாவர (Kokum) சாறு இதில் அடங்கியிருப்பதனால் உங்களது தோலிற்கு வெண்ணிறமான மென்மையான பளபளப்பு மிக்க தன்மையினை வழங்குகின்றது. முகப்பருக்கள், புள்ளிகள், தழும்புகள், சுருக்கங்கள், வியர்வை கொப்புளங்கள், கண்ணின் கீழ்ப்பகுதி கருமையாதல் போன்ற கறைகளையும் அகற்றுவதுடன் சூரிய வெப்பத்திலிருந்தும் தோலினை பாதுகாக்கின்றது.

கொஸ்மோ வைட்னிங் பேஷ் வோஷ் உங்களுக்கு ஏற்ற பேஷ் வோஷ் ஆகும்.

உங்களது தோலானது எந்தவொரு வகையினை சேர்ந்த தோலாக இருப்பினும் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் கொஸ்மோ வைட்னிங் பேஷ் வோஷ் இனை பயன்படுத்திக்கொள்ள முடியும். இதில் மென்மையான தூய்மையாக்கும் காரணி அடங்கியிருப்பதனால் நன்றாக தோலினை சுத்தம்செய்து தோலில் ஆழமாக பதிந்துள்ள தேவையற்ற எண்ணை, அழுக்கு போன்ற கழிவுப் பொருட்களை அகற்றுகின்றது. முறுகல் தாவர சாறானது மருத்துவ குணத்தினை கொண்டிருப்பதனால் இது மிகவும் விசேடமான ஒன்றாகும்.

தலைமுடியினை பாதுகாத்துக்கொள்வதற்கு காணப்படுகின்றது கொஸ்மோ நெல்லி ஹெயார் எண்ணை. இது தலைமுடிக்கு மிகவும் சிறந்த ஒரு மருந்தாகும். தலைமுடிக்கு மிகவும் நன்மை பயக்கும் நெல்லிச்சாற்றினை உள்ளடக்கி உங்களது முடியினை ஆரோக்கியமாக்கும் நெல்லி ஹெயார் எண்ணையானது தற்போது உங்களிற்கு கிடைக்கின்றது. கொஸ்மோ நெல்லி ஹெயார் எண்ணையினை பிரயோகிப்பதனால் முதிர்ச்சியின் முன்னர் தலைமுடி உதிர்தல், பொடுகு, நரைத்தல், முடியின் நுனிப்பகுதி பிளத்தல் மற்றும் தலையின் மேற்பகுதி உலர்தல் என்பவற்றை தவிர்த்து தலை முடியானது ஆரோக்கியமாக நன்றாக வளர்ச்சியடைகின்றது.

செம்பருத்தி கொண்டிஷனின் ஷம்பூ



மருத்துவ குணங்கள் நிறைந்த செம்பருத்தி சாறானது செம்பருத்தி கொண்டிஷனின் ஷம்பூவில் அடங்கியிருப்பதனால் உங்களது தலைமுடியினை மிகவும் சுத்தமாக்கி முடி உதிர்தல் மற்றும் முடியின் நுனிப்பகுதி பிளத்தல் ஆகியவற்றினை தவிர்த்து தலைமுடி உலர்தலை கட்டுப்படுத்தி முடியின் தண்டிற்கு ஆரோக்கியத்தினையும் மற்றும் பலத்தினையும் அளிக்கின்றது.

செம்பருத்தி பொடி லோஷன் தோலினை வெண்மையானதாகவும் மற்றும் வாசனை மிக்கதாகவும் ஆக்குகின்றது. ஆயுர்வேத அழகுக்கலை இரகசிய குறிப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பம் என்பவற்றினை ஒன்றிணைத்து மிகவும் பாதுகாப்பான கிரீம் ஆக செம்பருத்தி பொடி லோஷன் ஆனது தற்போது உங்களிற்கு கிடைக்கின்றது. இதில் இயற்கையான மூலிகை போஷாக்கானது 24 மணி நேரமும் உங்களது தோலிற்கு கிடைப்பதனால் தோல் உலர்தலானது தவிர்க்கப்பட்டு மிகச்சிறந்த தோல் ஈரலிப்பானது பாதுகாக்கப்படுகின்றது. மேலும் தோலினை வெண்மையானதாகவும் நறுமணம் மற்றும் புத்துணர்ச்சி மிக்கதாகவும் ஆக்குகின்றது.

சந்தன வைட்னிங் பியூட்டி சோப்

உங்களது தோலினை மிகவும் மென்மையாக்கி நறுமணத்தினை அளிக்கும் சந்தன வைட்னிங் பியூட்டி சோப்பிலுள்ள இயற்கையான வெண்சந்தன சாறு மற்றும் விற்றமின் C ஆகியவற்றின் தோலினை வெண்மையாக்கும் தன்மையினால் இது அத்தன்மையினை அளிக்கின்றது. சந்தன வைட்னிங் ஷோப் அழகிகளின் மிகச்சிறந்த தெரிவாகும்.



இவ்வாறான உற்பத்திகள் அனைத்தையும் கொஸ்மோ உங்களுக்கு வழங்குவது எப்போதும் உங்களின் அழகினை பேணிப் பாதுகாப்பதற்காகும்.

Customer Care
011 202 6858

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினைத்திறனான செவிமடுத்தல்

அ.அஜந்தன்

செவிமடுத்தல் என்பதும் கேட்டல் என்பதும் ஒரே செயற்பாடல்ல. செவிமடுத்தல் என்பது கேட்டலிலும் பார்க்க சில விசேட பண்புகளைக் கொண்டது. அதாவது கிரகித்தல், வினைத்திறனாக தகவல்களைப் பெறுதலும், பொறுப்புக்கூறலும், உரைப்பவர்களின் உணர்வுகள் தேவைகளும் இதில் அடங்குகிறது.

L- Look interested - get interested
I-Involve yourself responding
S- Stay on targt
T-Test your understanding
E-Evaluate the message
N-Neutralize your feelings

செவிமடுத்தலின் விரிவாக்கமாக ஆர்வம்காட்டல், பதிலளிப்பதன் மூலம் எம்மை ஈடுபடுத்தல், இலக்கில் ஊன்றியிருத்தல், எமது புரிந்துகொள்ளலை பரிசீலனை செய்தல், தகவலை மதிப்பிடல் மற்றும் உணர்வுகளை நடுநிலைப்படுத்தல் போன்ற விடயங்களைக் கருத்திற்கொள்ளலாம். இது உரைப்பவரை பார்த்தல், ஒலியை கேட்டல் மற்றும் உணர்தல் என்ற மூன்று செயற்பாடுகளையும் உள்ளடக்கி உள்ளது.

செவிமடுத்தல் திறனை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் வகுப்பறையில் சிறப்பாக செவிமடுத்தால் பரீட்சையை வெல்லலாம், அலுவலகத்தில் ஊழியர்கள் மேலதிகாரியின்/ பயனாளிகளின் கோரிக்கைகளையும் உத்தரவுகளையும் செவிமடுத்தால் பணி சிறக்கும், பதவி உயரும், உளவளத்துணையாளர் உதவி நாடியின் பகிர்வுகளைச் செவிமடுத்தால், அவர்களை ஆசுவாசப்படுத்த முடியும். ஒரு பயிற்சிநெறியில் பயிற்றுவிப்பாளரின் உரையைச் செவிமடுத்தல் திறன்விருத்திக்கு உதவும். இவ்வாறாகப் பல இடங்களில் வினைத்திறனான செவிமடுத்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

இருப்பினும் செவிமடுத்தலுக்குத் தயாராகும்பொழுது அதற்கு இடையூறாக இருக்கக்கூடிய காரணிகளில் கவனம் செலுத்துவது அவசியம். ஏனெனில் ஒருவரின் உரையாடலில் நிமிடத்துக்கு 125 தொடக்கம் 250 சொற்களையே எம்மால் கேட்க முடியும். ஆனால் அதிலும் 25 தொடக்கம் 50 வீதமான விடயங்களே நினைவில் நிற்கும் என்று கூறப்படுகிறது.

**எமது வினைத்திறனான செவிமடுத்தலை மேம்படுத்த சில வழிமுறைகள்**

01.ஆர்வத்துடனும்-திறந்த மனதுடனும்-பொறுமையுடனும் உற்றுக்கேட்டல் வேண்டும். அப்பொழுதுதான் எம்மால் சொல்பவரின் கருத்துக்களை முழுமையாகவும், கவனத்துடனும் செவிமடுக்க முடியும்.

02.உரைப்பவரை நேருக்கு நேர் பார்த்தலும், அவருடனான பார்வைத் தொடர்பை தொடர்ந்து பேணுவதும் உணர்வுபூர்வமாக செவிமடுப்பதோடு அவரின் உடல் மொழியையும் புரிந்துகொள்ள முடியும்.

03.செவிமடுத்தலுக்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதற்கு மனக்குழப்பம், அநாவசியமான சிந்தனைகள் போன்ற உள்ளக இடையூறுகளையும் தொலைபேசி ஒலி, வாகன இரைச்சல், வெளியே கேட்கும் பிற உரையாடல்கள் போன்ற வெளியக இடையூறுகளையும் களையவேண்டும்.

04.சாதாகமான முறையில் உடலசைவுகளின் மூலமாகவோ முகபாவங்களின் மூலமாகவோ உரையாடுபவரை ஊக்குவிப்பதுடன், அவருக்கு அனுசரணையுடன் இருப்பதையும் வெளிப்படுத்த முடியும். இதன்மூலம் நாமும் எம்மை செவிமடுத்தலில் இலகுவில் ஈடுபடுத்த முடியும்.

05.உங்கள் உடலை சற்று முன்னோக்கி உரைப்பவரின் பக்கமாக முன்நகர்த்துவதன் மூலமாக நாம் செவிமடுக்கின்றோம் என்பதை உரைப்பவருக்கு தெரியப்படுத்துவதன் மூலமாக தடையற்ற உரைநிகழ்த்தவும், செவிமடுக்கவும் உதவமுடியும்.

06.உரையாடுபவரின் கருத்தை உங்களால்

செவிமடுத்தல் திறனை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் வகுப்பறையில் சிறப்பாக செவிமடுத்தால் பரீட்சையை வெல்லலாம், அலுவலகத்தில் ஊழியர்கள் மேலதிகாரியின்/ பயனாளிகளின் கோரிக்கைகளையும் உத்தரவுகளையும் செவிமடுத்தால் பணி சிறக்கும், பதவி உயரும், உளவளத்துணையாளர் உதவி நாடியின் பகிர்வுகளைச் செவிமடுத்தால் அவர்களை ஆசுவாசப்படுத்த முடியும், ஒரு பயிற்சிநெறியில் பயிற்றுவிப்பாளரின் உரையை செவி மடுத்தல் திறன் விருத்திக்கு உதவும். இவ்வாறாகப் பல இடங்களில் வினைத்திறனான செவிமடுத்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

ஏற்றுக்கொள்ள முடியாமலோ? அல்லது எதிரானதாகவோ? இருப்பின் உரையாடுபவரை இடைநிறுத்தி வினாவாமல் அவரது உரையாடல் முடிந்தபின் வினாவுவதனால் சொல்ல நினைத்ததை சொல்லிமுடிக்க அவகாசம் கொடுப்பதோடு, உங்கள் வினாவுக்கான விளக்கத்தையும் அவரால் கொடுக்க முடியும். அத்துடன் நாம் குறுக்கிட்டு ஒரு வார்த்தை பேசும் நேரத்தில் எம்மால் நான்கு வார்த்தைகளைச் செவிமடுக்க முடியும்.

07.எமக்கு ஏற்படும் அசௌகரியமான சூழலை, ஆரோக்கியமான முறையிலும் உரையாடுபவருக்குத் தெரியாமலும் கையாளவேண்டும். உ+ம். பசி ஏற்படுதல், கொட்டாவி விடுதல், உறங்குதல், உடல் உபாதைகள்...

08.உரையாடுபவருக்கும் உங்களுக்குமிடையிலான தூரத்தை சரியாக நிர்ணயிக்கவேண்டும். அதாவது உரையாடல் தெளிவாகக் கேட்கும் இடத்தில் அமைய வேண்டும்.

09.மொழியையும் அதன் அர்த்தத்தையும் நாம் சரியாக புரிந்துகொண்டோமோ என்பதை மதிப்பிடல் வேண்டும்.

செவிமடுத்தல் திறன் விருத்தி எம்மையும் எம்மைச் சார்ந்தவர்களையும் உயர்த்துவதோடு தெளிவான தொடர்பாடலை நிகழ்த்தவும், சரியானவற்றை செய்யவும், பிறரின் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்துகொள்ளவும், பரீட்சைகளில் சிறப்பாக துலங்கவும் உயர் அதிகாரிகளிடம் நன்மதிப்பைப் பெறவும் வழிசமைக்கும்.

**பிள்ளைகளின் பேச்சை செவிமடுத்தல்**

பிள்ளைகளின் பேச்சை செவிமடுத்தல் என்பது இவற்றைவிட சற்று விசேடத்துவமானது. அவர்கள் பேசும்பொழுது தொடர்ச்சியான பல வினாக்களையும் தொடுத்தவண்ணம் இருப்பர். இவற்றை நாம் மிகவும் பொறுமையுடனும் ஆதரவுடனும் செவிமடுக்கவேண்டும்.

01.பிள்ளைகளின் உரையாடலை செவிமடுக்கும்பொழுது எமது சிந்தனைகள் வேறு இடத்தில் லயிப்பதை தவிர்த்துக் கொள்வது அவசியம்.

02.அவர்கள் கதைக்கின்றபொழுது முழுமையாக செவிமடுத்தபடியே முக்கியமான இடங்களில்"அப்படியா","ஆமாம்"போன்று பதிலுரைப்பதன் மூலம் நாம் செவிமடுக்கின்றோம் என்பதை காண்பிக்க வேண்டும். மாறாக போலியாக செவிமடுப்பதாக பாவனை செய்துகொண்டு அப்படியா", ஆமாம்" என்று கூறினால் அதனை போலி என்று அவர்கள் இலகுவில் புரிந்துகொள்வதுடன் தம்மை யாரும் செவிமடுப்பதில்லை என்று மனமுடையக்கூடும்.

03.அவர்களின் பேச்சு அனைத்தையும் பாரபட்சமின்றி செவிமடுக்கவேண்டும். எமக்குப் பிடித்த விடயங்களை மட்டும் தெரிவுசெய்து செவிமடுத்தல் தவறாகும்.

04.சொற்களை மட்டும் செவிமடுக்காமல் அவர்களின் உணர்வுகளையும் உடல் மொழியையும் அவதானிக்க வேண்டும்.

05.எப்பொழுதும் பிள்ளைகளின் நிலையிலிருந்து அவர்களின் கண்ணோட்டத்தில் செவிமடுக்கவேண்டும். இல்லாவிடில் அவர்களின் கேள்விக்கோ? தேவைகளுக்கோ? எமது தன்முனைப்பான பதிலையோ-பொருளையோ தான் கொடுக்கமுடியும். அது அவர்களை திருப் திப்படுத்தாது.

06.செவிமடுக்கும்பொழுது அவர்களுக்கு தீர்ப்பளிக்கும் நீதிபதிபோல் செவிமடுக்காமல் திறந்த மனதுடன் செவிமடுக்க வேண்டும். தீர்ப்பிட்டு உரையாட முற்பட்டால் அவர்கள் சொல்வதை முழுமையாக செவிமடுக்க முடியாது.

07.அவர்களின் பேச்சை செவிமடுக்கும் பொழுது செவிகள் மட்டுமன்றி மனதாலும் செவிமடுக்கவேண்டும். அப்பொழுது தான் அவர்களின் பிரச்சினைகளை உங்களால் உணரமுடியும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிள்ளைகளுடன் பணியாற்றுவோர் மேற்குறிப்பிட்ட விடயத்தை கருத்தில் கொள்வது அவசியம். இது பிள்ளைகளின் தேவைகளை முழுமைசெய்வதோடு அவர்களுக்கு நிகழ்ந்திருக்கும் துர்நடத்தை கண்டறியவும் உதவும். அவர்கள் அநேகமாக எதிர் சொற்பதங்களான அங்கே போகாதே, சத்தம் போட வேண்டாம், கதைக்க வேண்டாம், மறுத்துப் பேச வேண்டாம் அல்லது இதைத் தான் செய்யவேண்டும் இப்படித் தான் செய்யவேண்டும் என்ற சொற்களையே கேட்டிருப்பர். அதனால் தமது பிரச்சினைகளைச் சொல்ல முன்வருவது கடினமாக இருக்கும். அவர்கள் கூறும் கதைகள், சம்பவங்களை உற்று செவி மடுத்தல் உங்களை விழிப்படையச் செய்யும். அவர்கள் கசப்பான அனுபவங்களைக்கூற முற்படும்பொழுது அவர்களால் உணர்ந்து கொள்ளப்படும் பயம், அச்சம், கூச்சம், சினம் பற்றி உணர்வோட்டமாக செவிமடுப்பவர் ஒருவர் அவசியமாகின்றார். ஒவ்வொரு வரும் அந்த ஒருவராக தம்மை உருவாக்கிக் கொள்வது காலத்தின் அவசியமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியர்

**திரு. சீவரத்தினம் சுரேஷ்குமார்**

அவர்கள் கடந்த 29.01.2017 இல் நடைபெற்ற யாழ்பல்கலைக்கழக 31 ஆவது பட்டமளிப்பு விழாவில் [BA(English Literature, ELT, British council, NDT(Merit) TKT, university of cambridge] பட்டம் பெற்றமையையிட்டு கல்லூரிச்சமூகம் அவரை பாராட்டி வாழ்த்தி நிற்கிறது.

பாராட்டுவோர்: நலன்புரி கழகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்.

## இதய அஞ்சலி



எமது கல்லூரியின் வித்தக விநாயகர் ஆலய வளர்ச்சிக்கும் கிரமமான ஆன்மீக செயற்பாடுகளுக்கும் தொடர்ந்து பேராதரவு நல்கிவரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர்

மனித நேயர்

**வி. கையிலாசபிள்ளை**

அவர்களின் மறைவு குறித்து எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வித்தக விநாயகரைப் பிரார்த்திக் கின்றோம்.

இந்து மன்றம்.
யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரி, கோப்பாய்.

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு அலுவலகப் பெண் பணியாளர்கள் தேவை.

- நிர்வாக உத்தியோகத்தர்கள்
- அலுவலக உதவியாளர்
- வரவேற்பாளர்
- தரவு பதியுனர்

**தகைமைகள்**

- ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவர்கள்.
- கணினி அறிவு

**வயதெல்லை**

- 18-30

நேர்முகத்தேர்வுகள் : 22,23,24 பெப்ரவரி 2017
காலை 10 மணிமுதல் மதியம் 2 மணிவரை

விரும்புபவர்கள் சுயவிவரக் கோவை, கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**WINSTAR CONSULTANTS**
106, தபாற்பெட்டிச்சந்தி, பலாலி வீதி,திருநெல்வேலி.
021 300 4641

## கண்ணீர் அஞ்சலி



கைதடி வீட்டுத்திட்டச் சங்கத்தின் உப செயலாளராக இருந்து சேவை ஆற்றி வரும் வேளையிலே மறைந்து விட்ட

சமூகஜோதி

**கா.க.ச.பரமலிங்கம்**

அவர்களது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபை
238, அரசடி வீதி, கந்தர் மடம். கைதடி வீட்டுத்திட்டச் சங்கம்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 1949.11.25 இறப்பு 2017.01.24



24.01.2017 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் **தில்லையம்பலம் கந்தசாமி**

(மேசன் - செல்லக்கண்டு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை (23.02.2017) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் றோட்
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 257 7721

## நாளை

மாசி-11
வியாழக்கிழமை -23.02.2017
திதி: துவாதசி மு.ப. 09.06
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப. 06.27
சுபநேரம்: 08.00-09.30 வரை
ராகுகாலம்: 02.00-03.30 வரை

## தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பொதி செய்ய பெண்கள் தேவை. மாதாந்தம் 15,000/- வழங்கப்படும். போக்குவரத்து ஒழுங்கு செய்து தரப்படும்.

021 205 2200
077 978 9223


## காணி விற்பனைக்கு

நெல்லியடி
பிரதேசசபைக்கு அருகில்
$5^{3}/_{4}$ (ஐந்தேமுக்கால்)
பரப்புக் காணி
உடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 742 2604

## யா/ மந்துவில் றோ.க.த.க.பாடசாலை

# மணி விழா வாழ்த்து



## திரு. சின்னத்தம்பி பவளேந்திரன்

**BA., Dip.in Edu.SLPS. 2-II**

மீசாலையில் உதித்த உத்தம புத்திரன் திரு.சின்னத்தம்பி பவளேந்திரன் அவர்கள் யா/ மீசாலை ம.கல்லூரியில் ஆரம்பம் முதல் உயர்கல்வி வரை பயின்று தன் பட்டப்படிப்பை பேராதனை பல்கலைக் கழகத்தில் நிறைவு செய்து தம் ஊருக்கே சேவை செய்து தேடிக்கொண்ட திரு.சி.பவளேந்திரன் அவர்கள் 11.01.1993 அன்று ஓர் ஆசிரியராக நியமனம் பெற்றுப் பின்வரும் பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார்.

| | |
|---|---|
| 11.01.1993 - 04.04.1999 | யா/ஸ்ரீ கணேசா வித்தியாலயம் |
| 05.04.1999 - 20.01.2004 | யா / வரணி மத்திய கல்லூரி |
| 21.01.2004 - 31.10.2007 | யா/ போக்கட்ட றோ.க.த.க. பாடசாலை |
| 01.01.2007 - 21.02.2017 | யா / மந்துவில் றோ.க.த.க. பாடசாலை |

இன்று (22.02.2017 ) மணிவிழாக் காணும் எம் அன்புக்கும் பெருமதிப்பிற்குரிய திரு.சி.பவளேந்திரன் அவர்கள் எம் பள்ளிக்கு ஆற்றிய பணிகளை வரிகளால் வடித்துவிட முடியாது. எமது பாடசாலையின் ஓர் சிறந்த தலைவனாக, நல்லாசானாக, நல் வழிகாட்டியாக, தாயாக, தந்தையாக, காவலனாக, மருத்துவனாகத் திகழ்ந்து எல்லோர் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றதுடன் இவர் ஓர் சிறந்த இலக்கியப் படைப்பாளி, சிறந்த நாடகக் கலைஞர், சிறந்த பாடகர். இவர் இன்று அரச பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற இவர் எமது பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இன்று போல என்றும் தன் சமூக சேவை தொடர வேண்டும் என வேண்டி நிற்பதுடன்,

இன்றுபோல் என்றென்றும் ஊர் போற்றும் உத்தமனாகத் தன் மனைவி, பிள்ளைகளுடன், பேரப்பிள்ளையுடன் எல்லாச் செல்வங்களும் பெற்று நலவாழ்வு வாழ மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்க உம் பணி. உயர்க உம் புகழ்.

Congratulations

**வாழ்த்துவோர்:**
யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்.

(AJA/IN/1068) (11.17.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிக்கு...

ருந்தனர்.

வழிநடத்தல் குழுவால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த இடைக்கால வரைவை ஆராய்வதற்கு - ஏற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்திலிருந்து பின்னடித்து - நழுவல் போக்கை கடைப்பிடித்து வந்தது. இதனால் வழிநடத்தல் குழுவின் கூட்டம் கூடுவதும் கலைவதுமாக, எந்தவொரு முக்கிய முடிவும் எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய் தினம் நடைபெற்ற கூட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடைக்கால வரைவை ஆராய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. அதனடிப் படையில் முக்கிய விடயங்கள் ஆராயப் பட்டுள்ளன. மார்ச் மாதம் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டங்கள் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டங்களில் வரைவு ஆராயப்பட்டு முற்றுப் பெற்றால் விரைவிலேயே நாடாளுமன்றுக்கு - அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகின்றது. (வ-5)

## 22ஆவது ...

பிலக்குடியிப்பு அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டள்ள பொது மக்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பில் உள்ள தங் கள் காணிகளை விடுவிக்க கோரித் தொடர்ந்து 22 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடு பட்டு வரும் மக்களுக்கு இதுவரை உறுதியான பதில்கள் கிடைக்காமையால் போராட்டம் தொடர்கிறது.

போராட்டம் நடக்கும் இடத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக நேற்றுப் பேருந்து ஒழுங்கு செய்யப்பட்டது. இதனை அடுத்த சகல மாணவர்களும் பாடசாலை சென்றனர்.

எங்கள் காணிகள் விடுவிக்கும் வரை இந்த இடத்தை விட்டு நகரவே மாட்டோம் எனமக்கள் தமது போராட்டத்தில் உறுதியாக உள்ளனர்.(த-7)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 21.02.2017 | 2099 | நீலம்
20 21 41 61
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி ரூ 10, 280, 301/=
2017.02.24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW
1919

சீட்டிழுப்பு திகதி: 21.02.2017
வெற்றி இலக்கங்கள்
07 23 53 58 S
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 22,723,411/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY
1919

கோடீபதி
சீட்டிழுப்பு வாரம்: 103
சீட்டிழுப்பு திகதி: 21.02.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,834,756/-
B 12 20 23 76
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY
1919

# மரண அறிவித்தல்

## சண்முகம் பரமலிங்கம்

### (கைதடி வீட்டுத்திட்ட சங்க செயலாளர்)



யாழ்ப்பாணம் மணத்தரை லேனைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் பரமலிங்கம் (21.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரன் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் ப. தர்சிகாவின் அன்புக்கணவரும் நிலக்ஷன் (லக்ஷன்), நிலக்ஷனா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான ராஜலெட்சுமி, பரமேஸ்வரி, சண்முகராஜா மற்றும் தனபாலசிங்கம், மங்களேஸ்வரி, புலேந்திரராஜா ஆகியோரின் சகோதரரும் நகுலேந்திரன் காலஞ்சென்ற விக்னேந்திரன் மற்றும் தகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**133 A, அரசடி றோட்,**
**கந்தர்மடம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 589 0064**

# மரண அறிவித்தல்கள்

## நடேசு அனுராதன்



கொக்குவில் கிழக்கு, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு அனுராதன் கடந்த 20.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நடேசு - தவமணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான இராசேந்திரன் - ஞானம்மா தம்பதியரின் மருமகனும் கலைச்செல்வியின் அன்புக்கணவரும் ஆரணியா, அஜந்தன், அர்ச்சனா, ஆரங்கா, அபிஷாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுவீனா, சுனிதரா, புலேந்திரன், பிரசாத் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2017) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கடடையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு,**
**காளிகோயிலடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 843 5060**

## சரவணமுத்து இரத்தினம்



வீரபத்திரர் கோயிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இரத்தினம் 21.02.2017 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும், செல்லத்துரை, ஐயாத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பரமநாதன், காலஞ் சென்ற செல்வேந்திரன் மற்றும் சறோஜினிதேவி (ஜேர்மனி), சகுந்தலாதேவி, பாலேந்திரன் (ஜேர்மனி), சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகரத்தினம்(பவா), நேமிநாதன் (ஜேர்மனி), செல்லத்துரை, சிவயோகமலர் (மலர் - ஜேர்மனி), குகானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் குபேரன், தட்சாயினி, கௌதமன், அஜித்தா, அனிஜா, அனோசியன், துசியந்தினி, பிரபாலினி, கோபினி, சகன்ஜா, யபிஷேக், கயோதினி, கிஷோவர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கேனுஷ், தேனவி, பிறித்திகா, சதுர்ஷிகா, சிருஷ்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# அறிவித்தல்

## நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்றம்137/30 கலாசாலைவீதி,,வட்டாரம் - 06

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் -06 இல 137 / 30, கலாசாலைவீதி, எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனம் எமதுபதிவேட்டின் பிரகாரம் **சொ.உ.கோ.பொன்னையா** எனும் பெயரில் காணப்படுகின்றது..

வட்மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி,கோப்பாய் கோவில் பற்று, கோப்பாய் தெற்கு இறை, கோப்பாய் பிதேச செயலர் பிரிவு, கிராம சேவகர் பிரிவு J/259 ம் இலக்க பிரிவில் அமைந்துள்ள **"கள்ளியோடை"** நிலப்பரப்பு 30 ஆனால் நில அளவையாளர் ம.சிற்றம்பலம் என்பவரால் வரையப்பட்ட 1368/21.12.2004 ம் இலக்க நில அளவை வரை படத்தின்படி நிலப்பரப்பு 27 குளி 05.80 இதில் வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு 12 குளி 16.16 இது குறித்த படத்தில் துண்டு 01 ம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனமானது தனது பேரனான சின்னையா ஆறுமுகம் என்பரிற்கு அவரது தகப்பனான சின்னையா என்பவ்ரால் நொத்தாரிசு வே.மாணிக்கவாசகர் என்பவரால் வரையப்பட்ட 832/ 1924.06.21 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டது என்றும், அவரது சொந்தமும் ஆட்சியிலும் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக இருந்து அவர் பாராதீனப்படுத்தாது இறக்க, அவரது ஒரே வாரிசான ஆறுமுகம் பொன்னையாவினை வந்தடைந்ததென்றும் அவர் பாராதீனப்படுத்தாது விட்டிறக்க அவரது பிள்ளைகளான பொன்னையா பரமேஸ்வரனையும். பொன்னையா மகேந்திரனையும் வந்தடைந்ததென்றும் தானும் தனது சகோதரனும் சரிசமனாக மனமொத்து பிரிவிடல் செய்யும் பொழுது வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு 12 குளி 16.16 தன்னை வந்தடைந்ததென்றும் பொன்னையா பரமேஸ்வரன் என்பவர் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான A.இராஜரட்ணம் என்பவரால் வரையப்பட்ட 10180/01.12.2016 ம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ் ஆதனமானது சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான எஸ்.கனகரட்ணம் என்பவரால் வரையப்பட்ட 17669/04.01.2001 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் பொன்னையா கைம்பெண் மகேஸ்வரி, பொன்னையா மகேந்திரன், பொன்னையா பரமேஸ்வரன் ஆகியோர் சேர்ந்து **பரமேஸ்வரன் விஜிதன்** என்பவருக்கு வடக்குப்பக்கமாக நிலப்பரப்பு 15 இனை ஏற்கனவே வழங்கியுள்ளனர்.

நல்லூர் பிரதேசசபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு **பரமேஸ்வரன் விஜிதன்** என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாகஆட்சேபனைதெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரியஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பரமேஸ்வரன் விஜிதன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சு.சுதர்ஜன்**
**செயலாளர்**
**நல்லூர் பிரதேச சபை**
**2017.02.22**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளால்...

தப்பட்ட படு கொலை கள் தொடர்பான முழு விவரம் அடங்கிய அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்குமாறு மகிந்த அணி அரசிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தது.

அதனைச் சமர்ப்பிப்பதற்குத் தமக்குக் கால அவகாசம் தேவை என்று அரசு பதிலளித்தது. நாடாளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி-பதில் நேரத்தில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர இந்தக் கேள்வியை எழுப்பினார். அதற்குப் பதில் வழங்கக் கால அவகாசம் தேவை என்று கூறினார் சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

1983 ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 802 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் தமிழர்களே அதிகம். 589 சிங்களவர்களும், ஆயிரத்து 25 தமிழர்களும், 188 முஸ்லிம்களும் அடங்குகின்றனர்.

மட்டக்களப்பில் இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., ரெலோ மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலா இருவரும், ஈ.பி.ஆர்.எல்.எப். ஐச் சேர்ந்த 6 பேரும், 522 அரச அலுவலர்களும் அடங்குகின்றனர்.

இந்தப் படுகொலைகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க முடியும். இவை இடம்பெற்று தற்போது 10 வருடங்களுக்கும் மேலாகிவிட்டன. அவை தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்குப் போதிய கால அவகாசம் தேவைப்படுகின்றது-என்றார். (த-4)

## மேலும்...

இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளான சந்தேகத்தில் இறுதியாக 6 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களின் 4 பேருக்குப் பன்றிக் காய்ச்சல் தொற்று ஏற்பட்டுள்ளமையை மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளவர்கள் கோப்பாய் மற்றும் வேலணையைச் சேர்ந்தவர்களாவர்.

பன்றிக் காய்ச்சல் நோய்த் தொற்றுக்கான தடுப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இனம் காணப்பட்ட பகுதிகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது.

எச்1என்1 தாக்கத்தினால் அதிகமாகச் சிறுவர்களும், கர்ப்பவதிகளுமே பாதிப்படையக் கூடும். முதியவர்களும் இதற்கு இலக்காகக் கூடும். இந்த நோய்த் தொற்றுக்குரிய மருத்துவ வசதிகள் எம்மிடம் உள்ளன என்று மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

வேலணைச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பெண் ஒருவர் இந்தத் தொற்றுக்கு உள்ளானமை தொடர்பில் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சியிலும் இந்தத் தொற்றினால் 3 சிறார்கள், 2 கர்ப்பிணிகள் மற்றும் 30 வயதுடைய ஒருவர் என 6 பேர் பீடிக்கப்பட்டிருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை வடக்கில் 11 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4-101)

## தமிழீழத்தின்...

விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

பளை மத்திய கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி இந்த மாதம் 6 ஆம் திகதி நடைபெற்றது. இதன்போது இல்லம் ஒன்றின் முகப்பு அலங்காரம், தமிழீழ வரைபட அமைப்பில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்டமை தொடர்பில் பாடசாலையின் அதிபர் பளைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன் பின்னர் பொலிஸார் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். தமிழ் மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தமிழ் மக்கள் வாழும் இடத்தை அடையாளப்படுத்தும் வகையி லேயே இவ்வாறு அமைக்கப்பட்டதாகப் பொலிஸாருக்குப் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர் என்று அறிய வந்தது. (த-5-6)

## வவுனியா...

சபையில் பிரே ரணை நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 85 ஆவது அமர்வு நேற்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஞா.குணசீலன் குறித்த பிரேரணையை முன்மொழிந்தார். அவர் தனது பிரேரணையில் தெரிவிக்கையில்,

வவுனியா வளாகத்தை ஒரு சுயாதீன பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்த வேண்டிய கால கட்டத்தில் நாங்கள் உள்ளோம். இதன் மூலம் அதன் வளர்ச்சியானது நிறுவனத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தடையில்லாமல் இயங்க வாய்ப்பளிக்கும்.

இந்தப் பிரேரணையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, உயர் கல்வியமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என இந்தச் சபையைக் கோருகிறேன் -என்றார்.

இதற்குச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவிக்க குறித்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக அவைத் தலைவர் அறிவித்தார். (த-8)

## புளொட்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையில் கூட்டமைப்பிலிருந்து மோசடி செய்பவர்கள் வெளியேறுவதா யார் வெளியேறுவது என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியிருந்தார். இதன் பின்னர் மீளவும் நேற்றும் இதே கருத்தைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

'கூட்டமைப்பின் தலைமை மோசடியானது. அந்தத் தலைமையை விட்டு வெளியேற வேண்டும். தமிழ் மக்கள் பேரவையிலும் இருந்து கொண்டு கூட்டமைப்பின் தலைமையை ஏற்றுக் கொண்டும் தொடர்ந்தும் இருக்க முடியாது' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரவையில் அங்கம் வகிக்கும் தரப்புக்கள் எடுக்கும் முடிவு சரி. கூட்டமைப்பின் தலைமை எடுக்கும் முடிவு பிழை. அதனால்தான் பேரவை உருவானது. எங்கள் கருத்தைச் சொல்லியுள்ளோம். மக்கள் முடிவெடுக்கட்டும். எயங்களைப் பொறுத்தவரை, கூட்டமைப்பில் நின்று கொண்டு விமர்சித்துப் பிரயோசனமில்லை. இன்று யார் வந்தாலும் சம்பந்தனையும், சுமந்திரனையும்தான் சந்திக்கின்றார்கள். கடமைக்கு வந்து சில வேளை ஏனையோரையும் சந்திப்பார்கள். சம்பந்தன், சுமந்திரன் செய்கின்ற விடயங்கள் பிழை என்றால் அவர்கள் எப்படித் தலைமையாக இருக்கலாம். அப்படி யென்றால் கூட்டமைப்பிலிருந்து தலைமையை மாற்றவேண்டும். இல்லாவிடின் வெளியேறவேண்டும். சம்பந்தனை அரசு ஏமாற்றுவதாகச் சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். சம்பந்தன் தெரிந்து கொண்டுதான் இனத்தைப் புதைகுழிக்குள் கொண்டு செல்கின்றார். இது 2010இல் தெரிந்ததால்தான் நாம் வெளியேறினோம்.

சிலவேளை, சம்பந்தன், சுரேஸ் பிரேமசந்திரனை ஏனைய கட்சித் தலைவர்களை ஏமாற்றியிருக்கலாம். அரசு சம்பந்தனை ஏமாற்றவில்லை. அரசின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றார். கூட்டமைப்பின் தலைமையில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். இல்லை அதனை நிராகரித்து வெளியில் வரவேண்டும். இன்று சம்பந்தனை விமர்சிக்கின்ற தரப்புக்கள், 2010 ஆம் ஆண்டு நாம் வெளியேறும்போது சம்பந்தனை நியாயப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிலவேளை சம்பந்தனின் உண்மையான முகத்தை இப்போது[...] அறிந்திருக்கலாம். கொள்கையுடன் இ[...] விக்னேஸ்வரனை மாற்றுத் தலைமையாக நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயார். மாற்றுத் தலைமையாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வளரக் கூடாது என்பதிலும் பலர் தீவிரமாக இருக்கின்றார்கள். பேரவையிலும், கூட்டமைப்பிலும் இருக்க முடியாது. அதனைச் செய்ய இனியும் முடியாது. பேரவையின் கொள்கையின் அடிப்படையில் கூட்டமைப்புச் செயற்படத் தொடங்கினால் நாங்களும் இணைந்து செயற்படுவது தொடர்பில் யோசிக்கலாம் - என்றார். (த-5-101)

## கூட்டமைப்புடன்...

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் கூட்டமைப்புடன் இல்லை என்பதைக் காண்பிப்பதற்கே எழுக தமிழ் நிகழ்வு நடத்தப்பட்டது. கூட்டமைப்பின் மோசடியான தலைமைக்கு அழுத்தம் மாத்திரம் போதாது. அவர்களின் இருப்பு கேள்விக்குறியாக வேண்டும். அப்போதுதான் அவர்கள் உணர்வார்கள் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

எழுக தமிழ் நிகழ்வு எந்தவொரு கட்சிக்கும், அமைப்புக்கும், தனிநபருக்கும் எதிரானது அல்ல என்று, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வுக்கு முன்பதாகவும், எழுக தமிழ் நிகழ்வில் உரையாற்றும்போதும் அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்கள் பேரவையினால் எழுக தமிழ் தொடர்பில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையிலும் இதே விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, எழுக தமிழ் நிகழ்வு மக்கள் கூட்டமைப்புடன் இல்லை என்பதைக் காண்பிப்பதற்கு நடத்தப்பட்டது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5-101)

## சீராய்வு...

கொண்டது.

இந்த மனு தொடர்பான ஆட்சேப னையை முன்வைத்து பிரதிவாதிகளை மார்ச் 28ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குழாம் நேற்று உத்தரவிட்டது.

சிறப்பு அறங்கூறும் அவையின் (ஜுரிகள் சபையின்) முடிவுக்கு அமைய, ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள் அனைவரையும் விடுவித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக-சசிகலா ரவிராஜ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்வைத்துள்ள சீராய்வு மனு மேன்முறையீட்டு நீதிமன்றால் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மன்றில் மனு தாரர் சார்பில் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், நிரான் அங்கிரல் மற்றும் மோகன் பாலேந்திரா ஆகியோர் முன்னிலையாகினர்.

ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். எனவே அவர்களுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்து சிறப்பு அறங்கூறும் அவை தீர்ப்பு வழங்க முடியாது.

எனவே, அறங்கூறும் அவை இன்றி இந்த வழக்கை மீள விசாரணைக்குட்படுத்த கொழும்பு மேல் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட வேண்டும் என்று மனு தாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் கோரினார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், வழக்கு விசாரணையை மார்ச் 28ஆம் திகதி வரை ஒத்திவைத்தது. அத்துடன், அடுத்த தவணையின் போது பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்புக் கட்டளை அனுப்புமாறு பதிவாளருக்கு மன்று உத்தரவிட்டது.

மேலும், இந்த மனு மீது பிரதிவாதிகளுக்கு ஆட்சேபனை இருப்பின் அது தொடர்பான பதிலியை அடுத்த தவணைக்கு முன்னதாக மன்றில் முன்வைக்குமாறும் நீதியரசர் குழாம் கட்டளையிட்டது.

இதேவேளை, மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (வ-5)

## புதுக்குடியிருப்பில்...

முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனும் நேற்று இணைந்து கொண்டார்.

பாதுகாப்புத் தரப்பிடம் உள்ள 19 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரி முகாம் முன்பாக - புதுக்குடியிருப்பு பிரதேச செயலக முன்றிலில் அமர்ந்திருந்து மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான அறவழிப் போராட்டம், 14 ஆம் திகதி தொடக்கம் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டமாக மாற்றமடைந்தது.

சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முதியவர்கள் மூன்று பேருடன் நேற்றைய தினம் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன், அ.பிற்றர் இளஞ்செழியன். மா.லவகுசன், யா.யாசோதரன் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

'இந்தப் போராட்டம் கடந்த மூன்றாம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்று வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 49 குடும்பங்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு தெரிவித்தே, பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடுபட்டுள்ளனர். கடந்த 9 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிலர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதும் இதுவரை எந்தவொரு தீர்வும் தமக்குக் கிடைக்கவில்லை' என்று மக்கள் தெரிவித்தனர்.

'பல தடவைகள் நாடாளுமன்றத்தில் காணிப் பிரச்சினைகள் தொடர்பாகக் கதைக்கப்பட்டபோதும்,எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. எனவே நாடாளுமன்ற அமர்வுகளுக்குச் சென்று எந்தப் பலனுமில்லை' என்று நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார். (த-5-7)

## மாகாணங்களுக்கு...

இந்தச் சந்திப்பில் மாகாண சபைகளுக்கு அதியுச்ச அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வது தொடர்பில் தீர்க்கமான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன. நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் மாகாணங்களுக்கு அதியுச்ச அதிகாரங்களை வழங்குவதற்குத் தேசிய அரசின் பிரதான இரு பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

13ஆவது திருத்தச் சட்டத்தை மட்டும் பாராது அதற்கு அப்பால் முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. புதிய அரசமைப்பில் இவ்வாறான யோசனைகளைப் பிரேரித்தால் மட்டுமே நாட்டில் 30 வருடங்களுக்கும் மேலாகப் புரையோடிப்போயுள்ள இனப் பிரச் சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சில சிறிய திருத்தங்களை மட்டுமே முன்வைத்த அரசியல் கட்சிகள், இந்த அதியுச்ச அதிகாரப்பகிர்வு எனும் விடயத்துக்கு ஒருமித்த இணக்கத்தை வெளிக்காட்டினர் என்று நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து அறிய முடிந்தது.

நேற்றைய சந்திப்புத் தொடர்பில் அரசமைப்புக் குழுவின் தலைவர் ஜயம்பதி விக்கிரமரட்னவிடம் வினவியபோது, நீண்டகாலமாகத் தடைப்பட்டிருந்த பேச்சுகள் சுமுகமாக இன்று (நேற்று) மீண்டும் ஆரம்பமாகின. இந்தப் பேச்சுகள் மிகவும் சாதகமான முறையில் முடிந்தன. அனைவரும் அதிகாரப் பகிர்வு குறித்து தமது கருத்துகளை முன்வைத்தனர். விரைவில் அரச மைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகும். வழி நடத்தல் குழுவின் அடுத்த கூட்டம் அடுத்த மாதம் 7ஆம் திகதி நடைபெறும் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடசென்னை பெண்ணாக நடிக்கும் தமன்னா

விக்ரம் தமன்னா நடிக்கும் புதிய படம் வட சென்னைக் கதைக் களத்தில் உருவாகி வருகிறது. இதில் வட சென்னைக் குப்பத்துப் பெண்ணாக தமன்னா நடிக்கிறார். இந்தப் படத்தின் கதையைக் கேட்டு அதில் ஒன்றிவிட்டார்.

வழக்கமாகக் கவர்ச்சி நாயகியாக வரும் தமன்னா, இந்தப் படத்தில் எந்தவித ஆடம்பரமும் இல்லாத அழுத்தமான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இதுபற்றி கூறிய அவர், பாகுபலி படத்துக்குப் பிறகு இந்தப் படமும் எனது திறமைக்குத் தீனி போடும் வகையில் அமைந்து இருக்கிறது என்றார்.

விக்ரம் – தமன்னா நடிக்கும் இந்தப் படத்தை விஜய் சந்தர் இயக்கவுள்ளார். இவர் ஏற்கெனவே சிம்புவை வைத்து 'வாலு' என்ற படத்தை இயக்கியவர். தமன்னா தற்போது சிம்பு நடிப்பில் உருவாகி வரும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்திலும் நடித்து வருகிறார்.









- எல்லாரும் தொலைபேசிகளை நிறுத்தி வையுங்கண்ணு கூட்டத்தில சொன்ன அடுத்த நொடி அழைப்பு வரும்...




- நாம அலுவலகத்துக்கு வேளைக்குப் போகும் போது யாரும் பார்க்க மாட்டாங்க, என் றைக்காவது ஒரு நாள் பிந்திப் போனா முகாமையாளரில் இருந்து மனித வள முகாமையாளர் வரை பார்ப்பார்கள்.
- எப்பவும் காலியாய்த் தெரியும் பெற்றோல் நிரப்பு நிலையம், நாம் போகும்போது மட்டும் கூட்டமா இருக்கும்.
- அடிக்கடி வர்ற பஸ் நமக்கு மட்டும் பிந்தி வரும்.
- ஏதாவது முக்கியமான அழைப்புக்காகக் காத்திருக்கும்போது அது வராது. சரி கழிப்பறைக்குப் போய்ட்டு வந்துடலாம் என்று போனா அப்பதான் சரியாய் அந்த அழைப்பு வரும்.
- இரண்டு கையும் அமளி வேலையில் இருக்கும் போதுதான் கண்ட இடத்தில எல்லாம் அரிக்கும்




# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா



**மேடம்:** மற்றவரின் எதிர்ப்பைப் பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். பெண்களுக்கு வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** யாருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை மந்த கதியில் நடக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணியில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** குடும்பப் பிரச்சினையில் சுமுகத்தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உருவாகும். தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். இடையூறுகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி லாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**சிங்கம்:** சுய கௌரவத்துக்காக செலவு செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி மறையும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் ஆடம்பரமாகச் செலவழிப்பர். நண்பர்களால் உதவி கிடைக்கும்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவு உயரும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். அரசியல் வாதிகள் பதவி பெற வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவர். பெண்களுக்கு உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** நண்பர்களால் உதவி கிடைக்கும். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபார இலக்கு எளிதில் பூர்த்தியாகும். கூடுதல் லாபம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** தேவை நிறைவேற்றுதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி அவசியம். லாபம் சுமார். பெண்கள் விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளவும்.

**கும்பம்:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.

**மீனம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் அபரிமிதமான லாபம் வரும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர்.

# சுடோக்கு எண் விளையாட்டு

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 3 | | 4 | | | |
| | | | | | | 8 | 6 | |
| | 4 | | | | 6 | 7 | 5 | |
| | 9 | | | | 1 | 4 | | |
| 5 | 1 | | | 2 | | | 7 | 6 |
| | | 6 | 8 | | | | 9 | |
| | 5 | 9 | 1 | | | | 2 | |
| | 6 | 7 | | | | | | |
| | | | 6 | | 5 | 1 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 1 | 6 |
| 1 | 6 | 9 | 2 | 3 | 7 | 8 | 5 | 4 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 1 | 9 | 2 | 7 |
| 8 | 3 | 2 | 7 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 7 | 1 | 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 9 |
| 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 9 | 5 |
| 6 | 2 | 5 | 9 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 7 | 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பெண்கள் அணி இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 22
இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்பட்ட வடமாகாணத்தின் 23 வயது பெண்கள் அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் இரு இன்னிங்ஸ் கொண்ட தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாண மாவட்ட அணி இன்னிங்ஸால் அபார வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட மகளிர் அணியை எதிர்த்து மன்னார் - வவுனியா மாவட்டங்களின் இணைந்த அணி பலப்பரீட்சை நடத்தியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் - வவுனியா இணைந்த அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 222-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக றஜீத்தா 80 ஓட்டங்களையும், கலையரசி 47 ஓட்டங்களையும், பவதாரணி 47 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆன் பைரவி, மேரி பிறிஸ்கா இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் - வவுனியா இணைந்த அணி 40 ஒட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் பவதாரணி 4 இலக்குகளையும், கிறிஸ்ரிகா 3 இலக்குகளையும், றஜீத்தா 2 இலக்குகளையும், திசாயினி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

யாழ்ப்பாண மாவட்ட அணி, மன்னார் - வவுனியா இணைந்த அணியை இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடப் பணித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 67 ஓட்டங்களில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்தது. ஆன் பைரவி பெற்ற 32 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் கிறிஸ்ரிகா 7 இலக்குகளையும், பவதாரணி, றஜீத்தா, தமிழரசி மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம-23)


கிறிஸ்ரிகா


றஜீத்தா

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 22
**கரப்பந்தாட்டம்**
ஞானதீபம் திறன் விருத்தி மையத்தினர் நடத்தும் 23 வயதுக் குட்பட்டவர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் அரியாலையில் இன்றுமுதல் இடம்பெறவுள்ளது. இன்று மாலை 6 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொழும்புத்துறை மாட்டின் விளையாட்டுக் கழகமும் மாலை 6.30 இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**கால்பந்தாட்டம்**
வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## மென்பந்து துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 22
சுன்னாகம் பிளைக்கப்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக துடுப்பாட்டத் தொடரொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. கலந்துகொள்ளும் கழகங்கள் ஏற்பாட்டுக் குழுவுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ம-23)

# நாணயச்சுழற்சி என்பது ஆட்டத்தைத் தீர்மானிக்கும் ஒன்றல்ல

## ஆஸித் தலைமைப் பயிற்சியாளர் தெரிவிப்பு

இந்திய ஆடுகளங்களில் நாணயச் சுழற்சி ஆட்டத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாக உள்ளது என்று தெரிவிக்கப்படும் நிலையில், அதை தலைமைப் பயிற்சியாளர் டேரன் லீமன் மறுத்தார். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தியாவுக்கு வரும் அணிகள், தமது தோல்வியின் போது நாணயச் சுழற்சியையும் முக்கிய காரணமாகக் காட்டும். இந்த நிலையில் அதிலிருந்து மாறுபட்டு நின்றார் லீமன்.

இந்தியாவில்வைத்து இந்திய அணியைவீழ்த்தவேண்டுமாயின். அதிலும் குறிப்பாக டெஸ்ட் ஆட்டங்களில் வெற்றிபெற வேண்டுமாயின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெறுவது அவசி யம் என்ற ஓர் போலி எண்ணம் சித்திரிக்கபப்பட்டுள் ளது. இதை ஏற்க இயலாது. கடந்த முறை இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது 4 ஆட்டங்களிலும் நாணயச் சுழற்சியில் வென்றோம். ஆனால் அத்தனை ஆட்டங்களிலும் தோற்றோம் என லீமன் மேலும் தெரிவித்தார். (ம)



## லக்கிஸ்ரார் அபார ஆட்டம்

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் லக்கிஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துஅல் இக்பால் விளையாட்டுக் கழக ஏ அணி மோதியது. இதில் லக்கி ஸ்ரார் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# மீண்டும் களத்தில் ரகுமான்

பங்களாதேஷ் அணி, அடுத்த மாதம் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாகக் கடந்த சில வாரங்களாக ஓய்வில் இருந்தார் வேகப்பந்து வீச்சாளர் ரகுமான். அவர், இலங்கைக்கு எதிராகக் களமிறங்குகின்றார். பங்களாதே; அணி விவரம் - முஸ்பிகுர் ரகிம் (தலைவர்), தமிம் இக்பால், லித்தோன் தாஸ், சவுமியா சர்க்கர், கக்கியூ, சஹிப் அல் ஹசன், மொகமதுல்லா, சபீர் ரகுமான், முஸ்டாபிஜுர் ரகுமான், இஸ்லாம், மெஹதி ஹசன், தஸ்கின் அகமட், ஷெவிக் ஹொஸைன், கம்ருல் இஸ்லாம் ரபி, சுபாசிஸ் ராய், ருபெல் ஹொஸைன். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரோக்ஸை வாங்கியமை திருப்தியே

## என்றார் சஞ்சிவ்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ், புனே அணியால் 14 கோடி 50 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டார். இவர் அணியில் இணைந்தமை முழுத் திருப்தி என்று புனே அணியின் உரிமையாளர் சஞ்சிவ் கோயங்கா தெரிவித்தார்.

அணித் தலைவர் சிமித், தலைமைப் பயிற்சியாளர் பிளமிங் மற்றும் ஒவ்வொருவரின் ஆலோசனைக்குப் பிறகே ஸ்ரோக்ஸை வாங்கினோம். அவரை ஏலத்தில் எடுக்க வேண்டும் என்பது ஒருமித்தமாக மேற்கொள்ளப்பட்ட முடிவு. ஸ்ரோக்ஸ் ஐ.பி.எல். முழுவதும் விளையாட மாட்டார் என்பதை அறிவோம். ஆனால், முதல் 14 லீக் ஆட்டங்களிலும் அவர் விளையாடுவார். அது தான் எங்களது முதல் இலக்கு. அவர் எங்கள் அணிக்காக விளையாட இருப்பது முழுத் திருப்தி. அவரை இதைவிடக் குறைந்த விலைக்கு வாங்க முடியாது என சஞ்சிவ் மேலும் தெரிவித்தார்.

நடப்பு வருடத் தொடரில் 14 கோடி 50 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டதன் மூலம், ஐ.பி.எல். வரலாற்றில் அதிக விலைக்கு ஏலம் போன வெளிநாட்டு வீரர் என்ற சாதனையை ஸ்ரோக்ஸ் படைத்தார். ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் வற்சன் 9.5 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டமையே அதிகபட்சமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# டோனியின் நீக்கம் வெட்கக்கேடானது

## அசாருதீன் காட்டம்

தலைமைத்துவத்தில் தனிமுத்திரை பதித்த டோனியை, புனே அணியின் நிர்வாகம் நீக்கியமை அந்த நிர்வாகத்துக்கு வெட்கக்கேடான செயல் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன் குறிப்பிட்டார்.

நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஒவ்வொரு அணியின் நிர்வாகமும் தமது அணியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. புனே அணியின் தலைவராக டோனி கடந்த வருடம் செயற்பட்டார். நடப்பு வருடத்தில் டோனியை தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கி ஆஸ்திரேலிய வீரர் சிமித்தை தலைவராக நியமித்தது நிர்வாகம்.

கடந்த தொடரில் 14 ஆட்டங்களில் 5 ஆட்டங்களில் மட்டுமே டோனி வெற்றியைத் தேடித்தந்தார். தரப்படுத்தலில் 8 அணிகளில் 7 ஆவது இடத்தையே புனே பிடித்தது. இதனாலேயே நடப்பு வருடத் தொடரில் தலைமைத்துவம் மாற்றம்செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது. இதற்கு அசாருதீன் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

டோனியைத் தலைமைத்துவத்தில் இருந்து வெளியேற்றிய முடிவு வெட்கக்கேடானது. இந்திய கிரிக்கெட் அணியின் தங்கமாகத் திகழ்ந்தவர் டோனி. கடந்த 10 வருடங்களாக தலைமைத்துவத்தில், டோனி சாதனை படைத்துள்ளார். நாங்கள் பணம் செலவழிக்கிறோம். அணியை நடத்துபவர்கள் நாங்கள்தான் என்று அந்த அணியின் உரிமையாளர்கள் சொல்லலாம். அதேவேளையில் தலைமைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு முன்னதாக டோனியின் தகுதியையும், திறமையையும் நம்பகத்தன்மையையும் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்திருக்க வேண்டும். இது முட்டாள்தனமான முடிவு என்று அசாருதீன் மேலும் குறிப்பிட்டார். இந்திய அணியின் ஒருநாள், ரி-20 ஆட்டங்களின் தலைமைப் பொறுப்பில் இருந்தும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் டோனி விலகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இறுதி ரி-20 இன்று

ஆஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் இலங்கையே கிண்ணத்தைக் கைப்பற்றும். ஆனால் இலங்கையால் சொந்த மண்ணில் வைத்து வழித்துத்துடைக்கப்படாமல் இருக்க இந்த ஆட்டத்தில் வெல்ல வேண்டும் என்ற நெருக்கடி ஆஸ்திரேலியாவுக்கு உள்ளது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை எதிர்கொள்ள ஸ்ரீவ் சிமித் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி இந்தியா சென்றுள்ள நிலையில் இலங்கைக்கு எதிரான தொடரை இளம் ஆஸ்திரேலிய அணி எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# நியூசிலாந்து – தெ.ஆபிரிக்கா இரண்டாவது ஆட்டம் இன்று

நியூசிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெற வுள்ளது. தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வென்று பதிலடி கொடுக்க வேண்டும் என்ற நெருக்கடி நியூசிலாந்துக்கு உள்ளது. மாறாக இன்று; தென்னாபிரிக்கா வென்றால், நியூசிலாந்து அணி எஞ்சிய அத்தனை ஆட்டங்களிலும் வென்றால் மட்டுமே கிண்ணம் வெல்லும் என்ற நெருக்கடி ஏற்படும்.

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் நியூசிலாந்திடம் தென்னாபிரிக்கா தோல்வியடைந்தது.

இதனால் இந்தத் தொடரில் பதிலடி கொடுக்கப் படும் என்று தென்னா பிரிக்கா அணியின் தலைவர் வில்லியர்ஸ் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்தியா - ஆஸ்திரேலியா டெஸ்ட் நாளை ஆரம்பம்

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம் புனே மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது. இந்தத் தொடரை எதிர்கொள்வதற்காக இரு அணிகளும் கடந்த சில தினங்களாகக் கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இரண்டாவது ஆட்டம் பெங்களூரில் மார்ச் 4 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் ராஞ்சியில் மார்ச் 16 ஆம் திகதியும், நான்காவதும் இறுதியானதுமான ஆட்டம் தர்மசாலாவில் மார்ச் 25 ஆம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சர்மாவுக்கு அதிக விலை

ஐ.பி.எல். ஏலத்தில் இசாந் சர்மாவுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை மிகவும் அதிகம் என்று கொல்கத்தா அணித்தலைவர் கம்பீர் தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்றுமுன்தினம் ஏலம் நடைபெற்றது. இசாந் சர்மாவுக்கு 2 கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டது. எந்தவொரு அணியாலும் அவர் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. இதனையடுத்தே கம்பீர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

# ஐ.பி.எல். ஏலத்தில் கண்டுகொள்ளப்படாத முக்கிய புள்ளிகள்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. சில முக்கிய வீரர்களும் எந்தவொரு அணியாலும் ஏலத்தில் எடுக்கப்படாமல் விடப்பட்டார்கள்.

இசாந்த் சர்மா, இர்பான் பதான், உன்முக் சந்த், புஜாரா, ஒஜா உள்ளிட்ட இந்தியாவின் பிரபல வீரர்களை வாங்க எந்த ஒரு அணியும் முன்வரவில்லை. அதேபோல், இங்கிலாந்து அணியின் அலெக்ஸ் ஹேல்ஸ், பரிஸ்ரௌவ், நியூசிலாந்தின் நட்சத்திர வீரர் ரொஸ் ரெய்லர், முன்றோ, மேற்கிந்தியத் தீவுகளின் அணித் தலைவர் ஹோல்டர், ஜோன்சன் சார்லஸ் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தாகிர், பார்னல் ஆகியோரையும் எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவலர் வீதியில்**

கடை வாடகைக்குண்டு
(Japan MD 90,BAP XXXX) மோட்டார்
சைக்கிள் கடைக்கு தேவையான
ஐ பிறிச்,நீளமான அலுமாரி,
மேசை,விறாக்கை விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 078 85 65 376, 071 51 98 235

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,தொழில் தேடுவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 25.02.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன் ) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய்,வியாழன்) காலை 8-10 காலை 10-12

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**வேலைவாய்ப்பு**

குறைந்த பட்ச தகைமையுடன் 4 வகையான பதவி வெற்றிடங்கள். முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.

1. வெளிக்கள உத்தியோகஸ்தர் 18500 + உணவுப்படி
2. மேற்பார்வையாளர் - 22500 + உணவுப்படி
3. உதவி முகாமையாளர் - 25500 + கொமிசன் + உணவுப்படி (அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)
4. அலுவலகப் பெண் (சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்)

வயது எல்லை - 18 -38
உங்கள் எதிர்காலத்துக்காக ஒரு சந்தர்ப்பம்! உடன் தொடர்பு கொள்ளவும்.

129, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
077 998 7699, 077 884 8188, 021 300 4664

University of Jaffna - Sri Lanka
Faculty of Graduate Studies

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**

**Part time course - 2017 / 2019 - Batch II**

Applications will be entertained from eligible candidates for the above course.

ADMISSION REQUIREMENTS:

1. Degree in any field from a recognized University.

And

2. At least three years experience in Teaching English as a Second Language at primary / secondary / tertiary levels in Government or recognized private schools / Institutions.

And

3. Age - below fifty five years

Duration : Four Semesters (Two years)
Medium : English
Selection Criteria : English Language Proficiency Test and Interview
Course Fee : Rs. 85,000.00

**Closing date for Applications : 10th March 2017**

**Application Procedure :**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna ( T.P: 021 222 3608) either in person or by post, on a payment of Rs.500/- per application form on production of receipt in support of the payment to the University Account number 162 - 1001 - 8 - 0000902 at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs.500/= per application form drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope (23x10 cm in size) to the value of Rs.40/-

Application forms and other details will also be available in the Faculty web site www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs.500/- drawn in favour of the Bursar, University of Jaffna or the receipt in support of the payment to the University Account number 162 - 1001 - 8 - 0000902 at the people's Bank.

Duly completed applications should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies and University of Jaffna on or before the closing date of application.

Name of the course should be written on the top left hand corner of the envelope.

Illegible, incompleted and late applications will be rejected without intimation.

**Note: The Candidates those who applied for this course earlier and sat the selection examination on 28.12.2016**

**Registrar** **17.02.2017**

# நடப்பு ஐ.பி.எல். தொடரில் எந்த அணியில் எவர்கள்?




நடப்பு வருட ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எந்த அணியில் எவர் இடம்பெற்றுள்ளனர் என்ற முழு விவரம்.

டெல்லி ஒட்டுமொத்தமாக 9 வீரர்களை ஏலம் எடுத்தது. ரபாடா (ரூ.5 கோடி), கும்மின்ஸ் (ரூ.4.5 கோடி), மத்தியூஸ் (ரூ.2 கோடி), அண்டர்சன் (ரூ.1கோடி), முருகன் அஸ்வின் (ரூ.1 கோடி), ஆதித்யா தாரே (ரூ.25 லட்சம்), அங்கீத் பாவ்னி, நவ்தீப் சைனி, சசாங்க் சிங் (தலா ரூ.10 லட்சம்).

குஜராத் லயன்ஸ் ஒட்டுமொத்தமாக 11 வீரர் களை ஏலம் எடுத்தது. ஜேசன் றோய் (ரூ.1கோடி), பாசில் தாம்பி (ரூ.85 லட்சம்), மன்பிரித் கோனி (ரூ.60 லட்சம்), நது சிங் (ரூ.50 லட்சம்), முனாப் பட்டேல் (ரூ.30 லட்சம்), ஆகாஸ்தீப் நாத், சுபர் அகர்வால், தேஜாஸ் சிங் பரோகா, சிராக் சூரி, செல்லே சவுர்யா, பிரதாம் சிங், செல்லி சவுர்யா (தலா ரூ.10 லட்சம்).

**SLAS**
பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்கு தொடர்
**வவுனியாவில்**
*யாழ்ப்பாண கல்லூரிபட்டப்படிப்பு வல்லாளர்களினால்
*27.02.2017 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொண்டு நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
BCS International (Pvt) Ltd Vavuniya.
024 222 2313, 077 111 0807

கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஒட்டு மொத்தமாக 8 வீரர்களை ஏலம் எடுத்தது. நடராஜன் (ரூ.3 கோடி), வருண் ஆரோன் (ரூ.2.80 கோடி), மோர்கன் (ரூ.2 கோடி), ஹென்றி (ரூ.50 லட்சம்), மார்ட்டின் கப்தில் (ரூ.50 லட்சம்), டேரன் சமி (ரூ.30 லட்சம்), ராகுல் டிவாட்டியா (ரூ.25 லட்சம்), ரங்கு சிங் (ரூ.10 லட்சம்).

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஒட்டுமொத்தமாக 9 வீரர்களை ஏலம் எடுத்தது. டிரென் போல்ட் (ரூ.5 கோடி), கிறிஸ் வோக்ஸ் (ரூ.4.20 கோடி), நாதன் கட்டர் (ரூ.3.50 கோடி), ரிசி தவன் (ரூ.55 லட்சம்), டேரன் பிராவோ (ரூ.50 லட்சம்), ரோவ்மன் பொவல் (ரூ.30 லட்சம்), சயன் கோஸ், சஞ்ஜெய் யாதவ், இசாங்க் ஜக்கி (தலா ரூ.10 லட்சம்).

மும்பை இந்தியன்ஸ் 7 வீர்களை ஏலத்தில் எடுத்தது. கரண் சர்மா (ரூ.3.20 கோடி), கிருஸ்ணப்பா கவுதம் (ரூ.2 கோடி), மிச்செல் ஜோன்சன் (ரூ.2 கோடி), அசேல குணரத்னே (ரூ.30 லட்சம்), சவுரப் திவாரி (ரூ.30 லட்சம்), நிக்கோலஸ் பூரன் (ரூ.30 லட்சம்), குல்வந்த் கேஜ்ரோலியா (ரூ.10 லட்சம்),

ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ட்ஸ் 9 வீரர்களை ஏலத்தில் எடுத்தது. பென் ஸ்ரோக்ஸ் (ரூ.14.50 கோடி), டேன் கிறிஸ்ரியன் (ரூ.1 கோடி), மனோஜ் திவாரி (ரூ.50 லட்சம்), பெர்குசன் (ரூ.50 லட்சம்), ஜெயதேவ் உனத்கட் (ரூ.30 லட்சம்), ராகுல் சாகர், சவுரப் குமார், மிலிந்த் தாண்டன், ராகுல் அஜெய் திரிபாதி (தலா ரூ.10 லட்சம்).

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் 5 வீரர்களை ஏலம் எடுத்தது. டைமால் மில்ஸ் (ரூ.12 கோடி), அனிகெட் சவுத்ரி (ரூ.2 கோடி), பவென் நெகி (ரூ.1 கோடி), பில்லி ஸ்டான்லேக் (ரூ.30 லட்சம்), பிரவீன் டூபே (ரூ.10 லட்சம்).

சன் ரைசர்ஸ் ஹைதரபாத் ஒட்டுமொத்தமாக 8 வீரர்களை ஏலத்தில் எடுத்தது. ரசிட் கான் அர்மான் (ரூ.4 கோடி), முகமது சிராஜ் (ரூ.2.60 கோடி), எக்லாவ்ய திவேதி (ரூ.75 லட்சம்), கிறிஸ் ஜோர்டான் (ரூ.50 லட்சம்), முகமது நபி (ரூ.30 லட்சம்), பென் லாஹ்லின் (ரூ.30 லட்சம்), பிரவீன் தாம்பே, தன்மே அகர்வால் (தலா ரூ.10 லட்சம்). (ம)

**மரண அறிவித்தல்**

**தில்லைநாயகி வாசுதேவன்**



6ஆம் வட்டாரம் மண்டதீவைப் பிறப்பிடமாகவும் 8/2 ஈஞ்சியடி வைரவர் கோவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தில்லை நாயகி வாசுதேவன் நேற்று (21.02.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் சிவஜீவன், உதயசீலன், மதிஜீவன், விஸ்வஜீவன், வசந்தாதேவி, சுதாமதி தேவி, கல்பணாதேவி, குணாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.02.2017) புதன்கிழமை பி.ப. 2 மணி அளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077-9939385
077-0600466
077-7299261

**தகவல்**
**குடும்பத்தினர்**

**மரண அறிவித்தல்**

**நல்லதம்பி தியாகராசா**
**(இரத்தினம்)**



தோற்றம் 14.03.1950 மறைவு 18.02.2017

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தியாகராசா 18.02.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் இராசமணி தம்பதியரின் அன்புமகனும் சுலோசனா தேவியின் அன்புக்கணவரும் விமலேந்திரா, நிரஞ்சனா, தவநீசன், நிதர்சனா, பகிர்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும் கஜீவன், கோகுலவர்மன் ,எஸ்தர், ஜெயராஜினி ஆகியோரின்அன்பு மாமனாரும் சர்வானந்த், விஷ்வா, டிவ்யன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2017) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**54, பூமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**

# களமிறங்கார் டிக்வெல்ல

இலங்கை, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் இன்று நடைபெறவுள்ள மூன்றாவதும் இறுதியானதுமான ரி-20 ஆட்டத்தில் இலங்கை அணி வீரர் டிக்வெல்ல களமிறங்க மாட்டார்.

கடந்த ஆட்டத்தில் பல்க்நெர் வீசிய பந்து டிக்வெல்லவின் தோள்பட்டையில் பட்டுச் சென் றது. நடுவர் அதை ஆட்டமிழப்பு என்று அறி வித்தார். நடுவரின் முடிவை ஏற்க மறுத்து எதிர்ப்பை வெளிப்படுத்தினார் டிக்வெல்ல. பன்னாட்டு கிரிக்கெட் சபையின் விதிகளுக்கு புறம்பான நடவடிக்கை என்றே இது கருதப் படும். இதனால் அவருக்கு குறித்த ஆட்டத் துக்கான கட்டணத்தில் 30 சதவீதம் அபராத மாக விதிக்கப்பட்டது. முன்னதாக முடி வடைந்த தென்னா பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொட ரில் டிக் வெல்ல, ரபா டாவுடன் மோதல் போக்கைக் கடைப் பிடித்து எச்சரிக்கை பெற்றிருந்தார். மீண்டும் அவர் அவ்வாறான ஓர் செயற்பாட்டை வெளிப்படுத்தியமையால் 2 ஆட்டங்களுக்கு தடையும் விதிக்கப்பட்டார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org